
Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

விலை: 12.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்—14 வெள்ளி—17 04-10 யூலை 2003

யூலை – 05




நெருப்பு மனிதர்கள்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 04.07.2003

## பாதுகாவலர்களே குற்றவாளிகள்

**பிந்துனுவெவ** புனர்வாழ்வு முகாமில் இருபத்தேழு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஐந்து குற்றவாளிகளுக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சிறிலங்காவில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக இதற்கு முன்பும் கொலையாளிகளிற்கு மரணதண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பல்வேறு தடவைகள் தமிழ்மக்கள் திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவற்றில் சில படுகொலைகள் மாத்திரமே நீதிமன்று வரை சென்று தீர்ப்பு நிலையை எட்டியுள்ளன.

அவற்றில் தீர்ப்பு வழங்கப்படாது பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் கூட வெளியில் வராமல் மூடிமறைக்கப்பட்ட சம்பவங்கள் தான் அதிகம்.

அதிலும் சட்டத்தை பாதுகாக்க வேண்டியபொலிசாரே கொலைக் குற்றவாளிகளாக மரணதண்டனையை பெற்றிருப்பதிலிருந்தே சிறிலங்காவின் பொலிஸ் துறையின் நேர்மையும் நம்பிக்கையும் வெளிப்பட்டு நிற்கிறது.

அதிலும் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பிந்துனுவெவ படுகொலைக்கு பொலிசாரே முழுப்பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்ததிலிருந்து இந்தப் படுகொலையின் பின்னணியில் பொலிசாரின் பங்கு எவ்வளவிற்கு இருந்துள்ளது எனத் தெரிந்து கொள்ளலாம்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் எல்லோருமே குற்றவாளிகள் அல்லர்.

இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த பலர் சந்தேகத்தின் பெயரில் குற்றவாளிகளாக வைக்கப்பட்டிருந்தவர்கள்.

ஒரு சனநாயக நாட்டில் எவருமே குற்றம் நிரூபிக்கப்படும்வரை நிரபராதிகள் தான். அவ்வாறு குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்த நிரபராதிகளில் பலர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது தான் உண்மை

நிரபராதிகளை குற்றவாளிகளாக கூறித்தடுத்து வைத்து, தடுத்துவைக்கப்பட்டவர்களிற்கான பாதுகாப்பை வழங்க வேண்டியவர்களே படுகொலையொன்றிற்கு தூண்டியதோடு அந்தப் படுகொலையோடும் சம்பந்தப்பட்டிருப்பதிலிருந்து பெரும்பான்மை சிங்களவர்களைக் கொண்ட சிறிலங்காவில் தமிழர்களிற்கான பாதுகாப்பு எத்தகையது என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

எனவே பிந்துனுவெவ தடுப்பு முகாமில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் விடயத்தில் தனித்து பொலிசார் மீது மட்டும் குற்றம் சாட்டுவதன் மூலம் அரச தரப்பு தப்பித்துக் கொள்ளமுடியாது.

ஏனெனில் தார்மீக அடிப்படையில் நாட்டின் ஒவ்வொரு பிரசையின் பாதுகாப்பிற்கும் பதிலளிக்கவேண்டியது அரசே ஆகும்.


ஆனால் சிறிலங்காவில் தமிழ் மக்கள் மீது படுகொலை ஒன்றிற்கு இராணுவத்தையும், பொலிசாரையும், காடையர்களையும் ஏவிவிட்ட பெருமை சிறிலங்காவின் ஆட்சிபீடத்திலிருந்த அரசுகளையே சாரும்.

இவ்வாறான படுகொலைகள் மூலம் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களை காடையர்களோடு இணைத்து படுகொலை செய்யத் தூண்டியதன் மூலம் பாதுகாப்பு மற்றும் பொலிஸ்துறையை ஒரு காடையர் கும்பலாகவே மாற்றி வைத்துள்ளனர்.

ஆனால் உண்மையில் இவர்களின் அடிப்படை நோக்கம் ஒரு இன அழிப்பு நடவடிக்கை என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது. இப் படுகொலைச் சம்பவங்கள் தற்செயலாக நடந்த சம்பவங்கள் அல்ல என்பதிலிருந்தும் அவை திட்டமிட்ட வகையில் நன்கு முன் தயாரிப்புகளை மேற்கொண்டதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

அத்தோடு இந்த குற்றவாளிகளிற்கு தண்டனை வழக்கப்பட்டிருக்கின்ற போதும் அவர்கள் இன்னும் தப்பக்கூடிய ஏது நிலைகள் இருப்பதையே காட்டுகிறது.

ஏனென்றால் சிறிலங்காவில் இவ்வாறு குற்றவாளிகள் தப்பியிருப்பது பல தடவைகள் நடந்துள்ளன.




## தூரனின் பார்வை

# சுற்றிவளைப்புச்சமாதானமும் முற்றுகைக்குள்ளாகும் அமைதியும்

**ஒப்பீட்டளவில் - விகிதாசார அடிப்படையில் கூட சிங்கள தேசத்தில் நடக்கும் குற்றச் செயல்களின் தொகையுடன் ஒப்பிடுகையில் தமிழ்ப்பகுதிகளில் நடைபெறும் குற்றச்செயல்கள் மிகமிக சொற்பமேயாகும்.**

**சமாதானம்** சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. தமிழ் மக்கள் மீண்டும் அடிக்கடி முற்றுகைக்குள்ளாக்கப்பட்டு, சந்தேகப் பிராணிகளாக நோக்கப்பட்டு கைதுகளுக்குள்ளாகும் சூழல் அதிகபட்ச அச்சுறுத்தல்களுடன் உருவாகத் தொடங்கியுள்ளது.

சிறிலங்காவின் தலைநகர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், தமிழர் தாயகப்பகுதிகளிலும் மீண்டும் ஆயுதப் படையினரின் அதிகார அடக்குமுறைக்கெடுபிடிகள் சமாதானத்திற்கு முந்திய நிலையை மீண்டும் அச்சத்துடன் எதிர்கொள்ள வேண்டியகாலத்தின் அசுர வருகைக்கு கட்டியம் கூற ஆரம்பித்துள்ளன.

திடீர் திடீரென புதிதாகத் தோன்றும் சோதனைச் சாவடிகளும், சோதனை நடவடிக்கைகளும், அச்சறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான 'பீல்ட்பைக் ' குழுவினரின் அதிரடிப் பிரவேசங்களும், புரிந்துணர்வு உடன்பாட்டின் எந்த 'விதி'யின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது என்பது புதிரான விடயமாகவேஉள்ளது.

குற்றச்செயல்களைக்கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சிறுபான்மையினர் இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் உள்துறை அமைச்சர் கூறினாலும், பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் ஆயுதப் படையினரின் அனைத்துச்செயற்பாடுகளும் சிறுபான்மை இனத்தவரை, அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்களை, பீதிகொள்ள வைத்து, உளவியல் ரீதியல் மோசமான பாதிப்புகளை உண்டு பண்ணும் சித்திரவதை நடவடிக்கைகளேயாகும்.

இதனைத் தற்காலிக நடவடிக்கை எனவும், குறிப்பிட்ட காலத்திற்கே இவைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அதே அமைச்சர் கூறுவதும் அபத்தமான கருத்தேயாகும். உண்மையில் நன்கு திட்டமிட்டு, புற சக்திகளின் ஆலோசனைகளுடன் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிராக பெருமளவில் காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்துவிட்ட சிறிலங்கா அரசுகளின் போலித்தனமான நியாயப்படுத்தல்களே இவையாகும்.

காலம் காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக இன வன்முறைகள் கட்டவிழ்த்து விட்ட சிங்கள பேரினவாத- அரசியல் மற்றும் மத சக்திகளுக்கு எதிராக எந்தச் சுற்றி வளைப்பு சோதனை நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு மேற்கொண்டு, இனக்கலவரங்களின் மூலசக்திகள்என இனங்காணப்பட்டு பகிரங்கமாகவே அடையாளப்படுத்தப்பட்ட எத்தனை அரசியல் தலைமைகளை மத அமைப்புகளின் பிரமுகர்களை, கைது செய்து,விசாரித்து, சிறையிலடைத்து தண்டனை கொடுத்தது?

இதற்கு எந்தப்பேரினவாத அரசுத் தலைவர்களாலும் பதில் கூறவேமுடியாது.

இந்த தமிழன விரோத கலாச்சாரத்தை உருவாக்கி பேணி வளர்த்து, இனமுரண்பாட்டுவெறியிலேயே அரசியல் குளிர்காய்ந்தவர்கள் இவர்களேதான். அதனால்தான் அவர்களால் பதில் கூற முடியாது.

அரசியல் அயோக்கியத்தனத்தின் பங்காளிகளால், அதனை நியாயப்படுத்தவே முடியும். அடக்கமுடியாது. இதுவே சிறிலங்காவின் இரத்தக்கறை படிந்த வரலாற்று அத்தியாயங்கள் வெளிப்படுத்தும் உண்மையாகும்.

துப்பாக்கியையும், ஒலிவ் இலையையும் ஏககாலத்தில் உயரப்பிடித்தபடி புன்னகைக்கும் சிங்களத் தலைமைகளின் உண்மைச் சொரூபங்களின் இரத்தக் காட்டேறித் (Dracula) தன்மையை அத்தலைமைகளே *1958, 1960, 1977, 1983*, மற்றும் அதற்குப் பின்னரான யுத்தகாலப்பகுதிகளில் மிகத் தெட்டத்தெளிவாக பகிரங்கமாகவே உணர்த்தியுள்ளார்கள்.

இந்த உண்மையை, சிறிலங்கா இனப்பிரச்சினையின் பின்னால் இயங்கும் கொடூரக் கரங்களுக்குரியயோரை, அதே போன்ற குணாம்சம்கொண்டவர்கள் மட்டுமே நம்புவார்கள், அங்கீகரிப்பார்கள், தட்டிக் கொடுப்பார்கள், உதவுவார்கள்.

இதனையும் தமிழ் மக்கள் நன்கு அனுபவரீதியாக உணர்ந்தேஉள்ளார்கள்.

இதனால் சமாதானத்தை சதி நோக்கோடு தான் சிங்களத்தலைமைகள் அணுகுவார்கள் என்ற வரலாற்று உணர்த் தலை தமிழ்மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டவர்காக உள்ளனர்.

அவர்கள் 'தீ' யில் மட்டு மல்லாது தீயோரின் தீமைகளிலும் மூழ்கி எழுந்து தீச்சுவாலையையே தீய்த்தவர்கள். இதனை அரசும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளல் வேண்டும்.

இந்த ஓராண்டுக்கும் அதிகமான சமாதானகாலம் பாதுகாப்புக்குறித்த அச்சத்துடன் கழிந்த காலமாகவே தமிழ் மக்களால் உணரப்பட்டுள்ளது.

உடன்பாட்டின் விதிமுறைகளை ஒப்பந்த கோப்புகளுள் கட்டிவைத்து விட்டு அதனை அமுல் செய்யாமலே காலம் கடத்தும் 'ஏமாற்று யுத்தி'சிங்களத் தலைமைகளின் அரசியல் பாரம்பரியம் என்பதும் அவர்கள் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்வார்கள், அதைப்பற்றிப் பேசுவார்கள். ஆனால் தீர்வு எதனையும் எட்டவோ, எட்டினாலும் அவற்றை நடை முறைப்படுத்த - அமுல்செய்யவோ முன்வரமாட்டார்கள் என்பதும் மிகவும் உறுதியான விடயமே ஆகும்.

இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தையின் இடைநிறுத்தல் நிலைக்கும் இந்த 'அமுல்' படுத்தல் பிரச்சினையே மூல காரணமாகும்.

தமிழ்மக்களுக்கான உரிமைகள் என்ற விடயத்தில் மட்டும் 'நான் கொடுக்க முனைந்தால் நீ அதனை கடுமையாக எதிர்த்துநில். நீ கொடுக்க முன்வந்தால் நான் அதனை மூர்க்கமாக எதிர்க்கிறேன், என்ற உடன்பாட்டிலேயே சிங்கள ஆளும்-எதிர்க்கட்சிகளின் அரசியல் நகர்வுகள் காலம் காலமாக அவர்களுக்குள்ளேயான புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளன.

இன்றைய பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பெயரிலான செயற்பாடுகளும் இந்த நகர்வின் ஓர் அணுகு முறையேயாகும்.

ஒப்பீட்டளவில் - விகிதாசார அடிப்படையில் கூட சிங்களதேசத்தில் நடக்கும் குற்றச் செயல்களின் தொகையுடன் ஒப்பிடுகையில் தமிழ்ப்பகுதிகளில் நடைபெறும் குற்றச் செயல்கள் மிகமிக சொற்பமேயாகும்.

ஆனால் சிங்களப் பகுதிகளில் நடைபெறும் குழுச்சண்டைகள், அரசியல்கட்சி மோதல்கள், படுகொலைகள், பாலியல் வல்லுறவுக் கொடுமைகள், பாதாள உலகக்கும்பல்களின் வேதாள நடவடிக்கைகள் அனைத்திலுமே ஏதோ ஒருவகையில் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், மதபீடங்களைச் சேர்ந்தவர்கள், உயர்அதிகாரிகள், அரசியல்வாதிகளின் குடும்பத்தவர்கள், வாரிசுகள், இராணுவம் உட்பட முப்படை - பொலிஸ் ஆகியவற்றிலிருந்து தப்பியோடியவர்கள் - என மிகமிக முக்கிய பிரமுகர்

(19ம்பக்கம் பார்க்க..)

# சமாதானத்துக்கான புதிய நிகழ்ச்சி நிரல்

நிலாந்தன்

மீண்டும் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு புலிகள் ஒரு புதிய நிகழ்ச்சி நிரலைக் கேட்டிருக்கிறார்கள்.

இது எதைக் காட்டுகிறது?

கடந்த 18 மாதகாலமாக இருந்துவரும் சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரலின் பெறுபேறுகளைக் குறித்து புலிகள் சந்தேகமும் அதிருப்தியும் அடைந்திருப்பதைத்தானே?

கடந்த 18 மாதகாலமாக பிரயோகத்தில் இருந்துவரும் நிகழ்ச்சிநிரல், சமாதானத்துக்கானது என்பதைவிடவும் யுத்தத்தை ஒத்திவைப்பதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலாகவே யதார்த்தத்தில் காணப்பட்டது.

வெவ்வேறு இலக்குகளையுடைய இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசையில் அடிக்கடி சந்திக்கவைக்கும் நோக்கத்துடன் நோர்வீஜிய அனுசரணையாளர்கள் ஓரளவுக்கு விஞ்ஞான பூர்வமாக செயற்பட்டார்கள் என்றபோதிலும் கூட, யதார்த்தத்தில் அந்த நிகழ்ச்சி நிரல் விசுவாசமான ஒரு சமாதானத்துக்குரியதாய் இருக்கவில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது, கடன்வாங்குவதற்கான ஒரு நிகழ்ச்சிநிரல். அதாவது ரோக்கியோ மாநாடு வரைக்கும் புலிகளை இழுத்திழுத்துக் கொண்டுவந்து விடுவது. இதில் சில விட்டுக் கொடுப்புகளை அவ்வப்போது செய்வது. ரோக்கியோ மாநாட்டில் வைத்து புலிகளை சர்வதேச சமூகத்துக்கு பொறுப்புக் கூறும் ஒரு நிலைக்குத் தள்ளிவிடுவதன் மூலம் யுத்தத்தை மேலும் பல ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பது.

இதுதான் அயர்லாந்தில் நடந்தது. இதுதான் பலஸ்தீனத்தில் இப்பொழுது அமெரிக்கா செய்ய முயல்வதும்.

கடந்த ஆண்டு பேச்சுக்கள் ஆரம்பமாகிய சிறிது காலத்தில் ரணில் திரும்பத் திரும்ப ஒரு விசயத்தைக் கூறத் தொடங்கினார். அதாவது பேச்சுக்கள் இந்த ஆண்டின் நடுக்கூறோடு திரும்பிச்செல்லவியலாத ஒரு வளர்ச்சிக்குப் போய்விடும் என்று.


இந்த ஆண்டின் நடுக்கூறு என்று அவர் கருதியது ரோக்கியோ மாநாட்டைத்தான். இந்த இலக்கைநோக்கியே அவர் எல்லாவற்றையும் நகர்த்தி வந்தார். இந்த இலக்குவரை புலிகளைத் தாக்காட்டி யுத்தத்தை எப்படியாவது ஒத்திவைத்து விடுவதே கடந்த 18 மாதகாலமாக சமாதானத்துக்கான அவர்களுடைய நிகழ்ச்சி நிரலாய் இருந்து வந்தது.

தாய்லாந்தில் முதற்கட்டப் பேச்சுக்கள் தொடங்கியபோது இடைக்கால நிர்வாக சபை நிகழ்ச்சி நிரலில் முதலில் வரும் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை. அதற்கான உரிய விளக்கங்களும் பகிரங்கமாகக் கூறப்படவில்லை. ஆனால் இப்பொழுது எல்லாமுமே இடைக்கால நிர்வாக ஏற்பாட்டில் வந்து தொங்கி நிற்கிறது என்பதற்கு என்ன அர்த்தம்?

அவ்வாறாயின் அந்த நிகழ்ச்சிநிரலில் முதலில் வந்திருக்க வேண்டிய இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை தொடக்கத்தில் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்த புலிகள், இப்பொழுது அப்படி விட்டுக் கொடுக்க மறுப்பதற்கு காரணம் என்ன?

காரணம் இதுதான் - ஆரம்பத்தில் காணப்பட்ட நல்லெண்ணமும் விட்டுக் கொடுத்துப் பேரம் பேசும் மனோநிலையும் படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்து வொஷிங்டன் மாநாட்டோடு புலிகள் தாங்கள் ஓரங்கட்டப்பட்டு விட்டதாக முடிவெடுக்கும் ஒரு நிலை தோன்றிவிட்டது.

இனி பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பினால் தான் ஒரு புதிய நிகழ்ச்சி நிரலுக்குப் போகமுடியும். அப்படியொரு நிகழ்ச்சி நிரல் பயன் பொருத்தமானதாய் அமைய வேண்டுமானால் முன்னைய நிகழ்ச்சி நிரல் எங்கே பிசகியது என்று முதலில் கேட்கவேண்டும்.




முன்னைய நிகழ்ச்சி நிரல் ரோக்கியோவில் உதவி பெறும் வரை முதற்கட்டமாக யுத்தத்தை ஒத்திவைப்பதே நோக்கமாகக் கொண்டிருந்தது.

புலிகளைப் பொறுத்தவரை சர்வதேச அளவில் அவர்களுடைய மதிப்பை உயர்த்துவது ஒரு முக்கிய இலக்காய் இருந்தது. ஆனால் இப்பத்தியில் முன்பு பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்று கடந்த 18 மாதகால சமாதான முயற்சிகளின் பேறாய் எந்தவொரு நாடும் புலிகளின் மீதான தடையை விலக்கியிருக்கவில்லை.

இந்நிலையில் நிச்சயமற்ற ஒரு இலக்கை நோக்கி யுத்தத்தை ஒத்திவைப்பது என்பது கடந்த ஆண்டு ரணிலுக்கு முந்நாள் அமெரிக்க சனாதிபதி கிளின்ரன் கூறியதுபோல, இயல்புவாழ்வினுள் போராட்டத்தை கரைத்துவிடுவது என்பது தானா? என்று சந்தேகிக்கும் ஒரு நிலை தோன்றியது.





எனவே இனியொரு புதிய நிகழ்சிநிரலை வரைவதாயிருந்தால் - அதாவது ரோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட காசை கைக்கெடுப்பதற்கு மட்டுமான ஒரு நிகழ்ச்சி நிரலாயிராது, மெய்யாகவே சமாதானத்துக்கு விசுவாசமான ஒரு நிகழ்ச்சிநிரலாக அது அமைவதாயிருந்தால், பின்வரும் விவகாரங்கள் அதில் உள்ளடக்கப்படவேண்டும்.

முதலாவது, புலிகளின் சம அந்தஸ்தைப் பாதிக்கும் எந்தவொரு நகர்வுக்கும் அரசாங்கம் உடந்தையாக இருக்கக்கூடாது என்பது.

இரண்டாவது, புரிந்துணர்வு உடன்படிக்கையை அதன் அடுத்த கட்டத்துக்குப் பலப்படுத்துவது.

மூன்றாவது, அரசியலமைப்பின் கைதிகளாய் இருப்பதிலிருந்து விடுபடுவது. இதற்காக சந்திரிகாவுடன் ரணில் ஒரு புரிந்துணர்வுக்கு வருவது.

இதில் முதலாவது, சமாதானம் செய்யும் மேற்கு நாடுகளால் செய்யப்படவேண்டியது. குறிப்பாக, அமெரிக்கா புலிகளின் மீதான தடையை மறுபரிசீலனை செய்யும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் புலிகளைத் தனிமைப்படுத்துவதா அல்லது, அவர்களை அங்கீகரிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு பொறுப்புக் கூறவல்லவர்களாக அவர்களை மாற்றுவதா? என்று அமெரிக்கா எடுக்கப்போகும் முடிவையே அனேகமாக ஏனைய எல்லா மேற்கு நாடுகளும் பின்பற்றும் என்று நம்பலாம்.

இரண்டாவது, புரிந்துணர்வு உடன்படிக்கையைப்பலப்படுத்துவது. இதுவரையிலுமான ஈழப்போரின் சமாதான முயற்சிகளில் அனேகமானவை முறிக்கப்பட்டது கடலில்தான். இம்முறையும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கடல்பற்றிய இடங்களில் தெளிவின்மைகளும் மௌனங்களும் காணப்படுகின்றன. இதில் சில திட்டவட்டமான முடிவுகளை எடுத்து கண்காணிப்புக்குழுவை பலப்படுத்தினால்தான் யுத்தநிறுத்தத்தை கடலுக்கும் நீட்டலாம்.

நடைமுறையில் யுத்த நிறுத்தம் தரைக்கு மட்டுமே. கடலில் ஒரு படை நடவடிக்கை "வருண கிரண" என்ற பெயரில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. வங்கக் கடல் வளியூடாகவரும் புலிகளின் கப்பல்களைத் தடுக்கும் விதத்தில் ஒரு வேலியைப் போடுவதே இந்தப் படைநடவடிக்கையின் நோக்கம். இதில் இந்தியாவும் சம்பந்தப்படுவதால் இது பிராந்திய மட்டத்திலான ஒரு கூட்டுப்படை நடவடிக்கையாக மாறியிருக்கிறது. இதற்கொரு முடிவுகட்டப்பட வேண்டும். அதற்குப் புரிந்துணர்வு உடன்படிக்கை மறுசீரமைக்கப்படுவதோடு கண்காணிப்புக் குழுவின் பலம் அதிகரிக்கப்பட வேண்டும்.

பிரயோக அர்த்தத்தில், யுத்தநிறுத்தம் வரவர சக்தியற்றதாகிக் கொண்டு வருகிறது.

கொழும்பில், பிஸ்ரல் குழுவைத் தேடி ஒரு புலனாய்வுப் போர் ஏற்கனவே தொடங்கிவிட்டது. படையினரின் பிடியில் உள்ள தமிழ்ப்பகுதிகளில் நிகழும் கொலை,கைது, சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அங்கெல்லாம் ஒரு குறைஅடர்த்தி யுத்தம் - Low Intensive Warfare - எப்பொழுதோ தொடங்கிவிட்டது. எனவே புரிந்துணர்வு உடன்படிக்கை வரவர கலாவதியாகிக் கொண்டிருக்கிறது என்பதே யதார்த்தம்.

மூன்றாவதாக, நாடு ஒரு நெகிழாத அரசியலமைப்பின் கைதியாகக் காணப்படுவது என்பது.

பதவிக்கு வந்த புதிதில் ரணில் கூறினார்; அரசியலில் புதிய சிந்தனைகள் வேண்டும் என்று. ஆனால் கடந்த 18 மாதகால சமாதான முயற்சிகளின் போது அப்படியேதும் புதிய சிந்தனைகள் அவரிடம் இருப்பதாக அவர் நிருபிக்கத்தவறிவிட்டார்.

யாப்புக்கு வெளியே வராத இடைக்கால நிர்வாக ஏற்பாடு எதுவும், யுத்தத்தை ஒத்திவைக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலுக்குரியதுதான். யுத்தத்திலிருந்து ஒரு சிவில் சமூகத்தை நோக்கி செல்வதற்குரிய இடைமாறுகாலகட்டத்துக்குரிய ஒரு ஊடகமாகத் தொழிற்படும் சக்தி நிச்சயமாக அரசியல் யாப்புக்கு உட்பட்ட இடைக்கால நிர்வாக ஏற்பாட்டுக்கு இருக்கப் போவதில்லை.

இது விசயத்தில் சமாதானத்துக்கான ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ், ரணில் சந்திரிகாவுடன் ஒரு புரிந்துணர்வுக்கு வருவது அவசியம்.

எனவே இந்த விவகாரங்களையெல்லாம் கவனத்தில் எடுக்காத எந்த ஒரு புதிய நிகழ்ச்சி நிரலும் பிறகும் எங்காவது ஒரு இடத்தில் வந்து இறுகி நின்றுவிடும்.

முதலில் எல்லாரும் ஒன்றை ஒப்புக்கொள்ளவேண்டும். ஈழப்போர் பல விசயங்களிலும் நூதனமானது. பெரும்பாலான மேற்கத்தேய ஆய்வாளர்கள் ஐரிஸ்ப் பிரச்சினையில் எட்டப்பட்ட உடன்படிக்கை பற்றியும் தென்னாபிரிக்காவில் பெறப்பட்ட தீர்வைப் பற்றியும் அடிக்கடி கதைத்து வருகிறார்கள்.

ஆனால் அயர்லாந்தில் போராளிகள் ஒரு பலமான படைக் கட்டமைப்பு எதையும் வைத்திருக்கவில்லை. அதோடு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக ஒரு விடுதலைப் பிரதேசம் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. தென்னாபிரிக்காவிலும் இப்படித்தான். அங்கெல்லாம் யுத்தம் குறை அடர்த்தி யுத்தமாகவே - Low Intensive Warfare - இருந்தது. ஆனால் ஈழப்போர் ஒரு அரைநிறை அடர்த்தி யுத்தமாகும். Semi High Intensive Warfare

கெடுபிடிப் போருக்குப் பிந்திய உலகில், இதுவரையிலும் நிகழ்ந்த அனேகமான எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும் அரை நிறை அடர்த்தி யுத்தத்திலிருந்து சமாதானத்துக்குப்போன போராட்டங்கள் என்று எதுவுமே இல்லை.

பெரும்பாலும் குறை அடர்த்தி யுத்தங்களைத்தான் இலகுவாக சமாதானத்துக்கு அல்லது ஏதாவதொரு தீர்வுக்கு கொண்டுவர முடிந்திருக்கிறது. நிறை அடர்த்தி அல்லது அரைநிறை அடர்த்தி யுத்தங்களுக்கு, யுத்தங்களே தீர்வாக முடிந்திருக்கின்றன.

*"சமாதானத்துக்கான அமெரிக்க ஸ்தாபனம்"* என்ற ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த ஜோன் டார்பை என்பவர் செய்த ஆய்வு முடிவுகளின் படி 1989 திற்கும் 1999 திற்கும் இடைப்பட்ட ஒரு தசாப்த காலத்துள் உலகில் செய்யப்பட்ட முப்பத்தியெட்டு சமாதான முயற்சிகளில் முப்பத்தியொன்று மூன்று ஆண்டுகளுக்குள் சண்டைக்குத் திரும்பி விட்டன.

எனவே ஈழப்போரில் சமாதானம் செய்வது என்பது உலகில் இதுவரை செய்யப்படாத ஏதாவது ஒன்றைச் செய்தால் தவிர சாதிக்கப் படமுடியாத ஒன்று தான்.


யாரும் இதுவரை செய்திராத தியாகங்களை தமிழர்கள் செய்திருக்கிறார்கள். யாரும் இதுவரை செய்திராத தீரச் செயல்களையும் அவர்கள் செய்திருக்கிறார்கள். உலகில் யாரும் இதுவரை பார்த்திராத யுத்தக் காட்சிகள் இங்கேயுண்டு. யாரும் இதுவரை கேட்டிராத கதைகளை தமிழர்களால் சொல்லமுடியும்.

இந்நிலையில், யாரும் இதுவரை செய்திராத எதையாவது செய்தால் மட்டும் தான் ஈழப்போரில் யாரும் இதுவரை சாதித்திராத ஒரு சமாதானத்தை ஸ்தாபிக்க முடியும். ●

சொல்வன்மை பேச்சாளரை மட்டும் பொறுத்ததல்ல, அவையினரையும் பொறுத்தது. - வில்லியம் பிட்

# நறுக்கென...

## விமானத் தாக்குதலுக்கு அஞ்சி பாதுகாப்புத்தேடும் மொறகொட



சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவும், பொருளாதார ஆலோசகரும், அமைச்சருமான மிலிந்த மொறகொடவின் வீட்டுக் கூரையில் விமான எதிர்ப்புப்பீரங்கி பொருத்தப்பட்டுள்ளதை அவரின் தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.....

சமாதான நடவடிக்கை களின் தீவிரமான செயற்பாட்டாளராக பறந்து திரிந்து நாடு நாடாக அலைந்து கொண்டிருக்கும் (மன்னிக்கவும் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கும்) மிலிந்த மொறகொடவுக்கு, அவரது வீட்டுக்கூரையில் விமான எதிர்ப்புப் பீரங்கியை ஏன் பொருத்தவேண்டும் என்பது புரியாத புதிராக உள்ளது.

பெரும்பாலும் விமானத்திலேயே தனது நாட்களை பறந்தபடியே கழிக்கும் மொற கொடவுக்கு தனது பாதுகாப்புக் குறித்து அதுவும் விமானத்தாக்குதல் குறித்து அச்சம் ஏற்படக் காரணம்தான் என்ன?

முன்னர் இதேபோன்றதோர் பாதுகாப்பு ஏற்பாட்டை சிறிலங்காவின் சனாதிபதியின் வாசஸ்தலத்தில் மேற்கொண்ட போது இதே ஐக்கிய தேசியக் கட்சியினர் கேலி செய்த நிகழ்வுகள் இப்போது நினைவுக்கு வரவேசெய்கின்றது.

எவ்வாறானாலும் ஏனைய பல அமைச்சர்களின் பாதுகாப்பை விடவும் மொறகொடவின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்குவதன் காரணம் தான் என்ன?

அமெரிக்க ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு இது என்கிறார் இடது சாரித்தோழர் ஒருவர்.

தனது விலாசத்தை. அரசில் தனது முக்கியத்துவத்தை உணர்த்த மிலிந்த மொறகொடவே மேற்கொண்ட நடவடிக்கை என்கிறார் மற்றொரு எதிர்க்கட்சிப் பிரமுகர்.

பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன கூட தனக்கு இப்படி ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டை செய்யவில்லை என்கிறார் இன்னொரு ஐ.தே. முன்னணி அரசியல்வாதி....

எதுவானாலும், ஐ.தே. முன்னணியில் 'நம்பர்2' எனப்படும் இரண்டாது இடத்தை கைப்பற்றுவதில் கருஜெயசூரியாவுக்கும் மிலிந்த மொறகொடவுக்கும் இடையே ஒரு பனிப்போர் ஆரம்பமாகி தீவிரம்கொள்ள ஆரம்பித்திருப்பதன் அறிகுறியே இது என் கிறார் அரசியல் நோக்கர் ஒருவர்.

ஏற்கனவே ரணிலுக்கும் கருஜெயசூரியாவுக்குமிடையில் பனிப்போர் உறவுதான் உள்ளது என்பது வெளிப்படையான விடயம். இந்த உறவு நிலையின் ஓட்டைகளை மொறகொட சரியாகப்பயன்படுத்த அவரின் அமெரிக்க ஆதரவுப்பலம் வெகுவாகவே ஊக்கம் கொடுப்பதாகத்தெரிகிறது.


அமெரிக்கா மொறகொடவைத் தட்டிக் கொடுக்கிறது என்பதில் உண்மையில்லை என்று எவரும் நிராகரிக்க முடியாது.

கொழும்பு அரசியல் வட்டாரத்தைமொறகொட இயக்க ரணில் இயங்குகிறார் என்றே பேசிக் கொள்கிறார்கள்.....

ரணிலுக்கானஅமெரிக்க ஆதரவுப் பலத்தின் ஆணிவேராக மொறகொட தான் உள்ளார்....

எனில்.... 'மொறகொட'வை ரணில் பாதுகாக்கவே செய்வார்..... அது அமெரிக்க பாதுகாப்பாகக் கூட இருக்கலாம் அல்லவா?

## நாசகாரிகளா? நாட்டுப் பற்றாளர்களா?



சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி கூட்டில் உருவாகப் போகும் புதிய கூட்டமைப்புக்கு நாட்டுப்பற்றாளர் மக்கள் முன்னணி என்று பெயரிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.யின்பிரச்சாரச் செயலாளரும், கூட்டமைப்பு உருவாக கடுமையாக உழைப்பவருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

புரட்சியின் பேரால் சிறிலங்காவை நாசம்செய்தவர் களும் போரின் பேரால் அதனைச்சுடுகாடாக்கியவர்களும் இணைந்து நாட்டுப்பற்றாளர்களாக அவதாரமெடுக்க முனைகின்றார்கள்.

வீதியோரங்களிலும், சந்திகளிலும், அப்பாவிகளை இரத்தவெறிபிடித்த நிலையில் கொன்று 'டயர் போட்டு' எரித்து அரைகுறையாக எரிந்தநிலையில் கங்கைகளில் தள்ளி மிதக்க விட்ட கொலைக்கலாச்சார நாயகர்கள் நாட்டுப்பற்றாளர்கள்எனில்....

சிறுபான்மைசமூகத்தவர்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து, அவர்கள் நியாயம் கோரியபோதெல்லாம் இராணுவ இயந்திரத்தை இயங்கவிட்டு, ஒடுக்குமுறைச்சட்டங்களைப் பிரயோகித்து அதிகார போதைதலைக்கேறிய நிலையில் அவர்களுக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்து சிறிலங்காவின் வளமனைத்தையும் போரின் நலனுக்கும்,அதனால் கிடைக்கும் புகழின் வளர்ச்சிக்கும் செலவிட்டு பேரினவாதப் பேயாட்டம் ஆடிய நாயகியும் அவரின் ஆட்களும் நாட்டுப்பற்றாளர்களெனில்....

இந்தக்கூட்டு முன்னணியின்,பின்னணியினராகச் செல்லப்போகும் மக்களை என்ன வென்று சொல்ல முடியும்?

இவர்கள் எல்லாம் தம்மை நாட்டுப்பற்றாளர்கள் எனப்பிரகடனம் செய்வார்களேயானால், உண்மையான நாட்டுப்பற்றாளர்கள் தேசத்துரோகிகளாக இவர்களால் அடையாளமிடப்படுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

வெறும்- அப்பட்டமான- அரசியல் சுய நலன்களுக்காக மட்டும், பதவிகளை இலக்காகக்கொண்டு இயங்கும் நான்காம் நிலை அரசியல்வாதிகள் (அஸ்கிரிய பீடாதிபதியின் வார்த்தைகளில் கூறுவதனால் 'கேடி'கள்) கூட்டுச்சேர்ந்து மக்களைப் 'பேய்க்காட்ட' நினைப்பது தான்- திட்டமிடுவதுதான்'நாட்டுப்பற்று' என்றால்....


அப்படித்திட்டமிட்டு செயற்பட முனையும் ஓர் அமைப்புத்தான் நாட்டுப்பற்றாளர் முன்னணி என்றால்....

சிறிலங்காவின் எதிர்காலத்திற்கு எவராலுமே உத்தரவாதம் அளிக்கமுடியாது.

கூட்டு முன்னணி அமைக்கமுன்னரே, அதன் நிர்வாகப்பதவிபொறுப்புகளை பங்கு போடுவதில் ஒருமைப்பாட்டு நிலையை எட்டமுடியாது, பேரம் பேசும் சுதந்திரக்கட்சித் தலைவர்களும், ஜே.வி. பி. தலைவர்களும்,நாட்டை பொறுப்பேற்க நேரிட்டால் என்ன ஆகும்?

'நமோ....நமோ......மாதா....' என்ற சிறிலங்காவின் தேசிய கீதம் அந்த நாட்டின் அழிவுக்கான அஞ்சலிக்கீதமாக மாறுவது தவிர்க்க முடியாததொன்றாகும். அவ்வளவுதான்!

## மதபீட மகாநாயக்கரும் அரச பீட மகா கேடிகளும்...



புத்தருக்கு - அதாவது சித்தார்த்தனுக்கு மட்டும் தான் அரச மரத்தின் கீழ் ஞானம் ஏற்படும் என்றில்லை. சிறிலங்காவில் அரச பீடங்களிற்கு ஆலோசனைகளைக் கூறி ஆசீர்வாதங்களை வழங்கும் பௌத்தமத பீடங்களின் நாயகர்களிற்கும் கூட அவ்வப்போது ஞானம் ஏற்பட்டு அதிர்ச்சியூட்டும் தத்துவ முத்துக்களை உதிர்ப்பதென்பது சாதாரணமான விடயம்தான்.

அண்மையில் அஸ்கிரிய பீடாதிபதியான மகாநாயக்க தேரர் உடுகம சிறீபுத்தரகித்த அவர்கள் கூறிய மகாஅர்த்தமுள்ள வாக்கியங்களை இதோ படியுங்கள்-

' நாட்டின் அதியுயர் பீடமான பாராளுமன்றம் இன்று கேடிகளின் கூடாரமாகிவிட்டது. பாராளுமன்றத்தில் ஒழுக்கம் இன்று சீரழிந்த நிலையில் உள்ளது.'- எப்படியுள்ளது.?

மகா நாயக்கரின் வார்த்தைகள் மகா அர்த்தமும், மகாஉண்மையும் பொதிந்த வார்த்தைகளாக இருக்கின்றதல்லவா?

பாராளுமன்றத்தைச் சுடலையாக்கி, ஒப்பாரிவைத்து, சவப்பெட்டி காவிவரும் பாராளுமன்ற உறுப்பினர்களை சரியான முறையில் தான் இனங்கண்டுள்ளார் மகாநாயக்க தேரர். 'கேடிகள்' என்பது மிகவும் பொருத்தமான சொல்தான். நன்றி...தேரரே நன்றி...

அதுசரி, இதுவரை சிறிலங்காவின் அதியுயர்பீடம் பௌத்தமத பீடமான 'அஸ்கிரிய பீடம். அல்லது 'மல்வத்தை' பீடம் என்றே நாம் இதுவரை நினைத்திருந்தோம். ஆனால் பாராளுமன்றம் தான் உயர்பீடம் என தாங்கள் திருவாய்மலர்ந்தருளியிருப்பது தான் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது.

அரச பீடத்திற்கு ஆசீர்வாதமும் ஆலோசனைகளும் வழங்கும் பௌத்தமத பீடத்தை விட பாராளுமன்றம் அதியுயர்பீடமாக இருக்கமுடியுமா?

சிறிலங்காவின் அரசியல் மாற்றங்களுக்கு மட்டுமல்ல. அரசியல் யாப்பு உருவாக்கத் திற்கும் ஆலோசனைகளை மட்டுமல்லாது அங்கீகாரத்தையும் வழங்கும் அஸ்கிரிய பீடாதிபதி யான தாங்களே பாராளுமன்றத்தை அதியுயர் பீடமென வர்ணித்து அதற்கு கேடிகள் கூடாரமென்று விளக்கமும் அளித்துள்ளமையானது வேடிக்கையாக உள்ளது.

பாராளுமன்றம் கேடிகளின் கூடாரமென்றால் அதன் ஆட்சியதிகாரத் தலைவி கேடிகளின் தலைவியா? அவை நாயகர் கேடிகளின் வழிகாட்டியா? பிரதமர் கேடிகளின் முதல்வரா? ஜே. வி.பியினர், சிஹல உறுமயக்காரர், இடது சாரிகள், ஏனைய உதிரி உறுப்பினர்கள் அனைவருமே சிறிலங்காவின் மக்கள் அங்கீகாரம் பெற்ற கேடிகள் தானா?

வேறுயார் சொன்னாலும் நம்பவேண்டிய அவசியமில்லை.

நீங்களே சொல்லும் போது....?!


அதுசரி இந்தக்கேடிகளுக்கு எல்லாம் நீங்கள் ஆசீர்வாத அங்கீகாரம் கொடுத்து வாழ்த்துவது ஏன்?

'கேடி'களுக்கு பயந்தா?

ஒரு கேள்வி- 'இம்மாதிரியான கேடிகள் உங்களிடம் வாக்குக்கேட்டு வரும்போது விரட்டியடியுங்கள்' என்று மக்களுக்கு கூறியுள்ள நீங்கள் அவர்கள் தமது கேடித்தன நடவடிக்கைகளுக்கு எல்லாம் உங்களிடம் ஆசீர்வாதம் கேட்டுவரும் போது உங்களால் அவர்களை ஓட ஓட விரட்ட முடியுமா?

**செங்குட்டுவன்**

## மதவடி மயிலர்



செய்தி:- எந்த வொரு சூழ் நிலையையும் சந்திக்க முப்படைகள் தயார் நிலையில் உள்ளன என்கிறார் அமைச்சர் மாரப்பன......

*மயிலர்:- அப்படியானால் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்களும் தயாராக இருக்கவேண்டும் என அமைச்சர் உணர்த்தியுள்ளார் எண்டு தானே அர்த்தம் பாருங்கோ.... 'முப்படைகள் தயார்' என்றால் என்ன அர்த்தம்? சண்டைக்குத்தயார் என்றுதானே அர்த்தம்... நான் ரெடி... நீங்க ரெடியா? என்று கேட்டால்... 'சவாலே சமாளி'என்று தான் பதில் கூற வேண்டும் பாருங்கோ*

செய்தி:- புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் குறித்து கடற்படைக்கப்பல் நந்திமித்திரவில் பதிவான இலத்திரனியல் தகவல்கள் அழிப்பு....

*மயிலர்:- குற்றவாளி தடயங்களை அழிக்கவே செய்வான்... இதென்னபுதினமே... தமிழினத்தின்தடயங்களையே இல்லாது அழிக்க நினைக்கிற இன வெறிப்படை இலத்திரனியல் தகவல் தடயங்களை விட்டுவைக்குமே... எதையும் அழிக்க நினைக்கிறவனை அழிப்பதைத்தவிர வேறவழி இல்லையெண்டுதான் நான் நினைக்கிறன் பாருங்கோ.*

செய்தி:-ரோக்கியோ நிதியுதவியில் இருந்து, முதலில் தென்னிலங்கையிலேயே அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாகும் என்கிறார் அமைச்சர் சொக்ஸி.

மயிலர்:- சட்டியில் உள்ளது அகப்பையிலை வருகுது பாருங்கோ... வடக்கு...கிழக்கு புனர் வாழ்வுக்கென கையேந்தி வாங்கிய நிதியிலை, முதலிலை தெற்கிலை அபிவிருத்தியாம்...... பெருமாள் பிச்சையெடுக்கஅனுமார் பிடுங்கித்தின்ற கதையாய்த்தான் இது முடியும்பாருங்கோ.....

# கரும்புலிகள் நாள்



**உணர்வுகளை மட்டும் மீட்டும் நாளாக மலர்கின்ற தன்மை இப்பொழுது மாறி தியாகங்களின் விளைவாகக் கனிய வேண்டிய அறுவடையையும் எடை போடுகின்ற நாளாக இம்முறை கரும்புலிகள் நாள் இருக்கின்றது.**

**சி.இ. இந்திரகுமார்**

சிறிலங்கா இராணுவத்திற்கு அச்சமில்லாது பொழுதைக் கழிக்கும் கரும்புலிகள் நாளாக இம்முறை கரும்புலிகள் நாள் வருகின்றது என்கிறார் ஒருவர்....

ஏனென்றால் புலிகளின் கரும்புலி வீரர் கப்டன் மில்லர் நெல்லியடியில் கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டதன் பின்னர் அவரின் நினைவாக தாக்குதல் மேற்கொண்ட யூலை 05 இல் தமது எல்லா கரும்புலிகள் நினைவாகவும் கரும்புலிகள் நாளைப் பிரகடனம் செய்து கொண்டாடி வருகின்ற கடந்து போன எல்லாக்காலத்திலும் யூலை 05 என்பது ஒரு அசாதாரண நாளாக இருந்துள்ளது.

இது ஒருவகையில் படையினரின் பலவீனமான அச்சம் கலந்த நாளாகவும் அதேவேளை புலிகளைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய தமது தனித்துவமான ஒரு பலம் பொருந்தியநாளாகவும் இருந்து வருகின்றது.

அப்படியானால் இன்றைய சமாதானக் காலத்தில் வரும் இக் கரும்புலிகள் நாள் உணர்த்தும் செய்திதான் என்ன?

அல்லது இன்றைய சமாதானகாலப் பிரசவிப்பின் தோற்றுவாயில் கரும்புலிகள் செலுத்தும் தாக்கம் தான் என்ன?

இது பார்க்க வேண்டிய அல்லது அலசப்படவேண்டியது.

வழமையில் கரும்புலிகள் நாள் என்றவுடன் சிறிலங்காவின் படைத்துறையில் ஒரு எச்சரிக்கை நிலையும் ஊடகங்களில் ஒரு தலைப்புச் செய்திக்கான காத்திருப்பும் ஒரு தாக்குதல் நடக்கலாம் என்ற மக்களின் எதிர்பார்ப்பும் என யூலை மாதம் நீளும்.

இது ஒருபோர்க்கால கரும்புலிகள் நாளின் வருகை இப்படித்தானிருப்பது வழமை.

ஆனால் சமாதான கால கரும்புலிகள் நாளின் வருகை என்பது எப்படியிருக்கிறது.

வெறும் உணர்வுகளால் தியாகங்களை மீட்டும் ஒரு நாளாக மட்டுமல்லாது தியாகங்களின் விளைச்சல்களை மீட்டுப் பார்க்கும் ஒரு நாளாக இருக்கிறது.

ஏனெனில் தமிழர்களின் விடுதலைக்கான உச்சத் தியாகத்தின் வடிவமாக கரும்புலிகளும், அந்தத் தியாகங்களை வெளிப்படுத்தும் ஒரு நாளாக கரும்புலிகள் நாளும் இருகிறது.

ஆகவே உணர்வுகளை மட்டும் மீட்டும் நாளாக மலர்கின்ற தன்மை இப்பொழுது மாறி தியாகங்களின் விளைவாகக் கனிய வேண்டிய அறுவடையையும் எடை போடுகின்ற நாளாக இம்முறை கரும்புலிகள் நாள் இருக்கின்றது.

எப்படி சமாதானத்தின் விளைச்சலை கரும்புலிகள் நாளினூடாக எடை போட முடியும் என எவரும் சிந்திக்கக் கூடும்? அல்லது அது எவ்வளவு பொருத்தமானதாக இருக்கும் என்ற ஐயமும் இருக்கக்கூடும்.

ஆனால் இன்றைய கரும்புலிகள் நாளினூடாக சமாதானத்தை எடை போடுவதே மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

ஏனென்றால் கரும்புலிகளின் கணிசமான அளவு இராணுவ அழுதத்தின் விளைவு தான் இன்றைய சமாதானகால நகர்வு அல்லது பிரசவிப்பு.

இலங்கைத்தீவில் மலர்ந்த எல்லா சமாதான காலங்களும் புலிகளின் இராணுவ வெற்றிகளின் பின்னாலான இலங்கையின் கையாலாகாத் தன்மைகளாகவே இருந்துள்ளது.

இதனை 1987களில் யாழ்ப்பாணத்தின் மீது ஒபறேசன் லிபறேசன் இராணுவ நடவடிக்கைக் கூடாக தம் பிடியை இறுக்க நினைத்த அரசின் எண்ணங்களை உடைத்து தம் பிடியை இறுக்க புலிகள் நெல்லியடியில் ஒரு கரும் புலித்தாக்குதலை செய்தார்கள்.

இதன் விளைவு அன்றைய சிறிலங்கா சனாதிபதியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவினூடாக ஒரு சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நிலைக்குத் தள்ளியது.

ஆனால் அன்றைய துரதிஸ்டம் தமிழர்களின் ஒரு பலம் பொருந்திய இராணுவ வெற்றியினை இந்தியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்தமை அதன் விளைவாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் தோல்வியுற நேரிட்டது.

ஆனால் ஒரு ஒப்பந்தத்தின் தோல்வியும் புலிகளின் ஒரு இராணுவ வெற்றியும் உலகின் கவனத்தில் பதிந்தது.

இந்த இராணுவ வெற்றியென்பது கரும்புலித்தாக்குதலினூடாகவே நடந்தது.

ஆகவே அன்றைய சமாதான கால அறுவடையென்பது இலங்கை- இந்திய கூட்டுப் பங்கீட்டால், புலிகளிற்கு ஒரு பிராந்திய வல்லரசிற்கு எதிராக மோதி வென்றார்கள் என்ற கீர்த்தியை உண்டாக்கியது.

இப்போது புலிகளின் தொடர் இராணுவ வெற்றிகளால் ஆடிப்போயிருந்த சிறிலங்கா அரசை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினூடாக மோதி உடைத்து இன்றைய சமாதானகாலம் கனிய வைக்கப்பட்டுள்ளது.

(கட்டுநாயக்க விமான நிலையத்தாக்குதல் என்பது சிறிலங்காவில் ஏற்படுத்திய பல்வேறு தாக்கம் என்பது இன்றுவரை தொடர்கின்றது.)

எப்படி கரும்புலிகளின் வலுமிக்க தாக்குதலினூடாக சமாதான காலம் கனியவைக்கப் பட்டதோ அதனை அக்கரும் புலிகள் நாளினூடாகவே எடை போடுவது பொருத்தமானதாக இருக்கும்.

ஏனென்றால் கட்டுநாயக்கத் தாக்குதலின் விளைவால் ஏற்பட்ட கள யதார்த்தம் என்பது புலிகளிற்கு சார்பான ஒரு நிலையாகும்.

ஆகவே இந்த கள-யதார்த்தத்தினூடாகவே இன்றைய சமாதானகால அறுவடையை எடை போடவேண்டியுள்ளது.

இந்த நிலையில் தீர்மானங்களின் முடிவுகள் முடிவிலிகளாக நீண்டு தொடரும் சமாதானகால கரும்புலிகள் நாளாகக் கனியுமென்றால்

சமாதானம் தராத ஒரு தீர்வை போரொன்றே தரும் என்பதாகவே இருக்கும்.



பலம் பொருந்திய ஒரு இராணுவ இயந்திரத்தை ஒரு பலவீனமான இனம் தன்னுடைய பலம் பொருந்திய தியாகத்தினூடாக பெற்ற / பெரும் வெற்றிகளை வலுப்படுத்த உணர்த்தும்.

இதனையே இலங்கைத் தீவுக்கு கரும்புலிகள் உணர்த்தியிருக்கிறார்கள்.

---

# பொங்குதமிழ் - ஒரு கருத்துக்கணிப்பு

**த.திருநிலவன்**

புத்தி ஜீவிகளிடம் ( ஒரு சில ஆயிரம் பேரிடம் மட்டும்) கருத்துக்கேட்டு விட்டு - அதனை ஒரு பெரும் மக்கள் கூட்டத்தின் (அது ஒரு கோடியாகவும் இருக்கும்) கருத்தாக வீதங்கள் போட்டு கருத்துக் கணிப்பு என அதனை வெளியிட்டு - சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் - தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க சம்மதமில்லையென பரபரப்பூட்டிய தகவல்களிடையே...

2 இலட்சத்திற்கும் அதிக மக்கள் ஒருசேர உலகுக்கு, சிறிலங்கா அரசுக்கு ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றார்கள்.

புரிந்துணர்வு உடன்பாட்டுடன் சோதனைகள் போன்ற இராணுவ நெருக்குவாரங்களை தணித்தும், போக்குவரவுப் பாதைகளைத் திறந்தும், பொருளாதாரத்தடையை நீக்கியும், மின்சாரம், தொலைபேசி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை தாராளமாக்கியும்- தமிழ் மக்களை திருப்திப்படுத்திவிட்டாயிற்று என்ற மனத்திடத்துடன் - புலிகளை விட்டு தமிழ் மக்களை விலகச்செய்து விட்டாயிற்று என்ற எண்ணத்துடன் புரிந்துணர்வு உடன்பாட்டின் முக்கிய அம்சங்களை நிறைவேற்றாது இழுத்தடித்து வரும் சிறிலங்கா அரசுக்கு - தமிழினத்தின் ஒரு பெரும் எண்ணிக்கை அழுத்தத்தைக் கொடுத்துள்ளது.

யாழ்ப்பாணப்பொங்குதமிழே இதனைச் சாதித்துள்ளது. குடாநாடு முழுவதும் வீதி வீதியாக இராணுவக் கொமாண்டோக்கள் நிறுத்தப்பட்டு மக்கள் அச்சுறுத்தப்பட்டனர் தேசவிரோத சக்திகள் மக்களைக் குழப்ப துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தன.

நிகழ்வின்அன்றைய நாளில் மக்களை வீட்டுடன் இருத்துவதற்காக தேசவிரோத சக்திகளின் தொலைக் காட்சி ஒளிபரப்பு மலினமான புதிய தமிழ்த்திரைப்படங்களை தொடர்ச்சியாக ஒளிபரப்பின. இருந்தும் என்ன பயன்- யாழ்ப்பாண மக்கள் தொகையின் பெரும் எண்ணிக்கை பொங்கு தமிழ் மைதானத்தில் திரண்டிருந்தது. நாங்கள் எங்களது வீடுகளுக்குச் செல்ல படையினரே நீங்கள் உங்களின் வீடுகளுக்குச் செல்லுங்கள் என - தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் படங்களைகைகளில் ஏந்தி - கைகளை உயர்த்தி உரத்து முழக்கமிட்டனர்.

கல்வியைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்ட யாழ்ப்பாண சமூகம் ஊர்வலங்களில் உரத்து முழக்கமிடுவதோ - ஆரவாரிப்பதோ - கைகளை உயர்த்தி குரலிடுவதோ அல்ல.

ஆனால் முதல் தடவையாக என்றே கூற வேண்டும். இம் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான மக்கள் ( 2 லட்சம் முதல் 2 1/2 லட்சம் வரை ) ஒன்று திரண்டு தமது உரிமைக்காக முழக்கமிட்டிருக்கின்றார்கள். இதன் அடிப்படைக்காரணம் யாழ்ப்பாண மக்களின் அடிமனதில் அமுங்கிக் கிடந்த அபிலாசைகளை அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் ஆற்றுகை வெளிக்கொண்டுவரச்செய்தது.



யாழ்ப்பாண அண்மைய மக்கள் தொகை 5 லட்சம் வரையாகும். இதில் சிறுவர், முதியோர், நோயாளர்களும் அடங்குவர். இந்த மக்கள் தொகையில் அரைவாசி வரையானோர் அல்லது யாழ்ப்பாண வாக்காளர்களின் பெரும்பான்மையானோர் - ஒன்று திரண்டு ஒருசேர வெளிப்படுத்தியிருக்கிற செய்தி மிக முக்கியமானது. இந்தச் செய்தியை யாழ்ப்பாண மக்கள் பிரகடனம் செய்யக்கூடாது என்பதற்காகவே சிறிலங்கா அரச சக்திகள் இராணுப் பிரசன்னங்கள் ஊடாகவும், ஏனைய பரப்புரைகள் ஊடாகவும் தடுக்க முயன்றன. இதனையும் மீறி யாழ்ப்பாண மக்கள் சொல்லியிருக்கின்ற விடயமானது - மக்களின் கருத்தை பகிரங்கமாக முகங்களின் யதார்த்தத்துடன் சொல்லியிருக்கிறது. தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களின் மொத்தத் தமிழ்மக்களின் எண்ணிக்கையை விடகூடுதலான தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் திரண்டு பிரகடனம் செய்திருக்கிறார்கள். இந்தப் பொங்குதமிழ் ஏனைய மாவட்டங்களிலும் நடைபெறவிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது ஒட்டு மொத்தமாக தமிழர்தாயக தமிழ் மக்கள் மத்தியில் நடாத்தப்படும் கருத்துக் கணிப்பாகவே இருக்கும்.

இதனை நடந்த பொங்கு தமிழ் உணர்த்தியுள்ளது. இந்த கருத்துக்கணிப்பு இராணுவம் உட்பட்ட அரசுப்படைகளின் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமரவும்- அதிகாரப்பலம் பொருந்திய இடைக்கால அரசை உலக அங்கீகாரத்துடன் விடுதலைப்புலிகளிடம் வழங்கவும், சமாதானத்தின் உண்மை நிலைப்பாட்டை யாழ்ப்பாணப் பொங்குதமிழ் உணர்த்தியுள்ளது.

சில நூறுபேரிடம் மேற்கொள்ளும் கருத்துக்கணிப்பை ஒரு பெரும் இனத்துக்கே உரியதாக்கும் கருத்துக் கணிப்புகளைவிட இது பலமான வலுவான உண்மையான கருத்து வாக்கெடுப்பாகும்.

உயர்ந்தவர்கள் நாமெல் லோரும்
உலகத்தாய் வயிற்று மைந்தர்
நசிந்து இனிக் கிடக்கமாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

# ஆரெட்டச் சொல்லியழ

காலம ஒருபுறம் வெளிக்க முதல் எழும்பினாத் தான் வசுப் பிடிச்சு வீட்டபோக... மருமோள் பெறுமாசம். உதவிக்கு ஆள் வேணும். இண்டைக்கு பத்தாந் திகதியே. ஓ..... பன்னெண்டாந் திகதியாம் 'டேற்' போட்டிருக்கினம். என்ன.... மாரிமழையையும் பிள்ளைத்தாச்சியையும் நம்பேலா, எப்பன் முந்தும்பிந்தும்.

நீங்கள் சொல்லுறியள் எனக்குந்தக் குத்தியன் பதினொரு மாசத்துக்கு பத்து நாளிருக்கத்தானே பிறந்த வன். பொடியன் வயுத்துக்கயே விளைவிளையெண்டு விளைஞ்சு பத்துறாத்தல் இருந்தான்.மூண்டாம் நாள் தொப்பூள் கொடி விழுந்திட்டுது.

ம்... வவுனியாவில ஆசுப் பத்திரியடியில இறங்கி மெல்ல நடந்து ஆசுப்பத்திரிக்கேற்றடியில வர மோன்வாறான்.

"என்னடா.....?"



(வவுனியா வைத்தியசாலை)

"வாட்டில விட்டிருக்கு"

"என்ன குத்தெழும்பி விட்டுதே ஆர் கூட நிக்கிற...."

"வருத்தமில்ல.... நாளைக்குத் தானே டேற் அதுதான் கொணந்து விட்டனான்"

"பேயா... ஒரு கட்டைக்க வீடு குத்தெழும்பக் கொண்டரலாமே. ஆசுபத்திரிக்க ஆனவாகில குளிப்புமுழுக்கு ஏலுமே."

"அது சரி..... நேரத்துக்கு கொண்டராட்டி பேசுவாள்கள். ஆர் பேச்சுவாங்கிற....."

நான் ஆசுப்பத்திரிக்க போக நேரம் போட்டுது வீட்ட போனன்.

மத்தியானமும் மனிசியப் பாத்திட்டு வீட்ட வந்தவனோட பேசினன். எட முதல்ப்பிள்ளை எப்பன் முந்தும் பிந்தும் பார்த்துக்கொண்டுபோயிருக்கலாம்தானே.

எங்க வவுனியா ஆசுப்பத்திரியிலயோ. முந்தவும் மாட்டுது பிந்தவும் மாட்டுது. உலகத்து விஞ்ஞானியள் என்னவோ மரபணுவில உயிர் செய்யிறமாதிரி 'பிரமதேவியவை' படைக்க உயிரை குறிச்ச திகதியில வெளியில கொண்டு வாறாளவையாம். வவுனியா ஆசுப்பத்திரி பொது மருத்துவமனையா பதவி உயர்ந்திட்டுது. இந்த அற்புதங் களாலயோ என்னவோ.

ஆசுப்பத்திரியில பிரசவத்துக்கு ஆள்சேர்ந்த உடனயே ரெண்டு மாத்திரை வாங்கிக்கொண்டுவாங்கோ எண்டு எழுதிக்குடுக்கினம். அதை எடுத்துக்கொண்டு அப்பாவிக்கணவன்மார். வவுனியா முழுதாகத்திரிஞ்சாலும் அந்தக்குளிசை கிடைக்கிறதில்லை.

குளிசை அநுராத புரத்தில குறிப்பிட்ட கடையில தான் இருக்கு விலையைக் கேட்டா தலையில கை வைப்பியள். ஆயிரத்து ஐந்நூறு ரூவா ரெண்டும். இன்னொண்டு இது ஐசில வைக்கிறமருந்து. வெளியால எடுத்தா அரை மணித்தியாலத்துக்க பயன்படுத்த வேணும். அன்ராசபுரத்து வஸ் வவுனியாவுக்கு அவ்வளவு கெதியாவராது. கடைவழிய திரிஞ்சு அய்சுக் கட்டிய சொப்பினுக்க வாங்கி வச்சுக் கொண்டர மதவாச்சியில வஸ் பழுதாப்போச்சு. விறுவி றெண்டு அங்கின உள்ள கடைவழிய கெஞ்சி கொஞ்ச நேரம் பிறிச்சில வச்சு பஸ் திருத்தின பிறகு எடுத்துக்கொண்டுவந்து ஆஸ் பத்திரியில குடுத்தன் எண்டான் மகன்.

அப்ப குளிசையோட ரெண்டாயிரம் சிலவு. வசதியில்லாதவைபாடு என்னமாதிரி. உப்பிடித்தான் கணேசன்ர மனிசிக்கும் குளிசை கேட்டவை. இப்ப குறிச்ச திகதியில பிறக்காட்டி குளிசை வாங்கிக் குடுத்தே ஆகோணும். இல்லாட்டி பெறப்போனவள் பேச்சு வாங்கியே செத்திடுவாள். கணேசு பாவம். சரியான கஷ்டம். பிறகு அங்கயிஞ்ச அலைஞ்சு காசு மாறி குளிசை வாங்கிக் கொண்டுவர, இஞ்ச மனிசி சாதாரணமா சுகமா பெத்திட்டாள். ஆயிரத்தி ஐநூறு ரூவாக் குளிசை வீண்எண்டோ நினைக்கிறியள். அதை மற்றப் பிள்ளைத்தாச்சியளுக்கு விக்கலாம்.

இப்பிடி எல்லாரும் வாங்குற குளிசையை என்ன செய்யினம் தெரியுமோ. நேரடியா கருப்பையுக்குள்ள திணிக்கினம். அது அதில கரையத் தொடங்க கருச்சிதைவு ஆரம்பமாகுது. குழந்தை வெளியேறும். அப்படி வெளியேற முடியாட்டி உள்ளுக்கே சமாதியாகலாம். இந்த சமாதிநிலை துவங்கி பிள்ளையின்ர துடிப்பு அடங்கப் போகுது. எண்டு கண்டா இருக்கவே இருக்கு சிசேரியன் அதுதான் வயித்தை வெட்டி பிள்ளைய வெளியால எடுக்கிற. அண்மையில் சிசு மரணமும் ஏற்பட்டுள்ளது. வவுனியா ஆஸ்பத்திரியில 'சிசேரியன்' அதாவது அறுவைப் பிரசவங்கள் அதிகரிச்சுள்ளதுக்கு இதுவும் காரணம்.

பின்ன வைத்தியத்துக்கு வாறவையட்ட வெளியில மருந்து வாங்கி வரச்சொல்லி கேட்பது பொது மருத்துவ மனையின் சட்டங்களுக்குப் புறம்பானது. ஒரு நோயாளிக்கு தனது உடல் நிலை பற்றி அறியவும் தனக்கு என்ன மருந்து தரப்படுகிறது என்றறியவும் சட்டபூர்வமாக உரிமையுண்டு.இது எந்த மருத்துவ மனையிலும் நடைமுறையில் இல்லை.

## மாயா

மருந்துக் கடைகளிடம் கொமிசன். பெறும் நடவடிக்கைகளாகவே விலை கூடிய மருந்துகளை வாங்கும்படி மக்களை அனுப்புவதும் அமைக்கிறது.இது பற்றி முன்னாள் சுகாதார அமைச்சர் சுனேத்ரா ரணசிங்க குறிப்பிடும் போது. "அரசாங்கம் எவ்வளவு நிதி நெருக்கடியில் இருந்த போதும் வைத்தியசாலைகளுக்கான மருந்துகளைக் குறைப்பதில்லை. அரச மருந்துச் சாலை யான'ஒசுசல' 45ரூபாவுக்கு கொடுக்கும் மருந்து வெளியே 800ரூபாவுக்கு விற்கப்படுகிறது." என்றார். (22-06.2003 சண்டேலீடர்) இலவச வைத்தியத்தைப் பெறவே இயலாத வசதியற்ற மக்கள் அரசாங்க மருத்துவமனைகளுக்குப் போகிறார்கள். ஒரு பிரசவம் இரண்டாயிரம் ரூபாய்களாக மாறியுள்ளது இங்கு.

வைத்தியசாலைகளின் அவலங்களைப்பேசவும் இவர்கள் பயப்படுகின்றனர். மீண்டும் அங்கு தானே போக வேண்டும்.

பிறகு என்ர மருமோளுக்கு என்ன நடந்ததெண்டு சொல்லயில்லையே. ஒரு குளிசையை உள்ளக்கு தள்ளினதோட பிள்ளையின்ர துடிப்பு குறைஞ்சிட்டுதாம். பிறகென்ன வயித்த வெட்டி குழந்தைய எடுத்தாச்சு.

ம்.... ஆரெட்டச் சொல்லியழ.

# புத்தரின் பெயரால்... (In The Name Of Buddha)

## திரைப்படம் கிளப்பியுள்ள சர்ச்சை

அனேகமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒருபோதும் காணப்பட முடியாத திரைப்படம் ஒன்று 16.5.2003 அன்று லண்டனில் திரையிடப்பட்டது.

கடந்த நவம்பரில் (ஒஸ்லோ) திரைப்பட விழாவில் முதலில் திரையிடப்பட்ட நாளில் இருந்தே "புத்தரின் பெயரால்" திரைப்படம் சர்ச்சைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. சிறிலங்காவின் அதிகாரிகள் இதனால் ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப்படம் தடைசெய்யப்பட வேண்டும் என்று லண்டனிலுள்ள சிறிலங்காத் தூதுவரகம், பிரிட்டனின் திரைப்படங்களுக்கு சான்றிதழ்வழங்கும் சபைக்கு உத்தியோக பூர்வமாக விண்ணப்பித்திருக்கிறது. அது, பழி சுமத்துவதாகவும், தவறானதகவல்களைக் கொண்டிருப்பதாகவும் சிறிலங்கா அரசு வாதிடுகிறது.

சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கு மிடையே ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேயில் இப்படம் திரையிடப்பட்டபோது, சிறிலங்கா ஊடகத்துறையினரால் நோர்வே பெரும் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டது. லண்டனிலே வெசாக் காலத்தில் இப்படம் திரையிடப்பட்டது ஒன்றும்தற்செயல் நிகழ்வு அல்ல என்று சிலர் கருதுகிறார்கள். அமைதிப் பேச்சுகளில் பங்கு கொள்வதைப் புலிகள் தற்காலிகமாக நிறுத்தியிருக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் இத்திரைப்படம் வெளியிடப்படுகிறது. தன் தாயகத்திலிருந்து தப்பியோடி, இங்கிலாந்தில் புகலிடம் தேட நிர்ப்பந்திக்கப்பட்ட சிறிலங்கா தமிழ் மருத்துவ மாணவன் ஒருவனுடைய கதையை இத் திரைப்படம் கூறுகிறது.

சிறிலங்கா இராணுவத்தினராலும் 1987-1990 வரை இங்கிருந்த இந்திய அமைதி காக்கும் படையினராலும் (IPKF) அவனது குடும்பத்தினர் அனுபவித்த துன்பங்களை அது சித்திரிக்கிறது.

இந்தத் திரைப்படத்தில் சித்திரிக்கப்படும் வன்செயல்கள் உயிர்த் துடிப்பானவையாயும் (Graphic) மனதை பிழிபவையாயும் (Disturbing) இருக்கின்றன. .இத்திரைப்படம் பெரும் மனவேதனை (Harrowing) தருவதாகவும் கோரமானதாகவும் (Gruesome) இருப்பதாக சில விமர்சகர்கள் கூறியிருக்கிறார்கள். இது ஒரு பக்கச்சார்பானதாகவும் தமிழ் புலிகளுக்கு பிரச்சாரமாக பயன்படுவதாகவும் சிலர்கூறுகிறார்கள் என்றும் சிறிலங்கா தமிழர் சமூகம் அனுபவித்த சித்திரவதைகள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், உயிர்த்துடிப்பான பாலியல் வல்லுறவுகள் முதலியவற்றை இப்படம் சித்திரிக்கிறது.



கிளர்ச்சித் தலைவர் பிரபாகரனாக நடிக்கும் நடிகர் விடுதலைப்போராட்டம் பற்றிய நீண்ட உரைகளை ஆற்றுகிறார் அனுதாபத்தை தரும் விதத்தில் இந்தக் கிளர்ச்சித்தலைவர் சித்திரிக்கப்பட்டிருப்பது சிறிலங்கா அதிகாரிகளுக்கு ஆத்திரமூட்டி விட்டிருக்கிறது. ஒரு திரைப்படத்திலே இந்திய அமைதிகாக்கும் படையின் கொடூரமான செயற்பாடுகள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது இது தான் முதல் தடவையாகும். இந்திய சீக்கியபடை வீரர்களை, மனித உரிமைகளை பற்றிய எந்தவித பிரக்ஞையுமற்ற வல்லுறவாளர்களாகவும் இரக்க மற்ற கொலைகாரர்களாகவும் சித்திரித்திருப்பது ஐக்கிய இராச்சியத்திலுள்ள சீக்கிய சமூகத்த வரை ஆத்திரத்துக்குள்ளாக்கியிருக் கிறது. சில சிங்கள அமைப்புகளுடன் சேர்ந்து, படம் திரையிடுவதற்கெதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக சில சீக்கியர்கள் சூளுரைத்திருக்கிறார்கள். அமைதி நிறைந்த சிறிலங்காவுக்கு இப்படம் அர்ப்பணிக்கப் பட்டிருப்பதாக இத்திரைப்படத்தைத் தயாரித் தவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை வளப்படுத்தவே தாங்கள் உழைப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் கடந்த இரு தசாப்பதங்களாக நிகழ்ந்த உள்நாட்டுப் போரினால் உணரப்பட்டபச்சையான உணர்வலைகளை வாய்ப்பாகப்பயன்படுத்துவதாக இந்தப்படம் இருப்பதாக விமர்சகர்கள் கூறுகிறார்கள். இந்தத் திரைப்படம் வேண்டுமென்றே ஆத்திரமூட்டுவதாகவும் (Deliberately provocative), பகட்டில்லாத (Naive) தாகவும் இருப்பதாகவும் பார்வையாளர்களின் உணர்வுகளை சீண்டுவதாகவும் உள்ளதாக அவர்கள் கூறுகிறார்கள். "புத்தரின் பெயரால்....." திரைப்படம் மேற்குலகில் வாழும் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தினரிடையே வரவேற்பைப் பெறக் கூடும். அமெரிக்காவில் இடம் பெற்ற திரைப்பட விழாக்களிலே இது இரண்டு பரிசுகளை வென்றுள்ளது. இந்தத் திரைப் படத்தினுடைய வலுவானது அது உருவாக்கி விட்டிருக்கும் சர்ச்சையில் இருக்கிறது.

அயல் நாடாகிய சிறிலங்காவின் முரண்பாடுகள் பற்றி நேரடிப்பட்டறிவு எதுவும் இல்லாதவர்களாக தென்படுகிற இளம் இந்திய திரைப்படத் தயாரிப்பாளர்களின் இந்த முயற்சியானது வன்போக்கானமுரண்பாடுகளினிடையே அகப்பட்டுக்கொள்ளும் மக்கள் எதிர்கொள்ளும் கொடூரமான யதார்த்தங்களை எடுத்துக்காட்டும் ஒரு முயற்சி என்றே விமர்சகர்களால் நோக்கப்படுகிறது.

"புத்தரின் பெயரால்" கொண்டிருக்கும் அனைத்துப் பலவீனங்களுக்கு அப்பாலும் சிறிலங் காவின் உள்நாட்டுப் போரின் கொடூரத்தன்மையை வலுவான முறையில் எடுத்துக்காட்டுவதாக அது இருக்கிறது.

தமிழில்: வின்சென்ற் புளோறன்ஸ்
நன்றி. பி.பி.சி (விமர்சனத்தின் சில பகுதிகள்)

இடி முழக்கத்துக்கு முன் மின்னல் வருவதுபோல, செயலுக்கு முன் சிந்தனை முந்துகிறது. - ஹென்ரி

# பொங்குதமிழ் உணர்வின் பதிவுகள்

**யாழ்ப்பாணத்தில்** தமிழர்கள் தமது தீர்க்கமான முடிவை சிறிலங்காவுக்கும் சர்வதேசத்திற்கும் கடந்த வெள்ளியன்று எடுத்துரைத்துள்ளார்கள். பொங்குதமிழ் - 2003 நிகழ்வில் கூடிய சுமார் இரண்டு லட்சம் மக்கள் எமது நிலம் எமக்கு வேண்டும் என்றகுரலை எழுப்பியதோடு, விடுதலைப்புலிகளே தமது ஏகப்பிரதிநிதிகள் என்பதையும் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

யாழ். பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்து நடத்திய இந்தப்பொங்குதமிழ் நிகழ்வு எவருமே எதிர்பார்த்திராத வகையில் உணர்வெழுச்சியோடு நிகழ்ந்திருக்கிறது. முதன்முதலாக 2001ம் ஆண்டு ஜனவரி 17ம் திகதிசுய நிர்ணய உரிமை, தனித்தேசியம், மரபுவழித்தாயகம் என்பவற்றை வலியுறுத்தி இப்பல்கலைக்கழக சமூகமே பொங்குதமிழை முன்னெடுத்தது. அதனைப்பின் பற்றியே வடக்கு - கிழக்கிலும் மலையகத்திலும் பொங்குதமிழ் எழுச்சிகள் இடம் பெற்றன. ஈழத்தமிழர்கள் தாம் வாழும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அதனைச் செய்தார்கள்.

முதலாவது பொங்குதமிழை யாழ் பல்கலைக்கழகம் நிகழ்த்த ஆயத்தங்களை மேற்கொள்ள ஆரம்பித்த போதே சிறிலங்காபடைகள் அவற்றை தடுத்து நிறுத்தவும் படுகொலைகளை மேற்கொண்டு குழப்பவும் முயற்சிகளை மேற்கொண்டன. பலத்த அச்சுறுத்தலுக்கு மத்தியில் செய்யப்பட்ட அந்தப் பொங்குதமிழ் பிரகடனம் சர்வதேச அரசியல் அரங்கில் அதிர்வை ஏற்படுத்தியது. அதன் பின்பாக கடந்த ஆண்டு ஏப்ரல் - 17ம் திகதி யாழ்.குடா மக்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்ட பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற்றது. அது விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை மூன்று பிரதான கோரிக்கைகளோடு சேர்த்து பிரகடனம் செய்தது.

இறுதியாக கடந்த வெள்ளியன்று இடம் பெற்றுள்ள பொங்குதமிழ் - 2003 சமாதானப் பேச்சுக்கள் இடைநின்று போயுள்ள சூழலில் எழுச்சிகொண்டிருக் கின்றது. இருதரப்பினாலும் ஏற்கப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டில் தமிழர்கள் தமது இயல்பு வாழ்வை மீளப்பெறுதலே முக்கியமானதாகும். அதனை இதுவரை சிறிலங்கா அரசோ, படைகளோ தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை. நடைபெற்று முடிந்த ஆறுசுற்றுப் பேச்சுக்களிலும் இதுபற்றி சொல்லாடப்பட்டபோதும் அது முழுமையாகக்கிடைக்கவில்லை.

குடாநாட்டில் இன்னும் 25 ஆயிரம் வரையான குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப இயலாமல் உள்ளன. அவற்றிலும் கணிசமான குடும்பங்கள் அகதிமுகாம்களில் கிடந்து அல்லலுறுகின்றன. இவர்கள் தமது இடங்களுக்குத் திரும்ப சிறிலங்கா இராணுவம் உயர்பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி தடுத்து வருகின்றது. இந்த நிலையில்தான் இப் பொங்குதமிழ் - 2003 இடம் பெற்றுள்ளது.

''நாங்கள் எமது வீடுகளுக்குச் செல்வதற்காக இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்'' என்ற கோரிக்கை இதில் பிரதானப்படுத்தப் பட்டுள்ளது. இதன் இன்னொரு வடிவமே "எமது நிலம் எமக்கு வேண்டும்'' என்றவாசகம் ஆகும். அது மொத்தத்தில் தமிழர் தாயகத்தில் அந்நியப் படைகளின் பிரசன்னம் இனிமேல் வேண்டாம் என்பதையே தர்க்கமாக கொண்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டை மக்கள் பொங்குதமிழ் - 2003ல் வெளிப்படுத்த, சிங்களத்தரப்பு சரியான முறையில் புரிந்துணர்வு உடன்பாட்டை அமுல் செய்யத் தவறியமையே காரணம் ஆகும். உண்மையில் உடன்பாட்டின்படி தமிழர்களை அவரவர் இடங்களுக்குச் செல்ல விட்டிருந்தால் இராணுவத்தை உடன் வெளியேறுமாறு பொங்கும் நிலை ஏற்பட்டிராது. ஆனால் இராணுவவாதக்கடும் போக்கிற்கு அனுசரணையாக சமாதானப் பேச்சுக்களையும் புரிந்துணர்வு உடன்பாட்டையும் சிறிலங்கா அரசுகையாள முயன்றதன் விளைவு இரண்டு இலட்சம் மக்கள் கூடி எழுப்பிய எதிர்ப்புக் குரலாகிவிட்டது.

இந்தப் பொங்கு தமிழ் கூட இராணுவத்தின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்தான் இடம் பெற்றுள்ளது. கடந்தவாரம் முழுவதும் மக்களை அதிகளவில் திரளவிடாமல் தடுப்பதற்கான முயற்சியில் இராணுவத்தினர் குடாநாடு பூராவும் செயற்பட்டார்கள் . குறிப்பாக மோட்டார் சைக்கிள் படையினர் பல்கலைக்கழக மாணவர்களை செயற்படவிடாது அச்சுறுத்தி வந்தார்கள். மாணவர்தலைவர்கள் புலனாய்வுப் பிரிவினரின் கொலை மிரட்டலுக்கு உட்பட்டார்கள்.



ஈ.பி.டி.பி புதிய புதிய அமைப்புக்களின் பெயர்களைச் சூட்டிக் கொண்டு பொங்குதமிழுக்கு எதிரான பிரச்சாரப் போரை நிகழ்த்தியது. ஊர்கள் தோறும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பொங்கு தமிழை புலிகளின் தூண்டுதலிலான கேளிக்கையாக சித்திரித்தது. ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி அதேநாளில் தனது தொலைக்காட்சி ஒளிபரப்பில் புதிய தென்னிந்தியத் திரைப்படங்களையும் களியாட்டநிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி திசை திருப்ப முயன்றது. இத்தனை பயமுறுத்தல்கள், திசை திருப்பல்கள் மத்தியில் தான் இரண்டு லட்சம் மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

குடாநாட்டின் ஒவ்வொரு வீடுகளிலும், அகதி முகாம்களிலும் இருந்து வந்த மக்கள் பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலிச் சந்தி, கொக்குவில் சந்தி ஆகிய இடங்களில் இருந்து பேரணிகளாக பல்கலைக்கழக மைதானத்தை நோக்கிப் புறப்பட்டனர். எல்லோருமே கைகளில் தலைவர் பிரபாகரனது படங்களைத் தாங்கியவாறு நடந்தனர். தமிழர் வாழ்வின் அவலங்களையும், வேண்டும் உரிமைகளையும் சித்திரிக்கும் நூற்றுக்கணக்கான அலங்கார ஊர்திகளும் அவற்றுடன் சென்றன.

மைதானத்துள் பெருந்தொகையில் மக்கள் கூடத் தொடங்க சிறிலங்கா வான்படையின் இரண்டு உலங்குவானூர்திகளில் படையதிகாரிகள் நோட்டமிட்டார்கள். மைதானத்தில் மிகத்தாழ்வாக அவை பறக்கமக்கள் குரல் எழுப்பி கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததைத் தொடர்ந்து விலகிச்சென்றன.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப.பகீர்தரன் தலைமையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் துணைவேந்தர் சு.மோகனதாஸ் ஈகைச்சுடரை ஏற்ற தேசியக்கொடியை மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரங்காற்றுகை குழுவின் மக்கள் குரலை

**ஞாபகன்**

எழுப்பச் செய்யும் நிகழ்வு இடம் பெற்றது.

உண்மையில் பொங்கு தமிழ் எழுச்சிக்கு வித்திட்டதே அரங்காற்றுகை முறைதான். யாழ்பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும்துறையினர் படையினரின் ஆக்கிரமிப்புக்குபின் மக்கள்படும் இன்னல்களை அவ்வப்போது ஆற்றுகைகளாக வெளிப்படுத்திவந்தனர். அந்த ஆற்றுகைகளே மக்கள் மனதில் பயத்தினால் வெளியே தெரியாது உறைந்து போயிருந்த உணர்வுகளை தட்டியெழுப்பின. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதனை சரியான முறையில் கையாண்டு பொங்குதமிழ் எழுச்சியாக மாற்றியது.



அந்த அரங்காற்றுகைக் குழுவினர் சிவப்பு, மஞ்சள் நிற ஆடைகளோடு அரங்கில் நின்று மக்களின் அபிலாசைகளை உரைத்தார்கள். உணர்ச்சியில் கட்டுண்ட சனத்திரள் அவ்வப்போது இருந்தும் எழுந்தும் கைகளை உயர்த்தியும் உரக்கச் சத்தமிட்டு முழங்கியது. "எமது நிலம் எமக்கு வேண்டும் நாங்கள் எமதுநிலத்தில் உள்ள எமது வீடுகளுக்குப் போவதற்காக இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்.'' என்பதை கூறியவர்கள் "எம்மைப் பாதுகாக்க அந்நியர்கள் எவரும் தேவையில்லை. அதற்கான வழிவகைகள் எம்மிடம் உள்ளன. எமது பாதுகாவலர்களாக விடுதலைப்புலிகள் உள்ளனர்.தலைவர் பிரபாகரனே எங்கள் தலைவன்'' என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார்கள்.பொங்குதமிழ் மைதானம் விபரிக்க இயலாத ஒரு உணர்வுத்தளமாக பரிணாமம் அடைந்தது. முன்னொருபோதுமே இல்லாதவகையில் இரண்டு இலட்சம் மக்களும் உணர்வு பூர்வமாக - ஆத்மார்த்தமாக தமது அபிலாசைகளை எடுத்துரைத்தமை சிறிலங்காவையும் உலகத்தையும் உலுக்கும் நிகழ்வாகும்.

பொங்குதமிழின் அரங்க நிகழ்வில் இராணுவ முட்கம்பி வேலிக்குள் சிக்குண்டு போயிருக்கும் ஒருவீடும், அதனுள் பாம்புகள் குடிகொண்டிருப்பதும் மெய்யுருவாக அமைக்கப்பட்டிருந்தது. நாம் எமது வீடுகளுக்கு போக வேண்டும் அங்கே எந்த பாதுகாப்பு என்ற பெயரிலான தடைகளும் வேண்டாம் என்று குரலெழுப்ப சனத்திரள் திரண்டெழுந்து முட்கம்பிகளை பிடுங்கி எறிந்து வீட்டினுள் பிரவேசித்தது. அதனுள் குடிகொண்டிருந்த பாம்புகளை கொன்று தொலைத்து, அப்பகுதியை துப்புரவு செய்தது. மைதானத்தின் மறுமுனையில் இருந்து பெரிய பொங்கு தமிழ் பானையை கொண்டு வந்தார்கள். வீட்டிற்கு திரும்பியதும் பொங்கி உண்ணும் நிகழ்வை பாவனை செய்யதபோது மைதானம் முழுவதும் புல்லரித்து நின்ற சனத்திரள் கண்களில் நீர்வடிந்தது. தொடர்ந்து அரங்கில் பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அதனை சனத்திரள் ஒவ்வொரு சொற்களாக உரக்க ஒலித்தது.

"இனியும் எம்மால் இழுபட முடியாது. எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போகவேண்டும், இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள்''

"நமது இயல்பு வாழ்க்கையை நாம் கட்டியெழுப்பவேண்டும். அதற்கு வசதியாக தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அதிகாரபலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று கையளிக்கப்படவேண்டும். அந்த இடைக்கால அரசை சர்வதேசசமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம். தமிழர்களின் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேறி தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப வேண்டும். இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும் அச்சம் நிறைந்த இத்தகைய சூழலில் தமிழ்மக்கள் சமாதானம் பற்றிச் சிந்திக்க முடியாது.

தமிழ் மக்கள் அச்சமற்ற சூழ லில் சமாதான நடைமுறையில் செயல் முனைப்புடன் பங்குபற்றும் நிலைமை தோற்றுவிக்கப்படவேண்டும். அத்தகையதொரு சூழ்நிலையில் தமிழர்களின் அபிலாசைகளான தனித்தேசிய இனம், மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் பேச்சு நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு நீதியானதும் கௌரவமானதுமான ஒரு தீர்வுகாணப்படவேண்டும்.

அதனூடாகவே ஒரு நிரந்தர சமாதானம் சாத்தியம்'' என்று அவர்கள் பிரகடனம் செய்தார்கள்.

இப் பொங்குதமிழ் நிகழ்வில் பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த எஸ்.பத்மநாதன், சமன் அத்தாவுல்ல மற்றும் பௌத்தபிக்குகள், இந்து சமயகுருமார், கிறிஸ்தவ மத குருமார் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு ,உள்நாட்டு பத்திரிகையாளர்கள் என பலதரப்பினரும் கலந்துகொண்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பங்கேற்றிருந்தார்கள். இவர்கள் எல்லோர்மத்தியிலும் இந்தப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

40 ஆயிரம் சிறிலங்கா இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள யாழ்குடாநாட்டில் இரண்டு இலட்சம் மக்கள் திரண்டு இராணுவத்தை வெளியேறுமாறு கூறியிருக்கிறார்கள். இதனை சனநாயகம் , மனித உரிமை என்று பேசுபவர்களின் செவிகள் நிச்சயம் கேட்டாக வேண்டும். பதில் கூறியே ஆக வேண்டும் இது புறந்தள்ளப்படுமேயானால் சனநாயகம் என்பதை மதிப்பற்ற ஒன்றாக்கிவிடும். அமைதி வழியிலான வெகுஜனப் போராட்டத்தை வேறுவழிகளுக்கு மாற்றியமைத்தும் விடும்.

யாழ் மண்ணில் கடந்த 15 வருடங்களுக்கு பின் முதன்முறையாக வரலாறு காணாத சனத்திரள் பொங்குதமிழ் -2003ல் திரண்டதாக ஊடகங்கள் கூறுகின்றன. இதற்கு முன்பாக 1987ல் தலைவர் பிரபாகரன் சுதுமலை பிரகடனத்தை செய்த போது தான் மக்கள் பெருந் திரள் கூடியது. ஆக கடந்த 15 வருடகாலத்தில் கூடிய மக்கள் விடுதலைப்புலிகளுக்காகவே திரண்டுள்ளார்கள். அவர்களை ஏற்றுள்ளார்கள் என்று கூறிவிடலாம்.

விடுதலைப்புலிகள் பல்கலைக்கழகம் மூலமாக ஏற்பாடு செய்த ஒரு நிகழ்ச்சியே பொங்கு தமிழ் என சில சக்திகள் பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்தன. அதற்கு மத்தியிலும் திரண்ட மக்கள் விடு தலைப்புலிகளையே தமக்காக முன் மொழிந்திருப்பது அந்த சக்திகளின் கூற்றை அர்த்தமற்றதாக்கி விட்டது.

ஆனால் இப்போது சிறிலங்கா இராணுவமும், தமிழ் விரோத சக்திகளும் பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்களையும் கலந்து கொண்டவர்களையும் குறிவைத்துக் கொண்டுள்ளன. தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ்த்தேசியத்துக்கு எதிரான ஊடகங்கள் மாணவர்களை புலிகள் எனப்பட்டியல் இட்டு வருகின்றன. கடற்படையினர் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட மீனவர்கள் மீதுபாயத் தொடங்கியுள்ளார்கள். குறிப்பாக வடமராட்சிப் பகுதி மீனவர்கள் சனியன்று ,மீன்பிடிக்கச் சென்றபோது திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள். தமது அபிலாசைகளை வெளிப்படுத்தியமைக்காக இனிமேல் மீன்பிடிக்க இயலாது எனக் கூறப்பட்டுள்ளது.

உருமாறுவதே உலகம், நம் சிந்தனைகள் உருவாக்கியவாறே அமைகிறது உலகம். - மார்க்கஸ் சுரேலியஸ்

## தொடர் - 03

# தாமரைச்செல்வியின் பச்சை வயல் கனவு

நரிப்பிட்டிக்குளம் அந்த ஆவணி மாதத்தில் பெருமளவு வற்றிப்போய் கிடந்தது. நடுவே சிறியளவு தண்ணீரே இருந்தது. வடக்குக் கரையில் நாலைந்து புளியமரங்கள் கிளை பரப்பி நின்றன. தெற்குப் பக்கம் தரவைவெளி பரந்து கிடந்தது. அந்தப் பச்சை வெளியில் மாடுகள் தம்பாட்டில்மேய்ந்து கொண்டிருந்தன. மேற்குப் பக்கம் கூடல் கூடலாய் பனை மரங்கள். இந்த ஆவணி, புரட்டாதியில் பனம்பழங்களின் வாசனை எந்நேரமும் காற்றில் மிதந்து கொண்டிருக்கும். கிழக்குப் பக்கம் அவர்களின் கிராமம். கிராமம் தாண்டி தோட்டங்கள், வயல் வெளிகள்.

சூரியன் மேற்கில் சிவப்பாய் விழுந்து கொண்டிருந்த நேரம். தரவை வெளியில் கொக்குகள் மாடுகளுக்கு மேலாகப்பறந்துகொண்டிருந்த பொழுது. குளத்தில் மாடுகளை இறக்கி தண்ணீர் குடிக்க விட்டுக்கொண்டிருந்தான் சிவம். அவனுக்கு அருமையான சிவலையும், வெள்ளையும் அடுத்த வாரம் நவக்கிரியில் நடக்கப்போகின்ற மாட்டுச்சவாரியில் கலந்து கொள்ள தயார் நிலையில் அவை இருந்தன. பச்சை அரிசிமாவும், உழுந்தும், தவிடும் கொடுத்து பராமரிக்கப்பட்டு இரண்டும் கொழுகொழுவென்றிருந்தன.

ஆறு மாதத்திற்கு முன்னால் புன்னாலைக்கட்டுவன் ஈவினையில் நடந்தமாட்டுச்சவாரிப் போட்டியில் அவன் தான் முதல் பரிசு எடுத்திருந்தான். இம்முறை நவக்கிரியில் பெரிய அளவில் சவாரி நடக்க இருக்கிறது. இதிலும் முதல் பரிசு எடுக்க வேணும். இந்த சந்தோசத்தை விட்டு விட்டு அவனால் கிளிநொச்சிக்கு எப்படிப் போக முடியும்...

இப்போது வீட்டில் அப்பு முகம் கொடுத்துப் பேசுவதில்லை. காச்சல் வந்து படுக்கையில் போட்டு விட்டபடியால் வேலாயுதமும் இன்னமும் கிளிநொச்சிக்குப் போகவில்லை. இம்முறை கொஞ்சம் நெருக்கடி ஏற்படத்தான் போகின்றது. குறைந்த பட்சம் இந்த சவாரிப் போட்டி முடிய வருவதாகச் சொல்லி இப்போதைக்குத் தப்பித்துக்கொள்ள வேண்டியதுதான்.

அவனுக்கு கிளிநொச்சியை நினைத்தாலே பயமாக இருந்தது. பாம்புகளும் யானைகளும், நுளம்புகளும் உள்ள இடம். யானைகளுக்குப் பயந்து இரவெல்லாம் பெரிதாய் நெருப்பு எரித்துக் கொண்டிருக்க வேண்டுமாம். தகரத்தில் அடித்து சத்தம் எழுப்ப வேண்டுமாம். இந்த அண்ணை எப்பிடித்தான் அங்க அந்தக் காட்டுக்க போய் இருக்கிறாரோ என்று அலுத்துக்கொண்டான்.

பிரயாணத்தை நினைக்கும் போது இன்னமும் அலுப்பு ஏற்பட்டது. கண்டிப் பாதையால் யக்கச்சி கடந்து போவது சரியான தூரம். இங்கே உள்ள சிலர் கச்சாய் கரையில் வள்ளம் பிடித்து கடலில் பிரயாணம் செய்து அந்தப்பக்கம் சுட்டதீவுக் கரையில் இறங்கி குஞ்சுப்பரந்தன் போவார்கள். குஞ்சுப்பரந்தனிலிருந்து கிழக்கு நோக்கி நடந்தால் பரந்தன் வரும். இது சுருக்கமான பிரயாணம் தான். ஆனால் வள்ளத்தில் ஏறுவதற்கு பயந்து அனேகமானோர் தூரம் என்றாலும் யக்கச்சி வழியான தரைப்பாதையைத்தான் பயன்படுத்துகிறார்கள்... கரிக்கோச்சி நாளுக்கு ஒரு தடவை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரைபோய் வரும். அந்த நேரம் காத்திருந்து ஏறிப்பிரயாணம் செய்ய வேண்டும் முப்பது சதம் எடுப்பார்கள். காசுச் செலவை நினைத்து மாட்டுவண்டிலில் பிரயாணிப்பதே அவர்களுக்குச் சுலபமாக இருந்தது.

சூரியன் மேற்கே பனங்கூடல்களுக்குள் சரிந்துகொண்டிருந்தது. தண்ணீர் குடித்த மாடுகளை வெளியே கொண்டு வந்தான் சிவம். தரவை வெளி கடந்து வீடு வந்து சேர்ந்தபோது மெல்லியதாய் இருட்டி விட்டது. மாடுகளைக்கட்டிவிட்டு வீட்டுக்குள் வந்தான்." நான் நாளைக்கு கிளிநொச்சிக்குப் போகப் போறன் அப்பு." வேலாயுதம் சொல்லிக் கொண்டிருந்தான். "அதுக்குள்ள ஏன் மோனை, இப்பத்தானே காச்சல் விட்டுக் கிடக்கு. உந்தக் காச்சல் வாய்க்கு நாளைக்கு ஒடியல்கூழ் காய்ச்சுவம் எண்டு இருக்கிறன்.அவன் சின்னத்தம்பியிட்ட மீனுக்கும் சொல்லி வைச்சிட்டன்." வேலாயுதம் பேசாமல் இருந்தான். அவனுக்கும் ஒடியல்கூழ் குடிக்கவேணும் போல இருந்தது. கசந்து கொண்டிருக்கும் வாய்க்கு அதுதான் சுள்ளென்று இதமாக இருக்கும். கிளிநொச்சியில ஆன சாப்பாடும் இல்லை. காலமை ஒரு சோறு, ஒரு கறி காச்சினால் மூன்று நேரமும் அது தான் சாப்பாடு. அவன் சாப்பாடு தண்ணி இல்லாமல் கிடக்கிறானே என்பது தான் ஆச்சிக்குப் பெரிய கவலை. "அப்புவோட தோட்டத்தறையையும் இருக்கிற பரப்பு வயலையும் பார்த்துக் கொண்டு இங்க இருக்க ஏலாதே மோனை. ஏன் தூர இடத்துக்குப்போய் அலைய வேணும். ஆச்சி ஆதங்கத்துடன் கேட்டாள். " இங்க உழைக்கிறது சீவியத்துக்குத்தான் வருமணை. அதுக்கு மேலால ஒரு வசதியும் கிடைக்காது." "சீவியத்துக்கு வந்தால் போதும் தானே மோனை." அதற்கு மேல் வேறு என்ன தேவைகள் இருக்கும் என்று ஆச்சிக்குபுரியவில்லை.

"சாப்பிட்டால் மட்டும் காணுமேணை. கிளிநொச்சி தங்கப்பவுண்மாதிரி மண் உள்ள பிரதேசம். இருந்து பாரணை ஒரு காலத்தில எப்பிடிவரும் எண்டு. அந்த மண்ணில பாடுபட்டால் நல்லாய் வந்திடலாம். என்ர மனதுக்கு அப்பிடித்தான் படுது." வேலாயுதத்தின் பேச்சு ஆச்சிக்கு அவ்வளவு புரிபடவில்லை. தன் பிள்ளை எப்போது இவ்வளவு ஆசையுள்ளவனாய் மாறினான் என்பது தெரியாமல் ஆச்சி விழித்துக் கொண்டு நின்றாள்.

சிவம் குசினிக்குள் நுழைந்து அன்னத்திடம் கேட்டான். "இரவுக்குச் சாப்பிட என்னடி இருக்கு." " பைத்தங்காய்ப்புட்டும் கருவாட்டுக் குழம்பும் இருக்கு. இப்ப சாப்பிடுறியே" " போட்டுத் தா சரியாய் பசிக்குது." குசினித் தாழ்வாரத்து மேல் தடியில் கொழுவியிருந்த பனை ஓலையால் கோலிச்செய்திருந்த தன் தட்டுவத்தை எடுத்துக்கொடுத்தான். "விளையாட்டு உனக்குக் கூடிப் பேச்சு. அதுதான் சாப்பிட்டது கெதியில செமிச்சுப்போகுது." அவன் திரும்பி முறைத்துப்பார்த்தான் " பேசாமல் போட்டுத் தா. நான் அங்கால கொண்டு போய் சாப்பிடுறன்."

குசினிக்குள் சிவத்தின் நடமாட்டத்தை அவதானித்து விட்டு அப்பு கேட்பது இவனின் காதிலும் விழுந்தது. "உவன் என்னவாம். கேட்டனியே" தெருவைப்பார்த்துக் கொண்டே ஆச்சியிடம் கேட்டார். ஆச்சி பேசாமல் நின்றாள்.

" இஞ்ச... என்னவாம் தமயனோட போறானாமா?" அப்பு உரத்த குரலில் கேட்டார். " தான் போகேல்லையாம்." ஆச்சியின் பயந்த குரல். எப்போதுமே ஆச்சியின் அபிப்பிராயங்கள் அங்கு கேட்கப்படுவதில்லை. அப்பு சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்பவள் அவள். " அப்ப என்னவாம் செய்யப்போறான்." யாரும் பேசவில்லை. சிவம் மெல்லிய குரலில் அன்னத்திடம் சொன்னான். " மாட்டுச் சவாரி முடியட்டும். பிறகு பாப்பம் சொல்லிவிடு." அவன் தட்டுவத்தை எடுத்துப்போய் தாழ்வாரத்தில் அமர்ந்துகொண்டு சாப்பிடத் தொடங்கினான். கருவாட்டு ருசி நாக்கில் சுள்ளென்றது. ஆச்சியின் கை மணம் அப்படியே அன்னத்திற்கும் வந்திருக்கிறது.

சாப்பிட்டுவிட்டு தட்டுவத்தை கழுவி மறுபடி மேல் வளையில் கொழுவி விட்டான். அன்னத்திடம் திரும்பி " கொஞ்சம் பச்சரிசி இடிச்சுத்தாறியேடி. தவிட்டோட குழைச்சு வெள்ளைக்கும், சிவலைக்கும் வைக்கவேணும்."

" கொஞ்சம் பொறு. எல்லாரும் சாப்பிட்ட பிறகு இடிச்சுத்தாறன். சவாரி நாள் கிட்ட வர வர புத்தூர் நிலாவரையில் இருந்தெல்லாம் உன்னைத் தேடி ஆட்கள் வரத்தொடங்கியிட்டினம்." "இந்த முறையும் வெண்டு காட்டுறன். இருந்துபார். நாலுபேரோட பந்தயம் கட்டியிருக்கிறன்." "அப்புன்ர காது கேட்க கதைக்காத. நட்டக் காசு ஆர் கட்டுறது எண்டு கேட்டிடுவார்." "உனக்கும் வாய் கூடியிட்டுது."

சிவம் முன் புறம் தலைவாசலில் திண்ணையில் வந்து அமர்ந்துகொண்டான். ஆவணி மாதத்திற் குரிய வரண்ட காற்று. எதிரேயுள்ள வெட்டைக் காணிக்குள் நின்ற பனை மரங்கள் இருள் வடிவமாய் தெரிந்தது.



முற்றத்து வெள்ளை மணல் மெல்லிய நிலவு வெளிச்சத்தில் பளபளப்பாய்த்தெரிந்தது. வளர்பிறைக் காலம். சிவம் பனை ஓலைப் பாயை விரித்துப்படுத்துக்கொண்டான். சிறிது நேரத்தில் வேலாயுதமும் வந்து பக்கத்தில் பாயை விரித்துப் படுத்துக்கொண்டான். என்ன இருந்தாலும் தமயனுக்கு நேராக எதிர்த்து சிவத்தினால் ஒரு போதும் பேச முடியாது. தன்னை விட அண்ணனுக்கு உலக விடயம் அதிகமாகவே தெரியும் என்ற ஒரு எண்ணம் எப்போதுமே சிவத்துக்கு உண்டு. குசினி வாசலில் உரலை நிறுத்தி அன்னம் அரிசி இடிக்கத் தொடங்கினாள். உலக்கை போடும் சத்தம் தாளம் தவறாமல் ஒரே சீராகக்கேட்டுக் கொண்டிருந்தது.

"சிவம்"

"ஏன் அண்ணை" சிவம் சட்டென்று எழுந்து அமர்ந்து கொண்டான். "நீ ஏன் கிளிநொச்சிக்கு வரமாட்டன் எண்டு சொல்லுறாய்." சிவம் பேசாமல் தலையை குனிந்து கொண்டிருந்தான்.

"கிளிநொச்சியை ஒரே காடு எண்டு நினைப்பாய். இப்ப இப்ப அங்க சனங்கள் வந்து குடியேறிக்கொண்டிருக்குதுகள். குடியேற்றத்திட்டத்தில கனபேருக்குக் காணியள் குடுக்கினம். முந்திக்குடுத்த கணேசபுரம், வட்டக்கச்சி யெல்லாம் சனங்கள் இருக்குதுகள். இப்ப நான் பரந்தனுக்குப் பக்கமாய் அஞ்சாம் வாய்க்கால் எண்ட இடத்தில தான் குத்தகைக்கு எடுத்து வயல் செய்யிறன். வயல்கரையில தான் கொட்டில் போட்டு இருக்கிறன். எப்படியும் எங்களுக்கு எண்டு ஒரு காணி எடுத்திட வேணும். நீயும் என்னோட வந்தியெண்டால் உனக்கெண்டும் ஒரு காணி எடுக்கலாம்"

எனக்கெண்டு ஒரு காணியா....சிவம் திகைத்துப்போய்ப் பார்த்தான். " இங்க எப்பிடித்தோட்டம் கொத்தினாலும் முன்னேற ஏலாது. ஆனால் அங்க நெல்லு விதைச்சால் கூடின லாபம் எடுக்கலாம். தங்கச்சிக்கு காதுக்கு நகையள் செய்யேல்லையே. இப்பவும் ஆச்சியிட்ட சிறுபோக நெல்லு வித்து முப்பது ரூவா குடுத்தனான். தங்கச்சிக்கு சங்கிலி செய்து குடுக்கச் சொல்லி. அங்க கொண்டு வந்து விற்கிற சோனக வியாபாரியிட்ட இவளுக்கு ஒரு சிலுக்குச் சீலையும் வாங்கி வந்து குடுத்திருக்கிறன். அங்க நெல்லுக் குடுத்து இதுகளை வாங்கலாம். நீயும் என்னோடவா. கஸ்ரப்பட்டு உழைச்சால் முன்னேறலாம். கொஞ்சம் வசதியாய் இருக்கலாம். உடையார் வீடு மாதிரி கல்வீடு கட்டலாம். கார் வைச்சிருக்கலாம். குழப்படி எண்டு வீட்டை விட்டு கலைபட்டு ஓடிப் போன வெற்றிவேலர் வெள்ளைக்காரரோட சேர்ந்து நிண்டு இண்டைக்குக் கிளிநொச்சியில பெரிய ஆளாய் வந்திட்டார். இரணைமடுக்குளம் கட்டிறபோது வெள்ளைக்காரருக்கு எடுபிடி வேலைசெய்தவர். அவையள் போகேக்க அவரை விதானையாக்கிப் போட்டுப்போனவை. இப்ப காணி பூமி எண்டு எவ்வளவு வசதியாய் இருக்கிறார். இப்ப மீசாலை, சாவகச்சேரியிலிருந்து கனசனம் அங்க வந்து காணி எடுத்து இருக்குதுகள். சிங்களச் சனம் கூட வந்து இருக்குதுகள்." "சிங்களச் சனங்களோ."

" ஓமடா. பண்டா, அருநோசு எங்களுக்கு பக்கத்து காணியளிலதான் இருக்கினம் அதுவும் மனிசி பிள்ளையளோட இருந்து வயல் செய்யுதுகள். இரணைமடுக் குளத்தை விரிவாக்கி கட்டிக்கொண்டிருக்கினம் அதால இரண்டு போகமும் வடிவாய்ச் செய்யலாம். அந்த மண்ணில பாடுபடுறது வீணாய்ப் போகாதடா. வாவன்."

கொஞ்ச நேரத்திற்கு நரிப்பிட்டிக் குளமும், புளிவெட்டையும்,தரவை வெளியும்,நவாக்கிரிசவாரித்திடலும் மறைந்து போக ஒரு புதிய களம் மனக்கண் முன் விரிந்தது. சிறுபொறி அவன் மனதில் அந்த வினாடியில் விழுந்தது. போய்ப் பார்த்தால் தான் என்ன என்ற எண்ணம் ஒரு தடவை தோன்றி மறைந்தது. " சரி அண்ணை ஒருக்கா வந்து பார்க்கிறன்."

(தொடரும்)

***"அப்புவோட தோட்டத் தறையையும் இருக்கிற பரப்பு வயலையும் பார்த்துக் கொண்டு இங்க இருக்க ஏலாதே மோனை. ஏன் தூர இடத்துக்குப் போய் அலைய வேணும். ஆச்சி ஆதங்கத்துடன் கேட்டாள்." இங்க உழைக்கிறது சீவியத்துக்குத் தான் வருமணை. அதுக்கு மேலால ஒரு வசதியும் கிடைக்காது." "சீவியத்துக்கு வந்தால் போதும் தானே மோனை." அதற்கு மேல் வேறு என்ன தேவைகள் இருக்கும் என்று ஆச்சிக்குப்புரிய வில்லை.***

சிறந்த சாதனைகள், பெரும்பாலும் இளமையின் சாதனைகளே! - பெஞ்சமின் டிஸ்ரேலி

மன்னார் - மாதோட்டம்- அருள்மிகு திருக்கேதீச்சரப் பெருமான் திருக்கோயில்



# திருக்குடத் திருமஞ்சனப் பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்பிதழ்



06-07-2003

## மன்னார் அரச அதிபர் அவர்களின் ஆசிச்செய்தி.

ஈழத்துச் சிவாலயங்களில் மிகவும் பழமைவாய்ந்ததாகவும், நாயன்மார்களால் பாடல் பெற்ற பெருமைக்குரியதாகவும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டதாகவும் திருக்கேதீச்சர சிவாலயம் அமைகிறது.

கேது வழிபட்டமையால் கேதீச்சரம் என்றும், மகாதுவட்ட என்னும் தேவதச்சன் பூசித்து வணங்கியமையால் மகா துவட்டபுரம் என்றும் பெயர் பெற்றதாகக் கூறப்படுகின்றது. மகாதுவட்டபுரமே மருவி மாதோட்டம் எனவும் பெயர் பெற்றதாக கந்தபுராணம், தட்சின கைலாய மான்மியம் போன்ற நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. மகாதுவட்ட இராமாயண காலத்திற்கு முற்பட்டவராக இருப்பதனால் திருத்தலத்தின் பழமையை அறிய முடியாதிருக்கின்றது.

இவ்வாலயம் போர்த்துக்கேயரின் வருகையால் வரலாற்றில் இருள்சூழ்ந்த காலமாகக் கருதப்படுகிறது. 318 ஆண்டுகளாக இருள்சூழ்ந்த நிலையில் நீடித்து வந்த போது சைவமும், தமிழும் வளர்த்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானே இவ்வாலயச்சூழலை தேடிக்கண்டறிய காரணமாக இருந்துள்ளார்.

மீண்டும் பாரிய சிதைவுகளுக்குப்பின் 1952ம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகமும், அதனைத்தொடர்ந்து 1963, 1976 ம் ஆண்டுகளில் இரண்டு கும்பாபிஷேகமும் இடம்பெற திருவருள் பாலித்திருந்துள்ளது. 1990 தொடக்கம் 2002ம் ஆண்டு வரையான ஒரு கும்பாபிஷேக காலம் இருள்சூழ்ந்த காலமாக இருந்துள்ளது. இவ்வனர்த்தங்களின் பின் 06-07-2003 இல் மகாகும்பாபிஷேகம் இடம்பெற திருவருள் கைகூடியுள்ளது ஒரு வரலாற்றுச் சிறப்பம்சமாகும்.

அருள் மிகு கௌரி அம்பாளுடனுறை திருக்கேதீச்சரப் பெருமானுக்கு ஆறுகாலப்பூசைகளும் இடம்பெறுமெனின் நாட்டின் சமாதானமும் சாந்தியும் ஏற்பட்டு நற்பலன்களும் புண்ணிய காரியங்களும் கூடிவரும் என்பது இந்து மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

ஆலயப்பசு கோமாதாவுக்கு வேறெங்கும் இல்லாத விதமாக இவ்வாலயத்தில் தினமும் பூசை நடைபெறுவது ஒரு சிறப்பம்சமாக உள்ளது. அத்துடன் திருமுறை, வேதாகம பொக்கிஷங்கட்கும் இவ்வாலயத்தில் தினமும் விசேட பூசை இடம்பெறுவது வழக்கம்.

இவ்வாலயத்தினைச் சூழவிருந்த முப்பதுக்கும் மேற்பட்ட மடாலயங்கள் சேதமுற்றநிலையில் உள்ளன. நாடளாவிய ரீதியில் உள்ள இந்து அடியவர்களின் அன்பளிப்பால் சிவராத்திரி மடம் கட்டப்பட்டு வருகிறது. இக்கால கும்பாபிஷேக நாட்களிலும் மண்டலாபிஷேக நாட்களிலும் மகேஸ்வர பூசை (அன்னதானம்) நிகழ எம்பெருமான் திருவருள் கூடிவருவதும் நல்ல தொண்டர்களை அமைகிறது. அருள் மிகு கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் இடம் பெற அந்தணர்கள் சூழ்ந்து நிற்க அடியார்கள் போற்றி நிற்க கோபுரம் எங்கும் திருமுடி போற்றும் காட்சியைக் காணும் பொன்னான மலருக்கு எமது ஆசி-வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் ஆனந்தம் அடைகின்றேன்.

"எங்கும் மங்களம் பொங்க
தொண்டர் நாள்தோறும்
துதி செய அருள் செய்
கேதீச்சரமதுதானே"

வே. விஸ்வலிங்கம்
அரசஅதிபர்
மன்னார்.

## நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வரின்

### அருளாசிச் செய்தி

இறை அன்பர்களே,

இலங்கையின் வடபால் கோயில்கொண்டெழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் திருக்கேதீச்சர நாதனுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சிவபூமி எனப் போற்றப்படும் ஈழமணித்திருநாட்டில் இரு கண்ணெனப் போற்றப்படும் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாக திருக்கேதீச்சரம் விளங்குகிறது. நவக்கிரகங்களில் ஒன்றாக விளங்கும் கேது பகவானால் பூசிக்கப்பட்டதும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரால் போற்றிப்பாடப்பட்ட இத்தலம் ஈழத்தமிழர்களின் தனித்துவத்தையும் பழமையையும் காட்டுகின்றது. மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்றது இத்தலம். மூர்த்தியாக கேதீச்சரநாதனும் தீர்த்தமாக பாலாவியும் விருட்சமாக மாமரமும் இத்தலத்தில் காணப்படுகின்றது.

"தொண்டர் நாள் தொறுந் துதிசெய்ய அருள் செய்
கேதீச்சரமது தானே"

தொண்டு செய்து பூசித்தால் அருள் செய்யும் இறைவனாக வீற்றிருக்கிறார். இக்கும்பாபிஷேகம் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அருள் கிடைப்பதாக அமைகின்றது. இக் கும்பாபிஷேகத்தை கண்ணால்ப் பார்த்து மனதால் அனுபவித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக எல்லாவற்றிற்கும் காரண காரியராக இருக்கும் இவ் இறைவனை வழிபாடு செய்து நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கப் பிரார்த்திப்போமாக. இக் கும்பாபிஷேகத்தை சிறப்புச் செய்து மலர் வெளியிடும் ஈழநாதம் தினத்தாள் நிறுவனத்தையும் வாழ்த்துகின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**


திருக்கேதீச்சரத்தான் அருள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.



வவுனியா மாநகரில் புதியதோர் உதயம்

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

எங்களிடம் மலிவான விலையில்
தரமான அலுமினிய பார்வகை,ஒட்டுப்பலகை, MDF போட்,
PVC வெள்ளைபோட், சிப்போட், எம்போஸ் சீட், தரைவிரிப்புகள்,
ரெக்சின் வகை, வெல்வெட் துணிபிளைவுட் கதவுகள்,
போமிக்கா சீட், குசன் செற்றிகள், அனைத்து வகையான,
கைப்பிடிகள், பூட்டுகள், VHF,UHF CELTAL ANTNA செய்ய
தேவையான பொருட்கள் சகல விதமான கண்ணாடி வகைகள்,
மெகி போட், நோட்டீஸ் போட், கூலின் ஸ்ரிக்கர் வகைகள்,
சகலவிதமான அலுமினிய பிட்டிங் வேலைகள் என்பவற்றிற்கு

விநாயகா
டிரேட்சென்ரர்

இல: 102, முதல் மாடி, பஸ் நிலைய கட்டடம் வவுனியா T.P 071-2355563
(சி -.7999)


சிறப்பிதழ்க்
— காலையரான் —


கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்றோம்.

எம்மிடம் பிற்றிங் வேலைகள், கட்டடங்களுக்கான கதவு,
ஜன்னல்,கேட்டின் பிட்டிங், பென்டரி கபட் பிட்டிங்,
வியாபார ஸ்தாபனத்திற்கு தேவையான சோகேஸ்கள்,
கண்ணாடி சோரூம், ராக்கைகள் என்பன மற்ற
இடங்களைவிட குறைவான விலையில் கூடுதலான
உறுதியுடன் செய்து பெற்றுக்கொள்ள

விஜயா அலுமினிய பிட்டிங் சென்ரர்

இல.95, பஸ் நிலைய மேல்மாடி, வவுனியா. (சி-8000) T.P 024-20034





மகாகும்பாபிஷேகப் பெருவிழா
சிறப்புற நடைபெற
கௌரியம்பாள் உடனுறை
திருக்கேதீச்சரப் பெருமானின்
பாதாரவிந்தங்களை பணிந்து
நிற்கின்றோம்.

தரம்குன்றா 22கரட் தங்க நகைகள்

நங்கையரின் அழகுக்கு மேலும் மெருகூட்டும்
நவீன வடிவமைப்புகள்.

தங்க நகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

கணேசா நகையகம்

123,பஜார் வீதி, வவுனியா T.P - 024-22464

கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7990)

யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு.



வங்கம் மலிகின்ற கடல் மா தோட்ட நன்னகரில் வீற்றிருந்து
அருள் பாலிக்கும் கேதீச்சர நாதனின் நல்லருள் அனைவருக்கும்
கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

இலகு
தவணைக் கட்டண முறையில்
இரண்டு வருட உத்தரவாதத்துடன்
புதிய கணனிகளைப் பெற்றுக்கொள்ள



(உடன் நாடுங்கள்)

விரையுங்கள்!!!

NORTHERN TECHNOLOGY (PVT) LTD.

இல. 52, 2ம் குறுக்குத்தெரு,
புறக்கண்டி வீதி,
வவுனியா.

T.P 024-21649

(சி-7991)



மன்னார் - மாதோட்டம்- அருள்மிகு கௌரி உடனுறை திருக்கேதீச்சரப்

# திருக்குடத் திருமஞ்சனப் பெருஞ்சாந்திப்


திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழா
நடைபெறும் திருக்கேதீச்சரத்தான் அருள்
நாடெங்கும் பிரகாசிக்க வேண்டுகின்றோம்.

மட்டுப்படுத்தப்பட்ட மன்னார்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

தலைவர்,பொதுமுகாமையாளர்.
பணிப்பாளர்,பணியாளர்கள்.

வயல் வீதி, மன்னார். (சி-7978)



மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்
திருக்கேதீச்சரப் பெருமானின்
பேரருள் எல்லோருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

புத்தொளிரும்
புது நகைகளை
புதுமையுடன்
தயாரிக்கும்
ஒரேஸ்தாபனம்

எஸ்.எம்.எ.ஜுவல்லரி

பெரியகடை, மன்னார். (சி-7979) ☎-023- 2232072



திருக்கேதீச்சரப் பெருமானின் பாதங்களை
பணிந்து நிற்கின்றோம்.

மன்னார் நகரில்
மங்கையர் மனங்கவரும்
தரமான தங்க நகைகளுக்கு
என்றும் நாடுங்கள்

நியூ காயத்திரி கோல்ட்ஹவுஸ்

இல. 45, புதிய பஸ் நிலையம், மன்னார். (சி-7989)



06.07.2003 அன்று மஹாகும்பாபிஷேக
பெருவிழா நடைபெறும் திருக்கேதீச்சர
நாதனின் இறையன்பும், இரக்கமும்
இந்நாளில் எல்லோருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பலலட்சம்ரூபா பெறுமதியான
வாகனங்களுக்கு நீடித்த ஆயுளை
பெற்றுக் கொள்ள எமது வாகன
சுத்திகரிப்பு நிலையத்தை நாடுங்கள்.

ஜெகன் சேர்விஸ் பிளேஸ்

சூசைப் பிள்ளையார்குளம் வீதி, வவுனியா ☎ 024- 22034
(சி-7986)


## ஈழநாட்டுப் பழம்பெரும்பதி திருக்கேதீச்சரம்

**மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை**
**கூருமிம் வானின் இலங்கைக் குறியுறுஞ்**
**சாருந்தில்லை வனத் தன்மா மலயத்தூ**
**டேறுஞ் சுழுனையிவை சிவபூமியே**

எனச் சிறப்பாகத் திருமந்திரத்தில் கூறப்படும் ஈழநாட்டில் கீர்த்தி வாய்ந்த அதிபுராதன சிவாலயங்கள் பலவுள. அவற்றுள் முக்கியமானது திருக்கேதீச்சரத் திருத்தலமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன மூன்றும் முறையாக அமைந்தபதி திருக்கேதீச்சரம். கேது,மயன்,மகாதுவட்டா, மண்டோதரி, இராமன், அகத்தியர் முதலாம் பெருந்தவத்தோர்கள் குறைநீங்க வழிபட்டு அருள் பெற்றுய்ந்த வரலாறுடைய தலம் இதுவாகும் தேவர்கள் இங்கு அர்த்தசாமப்பூசை செய்வதாக ஓர் ஐதீகமும் உண்டு.

இந்நாட்டு ஆதிக் குடிகளாகிய நாகர்களது தலையாய வணக்கத் தலமாக விளங்கியதும் கேதீச்சரமேயாகும். இதனால் நாகநாதர் எனும் பழம்பெயரும் கேதீச்சரப் பெருமானுக்கு உண்டு.

7ஆம் 8ஆம் நூற்றாண்டு களில் வாழ்ந்த சிவானுபூதிச் செல்வர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தேவாரத் திருப்பதிகங்கள் பாடப் பெற்ற பேரருள் மிக்கபெருஞ்சிவத்தலம் இதுவாகும். சோழரும், பாண்டியரும் திருப்பணிகள் பல செய்ததுவும், வன்னிநாட்டரசரதும், யாழ்ப்பாணத் தரசரதும் இறை உணர்ச்சியால் நித்திய நைமித்தியங்கள் நியமமாகச் செய்து வளர்க்கப்பட்ட பெருமைக்கு உரியதுமான பெரும்பதி இதுவாகும். இத்திறச்சீருஞ்சிறப்பும் பழம் பெருமையும் மகிமையும் வாய்ந்த ஈழத்தமிழரின் இப்புண்ணிய திருத்தலம் காலச்சுழற்சியில் சிக்குண்டு சிதைவுற்று அழிந்து மண்மேடாகும் நிலை ஏற்பட்டது. இது கி.பி. 1540க்கும் 1589க்கும் உட்பட்ட காலமாகக் கருதப்படுகிறது.

திருக்கேதீச்சரம் இருக்கும் இடம் "வன்னி நாடு" என்று கூறப்படும். இவ்வன்னி நாடு 3000 சதுரமைல் பரப்பளவு கொண்ட தாகும். இவ்வன்னி நாட்டிலுஞ் சிறப்பாக திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் வேறும் பல திருத்தலங்கள் அக்காலத்தில் இருந்ததாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவர்கள் கூற்றுப்படி திருக்கேதீச்சரம் அந்நாளில் ஒரு கோயிற்பட்டினம் (City of Temples) என்பது ஆகும். அந்நாளில் இவ்வாலயக் கோட்டஞ் சிற்பத்தில் வல்ல பகுதிகளுக்கு உறை விடமாகவும் இருந்ததாகவும் கருதப்படுகிறது. இன்று காடு மண்டிக் கிடக்கும் வளமிக்க வன்னிப்பிரதேசத்தில், திருக்கேதீச்சரம் போன்று பல உன்னத சிவாலயங்கள் இருந்திருக்கின்றன என்பதும் அவை இன்று கண்ணுக்கு எட்டாது அழிந்தும் மறைந்துங் கிடக்கின்றன என்பதும் அகழ்வாராய்ச்சியாளர் தேற்றமாகும்.

இத் திருக்கேதீச்சரத் தலத்துக்கு வேறு எப்பாடல் பெற்ற சிவதலத்துக்கும் இல்லாத தனிச்சிறப்பொன்று உண்டு. அது கோயிலோ - உருவமோ - பூசையோ யாதொன்றுமே இன்றி மூன்று முழு நூற்றாண்டுகளுக்கு மேலான காலம், தமிழ் வேதமாகிய தேவாரத்திருவுருவில் மட்டுமே கேதீச்சரப்பெருமான் உறைந்திருந்தார் என்பதாம்.

இந்நிலைக்கு உள்ளாகி இருந்த இத்திருப்பதியின் பழைய இடத்தைக் கண்டறிந்து,


திருக்கேதீஸ்வர ஆலைய முகப்புத் தோற்றம்

அதில் கோயில் எடுத்துப் பழைமையை நிலைநாட்ட வேண்டுமென்ற முயற்சியில் முதல் முதல் ஈடுபட்டவர் 19ஆம் நூற்றாண்டில் சைவத்தின் விடிவெள்ளியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் ஆவர். "மன்னாருக்குச் சமீபத்தில் உள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்று உளது. அங்கு மருந்தொன்று மறைந்திருக்கின்றது. அதனைச் சென்றடையுங்கள" என அங்கிரச ஆண்டு ஐப்பசி மாதம் (1872) சைவ உலகிற்கு விஞ்ஞாபனம் ஒன்றை நாவலர் பெருமான் விடுத்தார்.

விஜய ஆண்டு கார்த்திகை 29 ஆம் நாள் (13.12.1893) புதன்கிழமை அவிட்ட நன்நாளில் பழைய கோயில் இருந்த இடத்தோடு கூடிய 43ஏக்கர் 3றூட் 33பேர்ச் காடடைந்த நிலம் நாட்டுக் கோட்டை நகரத்தவராகிய சைவப் பெரியார் ராம அரு. பழனியப்பச் செட்டியார் அவர்களால் யாழ்ப்பாணக்கச்சேரியில் 3,100 ரூபா விற்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

1894 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வண்ணை சைவத்திருவாளர் சி.த.மு.பசுபதிச் செட்டியார் மேற்கொண்ட முயற்சியால் ஜய ஆண்டு ஆனிமுதலாம் நாள் (13.06.1894) புதன்கிழமையன்று பழைய ஆலயம் இருந்த இடமும் தீர்த்தக் கிணறு ஒன்றும் பழைய ஆலயப் பிரதிட்டாலிங்கம் ஒன்றும் திருநந்தி சோமாஸ்கந்தர் கணேசர் ஆகிய மூர்த்திகளது சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன.

இன்று கோயிலுள்ள
சிறுகோயில் ஒன்றைக்கட்டி நூத
செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு சோப
ஆனித்திங்கள் 14 ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை வளர்பிறைச்
அவிட்ட நட்சத்திரமும் கூடிய
முதலாவது திருக்குட முழுக்குச் செ
பின்னர் பெருமானுக்கு நித்
செய்யப்படுவதற்கேற்ற ஒ
செய்யப்பட்டன. மேலும் தொ
திருப்பணிகள் செய்யப்பட்டு கி.
இன்னொரு குடமுழுக்கும் செய்யப்

இப்புதிய ஆலயமும்
காடுமண்டிக்கிடந்ததினால் இதன
வேண்டிய நிலை இந்நாட்டுச்
ஏற்பட்டது. பல சைவப்பெரியோர்க
ஆண்டு செய்த முயற்சியினால்
சைவர்களை விழிப்படையச்
திருக்கேதீச்சரத்தைப் பழை
நிலைக்குக் கொண்டுவர வேண்
காரணமாகவும் ஈழத்துச் சிவனடியா
என்ற பெயரில் இயங்கிவந்த சை
தொண்டர்கள் சார்பில் 1948ஆம் ஆ
03ஆம் 4ஆம் திகதிகளில் திருக்
சைவமாநாடு ஒன்று கூ
அம்மாநாட்டிற்கு நாட்டின் ப
இருந்தும் தகைசான்ற சைவப் பெ
வருகை தந்திருந்தனர். அன்று
மாநாடு திருக்கேதீச்சரம் பு
பெறவேண்டுமென்ற பெருவி
நாடுமுழுவதிலும் ஏற்படுத்திய
விருப்பை அடித்தளமாகக் கொண
28இல் கொழும்பு பம்பலப்பிட்
கதிரேசன் கோயிலில் கூட்டிய மன்
சபைதான் இன்றைய திருக்கே
திருப்பணிச்சபை ஆகும். இ
சபையாரின் வேண்டுகோள்படி த
சேர்ந்த திருவாளர்கள் மு.
ஸ்தபதி, மு.செல்லக் க
ஆகியவர்களினால் கோயிற் சி
முறைப்படி வரைவு செய்யப்பட்டு
ஈசானசிவாசாரியர், அச்சுவேலி சிவ
குருக்கள், சைவப்பெரியார் சு.சி
கட்டடக்கலைஞர் வி. நரசிம்ம
அங்கீகாரம் பெற்றவரைபடத்து
சுவாமி அம்பாள்கோயிற் க
அவற்றோடிணைந்த அர்த்த மண
பகுதிகள் கருகற்திருப்பணியாக
இராசகோபுரம் விநாயகர் முத
கோட்டங்கள் பலவும் கலை
நாட்டின் நாற்றிசையோரதும்,
நாடுகளாகிய மலேசியா, சிங்கப்
ஆகியவற்றில் வதிகின்ற அ
உபசரிப்பான பெரும் பொருட்
பேரறிவும் கண்களே கொள்ளும்
பெருங் கோயில் நளஆண்டு
(4.7.76) ஆண்டவன் சித்
வல்லோரால் விதித்த நல்லோ
முழுக்கு இலட்சோபலட்சம் அடி
களித்து ஆனந்தக் கண்
நடைபெற்றது.

திருக்கேதீச்சரத் திருப்
நகரத்தாரிடமிருந்து கோயிலை
பின்னர் திருப்பணிபல செய்து


கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானின்
நல்லருள் இன்றைய நன்னாளில் அனைவருக்கும்
கிடைத்திட பிராரத்திக்கின்றோம்.

HERO HONDA World No. 1 Two-Wheeler Company

என்.எஸ். இரத்தினம் சகோதரர்கள்

HERO HONDA 2 Year warranty

வடபகுதிக்கான HERO HONDA வகை மோட்டார்
சைக்கிள்களுக்கான ஏக விநியோகஸ்தர்கள். (சி-7982)

இல. 06. முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா T.P: 024 - 21237



திருக்கேதீச்சரப் பெருமானின் மஹாகும்பாபிஷேக
நன்நாளில் தேசமெங்கும் இறையருள் பல்கிப் பெருகட்டும்.

நவீன வடிவமைப்புக்களுக்கேற்ப
தங்க நகைகளுக்கு எம்மிடம் வாருங்கள்.

கதிர்நிலா நகைமாடம்

தண்ணீரூற்று, முள்ளியவளை.

எம்மிடம் 1000/- வுக்கு மேற்பட்ட நகைகளை கொள்வனவு செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு சித்திரை வருடப்பிறப்பு அன்றும் அதிஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.வெளி நகைத் தொழிலகங்களுக்கு மிசினறி மூலம் சகல நகைகளும் கட்டிங் செய்து வழங்கப்படும். (சி-7983)

தீச்சரப் பெருமான் திருக்கோயில் அனாவர்த்த அட்டபந்தன பிரதிஷ்டா

# நதிப் பெருவிழா சிறப்பிதழ்-06-07-2003

## ச்சரம் - அதன் வரலாற்றுக்கண்ணோட்டம்

ு கோயிலுள்ள இடத்தில்
ன்றைக்கட்டி நூதனப்பிரதிட்டை
ர்த்திகளுக்கு சோபகிருது ஆண்டு
14 ஆம் நாள் (28.06.1903)
மை வளர்பிறைச் சதுர்த்தியும்,
த்திரமும் கூடிய நன்னாளில்
க்குட முழுக்குச் செய்யப்பட்டது.
ருமானுக்கு நித்தியபூசைகள்
தற்கேற்ற ஒழுங்குகளும்
ன. மேலும் தொடர்ந்து பல
செய்யப்பட்டு கி.பி. 1910 இல்
முழுக்கும் செய்யப்பட்டது.
திய ஆலயமும் பழுதடைந்து
ந்ததினால் இதனால் புதுப்பிக்க
லை இந்நாட்டுச் சைவர்களுக்கு
சைவப்பெரியோர்கள் சேர்ந்து பல
த முயற்சியினால் இந்நாட்டுச்
விழிப்படையச் செய்யவும்,
சரத்தைப் பழைய உன்னத
காண்டுவர வேண்டிய நோக்கம்
ழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்
இயங்கிவந்த சைவதாபனத்தின்
சார்பில் 1948ஆம் ஆண்டு ஒக்ரோபர்
திகதிகளில் திருக்கேதீச்சரத்தில்
ஒன்று கூட்டப்பட்டது.
ற்கு நாட்டின் பலபகுதிகளில்
சான்ற சைவப் பெரியார்கள் பலர்
ருந்தனர். அன்று அங்கு கூடிய
க்கேதீச்சரம் புனர்நிர்மாணம்
மென்ற பெருவிழிப்புணர்வை
லும் ஏற்படுத்தியது. அப்பெரு
தளமாகக் கொண்டு 1948 ஐப்பசி
ம்பு பம்பலப்பிட்டி நகரத்தார்
யிலில் கூட்டிய மன்றில் உதயமான
ன்றைய திருக்கேதீச்சர ஆலயத்
பை ஆகும். இத்திருப்பணிச்
வண்டுகோள்படி தமிழ் நாட்டைச்
வாளர்கள் மு.வைத்தியநாதன்
.செல்லக் கண்ணுஸ்தபதி,
னால் கோயிற் சிற்பாகம நூன்
ரவு செய்யப்பட்டு காசிவாசி சிவஸ்ரீ
ர், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக்
சவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம்,
ஞர் வி. நரசிம்மன் ஆகியோரது
பெற்றவரைபடத்துக்கு அமையச்
பாள்கோயிற் கருவறைகளும்,
ணந்த அர்த்த மண்டபம்வரையான
கற்திருப்பணியாகவும் விமானம் -
விநாயகர் முதலான பரிவாரக்
பலவும் கலவைக்கட்டாகவும்
ற்றிசையோரதும், கடல் கடந்த
மலேசியா, சிங்கப்பூர், தென்னாடு
வதிகின்ற அடியார்களதும்
பெரும் பொருட்செலவில் ஐந்து
களே கொள்ளும் வகையில் எழுந்த
பில் நளஆண்டு ஆனி (21) இல்
ஆண்டவன் சித்தப்படி மறை
விதித்த நல்லோரையில் திருக்குட
சோபலட்சம் அடியார்கள் கண்டு
னந்தக் கண்ணீர் சொரிய

க்கேதீச்சரத் திருப்பணிச் சபையார்
ருந்து கோயிலைப் பொறுப்பேற்ற
பணிபல செய்து 1952 ஆகஸ்ட்

மாதத்தில் திருக்குட முழுக்கு ஒன்று செய்தனர். பின்னர் ஆலயச்சுற்றில் பூமியின் அடியில் இருந்து எடுக்கப்பட்ட பழைய மகா லிங்கத்தையும், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேஸ்வரர் முதலான மூர்த்திகளையும் அந்தந்த மூர்த்திகளுக்குரிய இடங்களில் பிரதிட்டை செய்து 31.10.1960 இல் இன்னொரு திருக்குடமுழுக்கும் செய்து பின்னர் 1968 இல் எழுந்த இராஜகோபுர திருக்குட நீராட்டும் செய்வித்தனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

1976ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீர்னோத்த மஹாகும்பாபிஷேகத்தின் பின் திருவருள் கடாட்சத்தால் நித்திய நைமித்திய



*(1894 இல் அகழ்ந்தெடுத்த சோமாஸ்கந்தர்)*

பூசைவிழாக்களும், வழிபடு அடியார் திருக்கூட்டப் போக்குவரவும் எம் அறிவுக்கு எட்டியவரை எதுவித குறையுமின்றிச் செழிப்பாக நடைபெற்று வந்தன. இவ்வாறு ஆலயநிகழ்வுகள் முட்டின்றி இறையுணர்வுடன் ஏறு படியாக நடந்து வந்த காலத்தில்,

1991 மாசித்திங்கள் நடந்த மஹா சிவராத்திரி முடிந்த 14ஆம் நாள் தொடக்கம் பின் வந்த 12 ஆண்டுகள் கோயிற் பூசை - ஓசை - ஒலி ஒன்றுமே இல்லாத - சன சஞ்சாரமற்ற இடமாக மாறும் துர்ப்பாக்கிய - துரதிட்ட நிலை ஒன்று ஏற்பட்டது.

ஆயினுன், இப்பன்னிரண்டாண்டுகளிலும் பெருமான் அடியார்களின் நெஞ்சங்களிலும் பதியாக உறை குடியேறிவிட்டார். அடியார்கள் அலைமோதலும், - திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையாரதும் - ஏனைய எமது சமயத் தாபனங்களது இடையறாப் பெருமுயற்சி விண்ணப்பங்களாலும் திருவருள் கண்ணோக்கஞ் செய்யக் காலத்தின் கடுமை சிறிது கனிந்து கருணை காட்டியது. சிறு ஒளி தலை நீட்டியது. நித்திய நைமித்தியங்களுக்குத் தடையாக இருந்த கல் நெஞ்சங்களும் நெகிழ்ந்தன. ஆயின், இக்காலத்தில் நடந்த அனர்த்தங்களும், தீமைகளும் நட்டங்களும் அளவுகடந்தன இவ்விடையக்காலக் குறை குற்றத்தவறுகளைப் போக்கப்பாவசாந்தி செய்து, வருங்காலத்தில் இந்நிலை ஏற்படாதிருக்க வேண்டும். என்ற நிலை பெருகப்பெரும் பிரார்த்தனையுடன் - பெரும் சாந்தி செய்து, பழைய நிலைக்குத் திருக்கேதீச்சரத்தையும் சுற்றுச்சூழலையும்

கொண்டு வரவேண்டும் என்ற அடியார்தம் அயராப் பேரவாவிற்கு அடிபணிந்த அம்மை அப்பர், தாமே முன்னின்று கைங்கரியங்களை செய்யுமாப்போல், அவரது கருணைக்கண்ணோக்கச் சித்தப்படி சோதிடநூல்வல்லோர் வகுத்த கருணாகடாட்சியாகிய கௌரியுடன் கோயில் கொண்டிருந்து அருளாட்சிபுரியும் திருக்கேதீச்சரப் பெருமானுறை கோயில் விமானத்திற்கும், கோயிலுக்கும் ஏனைய திருச்சுற்றுக்கோயில் விமானங்களுக்கும் - மூர்த்திகளுக்கும் கோபுரங்களுக்கும். இருபத்தெட்டுச் சிவாகமங்களுக்கு அமைய வகுக்கப்பட்ட இருபத்தெட்டுயாக குண்டங்களில் கலாமயமானயாக சாலையில் எம்நாட்டு - தமிழ் நாட்டுச் சிவாசாரிய விற்பன்னர்கள், ஐம்புலனும் அகத்தடக்கி - சிந்தனையை அவன்பால் வைத்து - நன்மைபெருக அருள்நெறி வந்தணைய நெறிநின்று கற்றாங்கெரியோம்பிக் கவியை வாராமே கிரியா காரியங்களை இயற்ற, நிகழும் சுபானு உத்தராயணகால ஆனித்திங்கள் 22 ஆம் நாள் (06.07.2003) ஞாயிற்றுக்கிழமை பூர்வசப்தமியும், உத்தரநட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் சிம்ம லக்கினமும் கூடிய காலை 9.00க்கு மேல் 10.00க்கு உட்பட்ட புண்ணிய காலச்சுபநேரத்தில் -

அநாவர்த்தன அட்ட பந்தன பிரதிட்டா பெருஞ்சாந்தித் திருக்குடத்திருமஞ்சனம் நடைபெறத்திருவருள் கூட்டியுள்ளது. தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். நாற்பத்தெட்டாவது நாளன்று 1008 சங்குவைத்து சங்காபிஷேகம் நடைபெறும்.

திருக்கேதீச்சரத் தோற்றகாலந்தொட்டு, இன்று வரை அதன் வடிவமைப்பு, பரிபாலனம், புனர் நிர்மானம், திருத்தங்கள், திருமட அமைப்பு நன்கொடைகள் போன்ற இன்னோரன்ன பிற திருப்பணிகள் பலவுஞ்செய்து சிவனடி சேர்ந்தோர் பலரையும் இந்நேரம் திருக்கேதீச்சரப் பெருமான் - பெருமாட்டி நடுவிருத்தி வாழ்த்தி வணங்குவதுடன், இன்று திருப்பணிகள் பல செய்து கொண்டிருப்போர்க்கும் - இனிப்பெரும்பணிகளை வாழையடி வாழையாக செய்யவர இருப்போர்க்கும் ஈறிலா நன்மையான வளங்கள் பலவும் பெருக வேண்டு மெனவும் -

சைவக்கோட்பாட்டில் நின்று நெறிபிறழா அர்ச்சகர், சிவாசாரியார், ஆலய பரிபாலனத் தொண்டர் பாரம்பரியம் என்றென்றும் நிலைத்தோங்கவும்,

இன்னும் சைவஉலகின் உயர்வு உய்வுக்காக இன்றுயாம் செய்யும் மெய்மையான சிவபுண்ணிய கைங்கரியங்கள் யாவும் பின்வருவோர் அறிந்து உணர்வதற்கான சாதன மூலகங்களாக அமையவும் பேரருள் பாலிக்க வேண்டுமெனவும் இமைப்பொழுதும் எம் நெஞ்சை விட்டகலாத கௌரி பங்கராய திருக்கேதீச்சரப் பெருமான் திருவடிகாண மீண்டும் மீண்டும் பல்கோடிதரந் தாழ்தெழுந்து இறைஞ்சுகிறோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய தெல்லாம் அரன்நாமமே
சூழ்க வையகமுந்துயர் தீர்கவே.

ஆக்கம்:
சி.கந்தசாமி
(முன்னால் கொழும்பு விவேகானந்தசபை பரீட்சை செயலாளரும் ஆலய ஆட்சிக்குழு உறுப்பினரும்)

நம் தேசமதில் அமைதி நிலவ
திருக்கேதீச்சர நாதனின் அருள்
வேண்டி நிற்கின்றோம்.
* யுனிலிவர் சிலோன் லிமிட்டட்
* எவரடி பற்றரி கொம்பனி லங்கா லிமிட்டட்
* நியூசிலாந்து மில்க் லங்காலிமிட்டட் (அங்கர் பால்மா)
ஆகிய நிறுவனங்களின் ஏகவிநியோகஸ்தர்கள்
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
(SVR)
85,87 பஜார்வீதி, வவுனியா (சி-7980) ☎ 024 -22387

திருக்குடத் திருமஞ்சனப் பெருநாளில்
அவல மெல்லாம் நீங்கட்டும் - எங்கும்
அன்புச்சுனை பெருகட்டுமென
பிரார்த்திக்கின்றோம்.
லக்ஸ்மன் சேர்விஸ் பிளேஸ்
உங்கள் திருப்திக்கேற்ற வகையில்
வாகனங்களை சுத்திகரிப்பு செய்யவும்
நவீன இயந்திரம் மூலம் வாகன இருக்கைகளை
சுத்திகரிப்பு செய்யவும்
எம்மை நாடுங்கள்
இல.97, மில் வீதி, வவுனியா
(சி-7987)

திருக்கேதீச்சர நாதனே! உனைத் தேடுவோர்துயரம் அகல,
இவ் ஊரிலே உன்புகழ்பரவ என்றும் ஒளியருள் வீசி வரம் தருக.
வெளிநாட்டு உணவுப் பொருட்கள்,
பழரசங்கள், ஜாம் வகைகள்,
குழந்தைகளுக்கான வெளிநாட்டு
உணவுப் பொருட்கள், பாவனைப்
பொருட்களுக்கு வவுனியாநகரில்
நீங்கள் நாடவேண்டியஸ்தாபனம்
வெங்கடேஸ்வரா
(சி-7988)
இல.15,குளோப் கட்டடம், பஜார்வீதி, வவுனியா

என்றும் எம்முடன் இருந்தே வழிகாட்டும் திருக்கேதீச்சர நாதனருள் நாடெங்கும் பரவட்டும்!
சகலவிதமான பெயின்ற் வகைகள்
கட்டடத் தேவைகளுக்கான
இரும்புக்கம்பி வகைகள்
மின்சார உபயோக உதிரிப்பொருட்களை
நம்பிக்கை, நாணயத்துடன் பெற்றுக் கொள்ள
நாடுங்கள்
சன்சென்ரல்
இல.54, மில் வீதி,வவுனியா. ☎ 074589015
(சி-7981)

(சி-7983)

திருக்கேதீச்சர நாதனே! உன் நாமத்தை சொல்லிவழிபடும்
அடியவர்கள் குறை தீர்த்திடையா!
வவுனியா நகரில் பல சரக்குப் பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
சு.க. கனகரட்ணம் புத்திரர்கள்
இல.84,பஜார் வீதி, வவுனியா. (சி-7984) T.P.024 - 22158

லெக்ஷ்மி ஜுவலர்ஸ்
பெரியகடை, மன்னார். T.P : 023 -2232386
புதுப்பொலிவுடன் மின்னும்
அழகிய 22 கரட் தங்க
நகைகளை பெற்றிட
நங்கையர் என்றும்
நாடுமிடம்
(சி-7985)
நாடி வருவோருக்கு வாரி
வழங்கிடும் திருக்கேதீச்சர
நாதனின் நல்லருள் நம்
அனைவருக்கும் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்
அபிராமி ஜுவலர்ஸ்
பெரியகடை, மன்னார். T.P : 023-2232067

மன்னார் - மாதோட்டம்- அருள்மிகு திருக்கேதீச்சரப் பெருமான் திருக்கோயில்



# திருக்குடத் திருமஞ்சனப் பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்பிதழ்



06-07-2003


கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற நடைபெற
பிரார்த்திக்கின்றோம்.

**அம்பிகா ஜுவலர்ஸ்**

உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற
தங்க நகைகளுக்கு மன்னாரில் நம்பிக்கையான ஸ்தாபனம்

பெரிய கடை,
மன்னார்.
T.P 023-2232350

(சி-7994)

பாலாவியின் கரைமேல் வீற்றிருந்து அருள் செய்பவனே!
உன் பாதங்களை பணிந்து நிற்கின்றோம்

**நாயன்மார்கட்டு மெடிக்கல் சென்ரர்**
**NAYANMARKADDU MEDICAL CENTRE**

Reg.No.A2542

DR.MRS.C.ARASAKONE
D.A.M.(Cey)R.A.M.p.No.5213
Births and Deaths Medical Registrar
Mannar Town East,
Main Street Mannar,T.P. 023-2232415

DESHAKEERTHI-DR.A. ARASAKONE
Justice of the peace(Whole Island)
Regd.No.2000/08/NE/WI/B/699
Mannar, sri lanka.
D.A.M CEY
R.A.M.P 5215

(சி-7998)

கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புறவும் நாட்டில் நிரந்தரசமாதானம் ஏற்படவும்
திருக்கேதீச்சரத்தான்அருள் வேண்டிநிற்கின்றோம்.

இளம் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன் நகைகளை
கைதேர்ந்த நிபுணர்களின் கைவண்ணத்தில்
அழகாகவும், சிறப்பாகவும், அசல்22 கரட்டில்
செய்து கொள்ள நாடவேண்டிய இடம்.

நம்பிக்கை, நாணயம், தரச்சிறப்பு.

**சிவா கோல்ட் ஹவுஸ்**

இல: 56, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P024-:23034

கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புறவும்
நாட்டில் நிரந்தரசமாதானம் ஏற்படவும்
திருக்கேதீச்சரத்தான்அருள் வேண்டிநிற்கின்றோம்

நங்கையர் விரும்பும் நவீன வடிவமைப்பிலான
அழகிய தங்க நகைகளுக்குமன்னாரில் நீங்கள்
விஜயம் செய்ய வேண்டிய சிறந்த இடம்.

**அம்மன் ஜீவல்ஸ் வேக்ஸ்சொப்**

பிரதான வீதி, மன்னார்.

குறித்த தவணையில் 22கரட் ஓடர் நகைகள்
செய்து கொடுக்கப்படும்.

(சி-7995)



பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத்தான் அருள் நாடெங்கும் பாலிக்குக

வன்னிப் பெருநிலப்பரப்பு வாழ் மக்களின் தங்கநகைத் தேவைகளை
நீண்ட காலமாக நம்பிக்கை,நாணயத்துடன் நிறைவேற்றிவரும் ஒப்பற்றஸ்தாபனம்.

**லாவண்யா ஜுவல்லறி**

**Laavanya JEWELLERY**

(சி-7992)

45, பெரியகடை, மன்னார்.
தொலைபேசி:-023 2232043

60, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

தொலை பேசி- 024 22484
தொலை நகல்-: 024 20236.

கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்றோம்.

**வவுனியா பல நோக்கு கூ.சங்கம்**

கடைவீதி, வவுனியா
TP:024- 22384

**முத்தையா மண்டபம்**
திருமண, பூப்புனித நீராட்டுவிழாமற்றும்
கலைகலாச்சார பொதுக் கூட்டங்களுக்கும்
ஒரே ஒரு சிறந்த மண்டபம்
(சகல வசதிகளுடன் கூடியது)

**எண்ணை ஆலை**
சுத்தமான நல்லெண்ணை
தேங்காய் எண்ணை, பிண்ணாக்கு,
சுத்தமான வறுத்த அரிசிமா போன்றவற்றை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

**தையலகம்**
நவீன முறையில் சிறுவர் பெரியவர் உட்பட
அனைவருக்கும் தேவயான உடைகளைச்
தாமதமின்றிப்பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

**குளிரகம்**
கோர வெப்ப தாக்கத்திலிருந்து
விடுதலை பெற ப.நோ.கூ.
சங்க குளிரகத்தை நாடுங்கள்.

**தொலைத் தொடர்பு நிலையம்**
உள்ளூர், சர்வதேச தொலைத்தொடர்பு
சேவைக்கு குறைந்த விலையில்
போட்டோபிரதிகளுக்கும் நிமிடத்தில்
அடையாள அட்டை புகைப்படத்திற்கும்,
றோணியோப் பிரதிகள் பெறுவதற்கும்
வவுனியா. ப.நோ.கூ. சங்க
தொலைத்தொடர்பு நிலையத்தை நாடுங்கள்.

**நுகர்ச்சிப்பொருட்கள்**
எங்களின் 30 இற்கு மேற்பட்ட நுகர்ச்சிக்
கிளைகளில் குறைந்த விலையில் தரமான
நுகர்ச்சிப் பொருட்களைப்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

(சி-7996)

நம்பிக்கையுடன் நாடும் அடியவர்
இடர்போக்கும் நம்பிரான்-
மாதினியாருடன் உறைகின்ற
பெருங் கோவிலின் கும்பாபிஷேக விழா
சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்றோம்.

வவுனியா நகரில்
நீங்கள் வேறு எங்கும்
சுவைத்திராததரமான சைவ
உணவு வகைகளைகாலை,மதியம்,
மாலை என உங்கள் எண்ணம் போல்
சுவைத்து மகிழ விஜயம் செய்யுங்கள்.

**ஸ்ரீ வாணி விலாஸ்**

144A, கண்டி வீதி, வவுனியா.

(சி-7997)




## தீமை தீமையையே தரும்

ஒருநாள் மூன்று திருடர்கள் ஒரு பணக்கார மனிதனின் வீட்டில் இருந்து நிறையப் பணத்தைத் திருடினர். அப் பணத்தை ஒரு பையில் போட்டுக் கொண்டு காட்டிற்குச் சென்றனர். கட்டிற்குச் சென்ற அவர்களுக்கு நல்ல பசி ஏற்பட்டது. காட்டில் எந்த உணவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மூன்று திருடர்களில் ஒருவன் கிராமத்துக்குச் சென்று உணவு வாங்கிவரப்போனான்.

கடையில் உணவை வாங்கிக் கொண்டு வந்தவனுக்கு ஒரு நல்ல திட்டம் மனதில் தோன்றியது. "உணவில் நஞ்சைக் கலந்து மற்றைய இருவருக்கும் கொடுத்தால் அதைத்தின்று விட்டு அவர்கள் இறந்து விடுவார்கள். அப்போது எனக்கு முழுப்பணமும் கிடைத்துவிடும்" என மகிழ்ந்து கொண்டு உணவில் நஞ்சைக் கலந்தான்.

காட்டில் பசியில் இருந்த இரண்டு திருடர்களும் ஒரு திட்டம் தீட்டினர். "சாப்பாடு வாங்கப் போனவன் இப்பவருவான். நாம் அவனை அடித்துக் கொன்று விட்டு பணத்தை இரண்டாகப் பங்கிடுவோம்" என்றான் ஒரு திருடன். மற்றத் திருடனும் அதற்குச் சம்மதித்தான். இருவரும் பெரிய தடியுடன் உணவு வாங்கப் போன திருடனின் வருகையை எதிர்பார்த்து இருந்தனர்.

அப்போது உணவு வாங்கப் போன திருடன் வந்தான். உடனே மற்றைய இரண்டு திருடரும் அவன் மீது பாய்ந்து அவனை தடியால் அடித்துக் கொன்றனர். பின் உணவை இருவரும் பங்கிட்டுச் சாப்பிடனர். திடீரென இருவரும் வாந்தி எடுத்து இறந்து போயினர். திருடிய பணம் அக்காட்டில் கேட்பார் அற்றுக் கிடந்தது.

"நீங்கள் விதைத்ததைப் போலவே அறுவடை செய்வீர்கள்"

**சு. கௌரீஷன்**

## விடுகதைகள்

01 மரத்தில் காய்க்காத பழம் என்ன பழம்?
02 காய்ப்பார் பூப்பார் கலகலப்பார் காகம் இருக்க கொப்பில்லை அது என்ன?
03 இருட்டு வீட்டுக்குள் குருட்டு வெளிச்சம் அது என்ன?
04 காட்டிலே பிறப்பான் வீட்டிலே சாவான் அது என்ன?
05 ஒரு குப்பிக்குள் இரு தைலம் அது என்ன?

ப.யூட்நிசான்
கிளி/ இந்துக்கல்லூரி

**விடைகள்**
01. ஐஸ்பழம்
02. நெல்
03. சுருட்டு
04. விறகு
05. முட்டை

## அன்னையே

சுடர்விடும் சூரியனாய்
மின்னல் பளிச்சிடும் தணலாய்
எமை ஈன்றெடுத்த அன்னையே
உனை வணங்குகிறேன்
உன் தாள் பணிகிறேன்
பொன்னை விடப்
பெரிதான உன்பாசம்
உயிருக்குள் ஊற்றாகும்
உன் நேசம்
நிலவு முகம் காட்டி
நீ சிரிக்கும் சிரிப்பு
எமது கனவுகளை
நனவாக்கும் மதிப்பு
வசந்தத்தின் மறுபிறப்பாய்
வாழ்க்கையின் ஓவியமாய்
பரிவுடன் அறிவூட்டி
கருவறை தொடங்கி
கல்லறை வரை
பாலூட்டித் தாலாட்டி
சீராட்டிப் பாராட்டிய
அன்னையே! தினம்
நீ வாழி!

இ. மதுமிதா
கிளி/பிரமந்தனாறு ம.வி



கற்சவப்பெட்டி   மம்மிகள்


மம்மிகள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். 4000 ஆண்டுகளின் முன் எகிப்தில் இறந்த மன்னர்களின் உடல்களைப்பதப்படுத்தி அவர்களின் உருவங்களில் மரத்தால் அமைக்கப்பட்ட பெட்டிகளில் வைத்து அவற்றை கல்லால் ஆன பெட்டிகளில் வைத்துப் பேணுவார்கள். கடந்த நூற்றாண்டில் எகிப்தில் பிரமிட் என்ற கம்புக் கோபுரங்களில் இவை எடுக்கப்பட்டன.இங்கு உள்ள படங்கள் மம்மிகளின் சவப் பெட்டிகளும், கற்சவப்பெட்டியும்

## மிட்டாய்

நல்ல நல்ல மிட்டாய்
சுவைமிக்க மிட்டாய்
பஞ்சுபோல மிட்டாய்
றோஸ் கலர் மிட்டாய்
அனைவரும் உண்ணும் மிட்டாய்
சுவைக்க சுவைக்க ஆசை
சுவைத்தால் நாக்கு சிவக்கும்
சுவைத்து முடிப்பது அரிது

த. பிரதாப் தரம்:-7A
C.C.T.M.S, வவுனியா

## உதவிக் கெட்டர் - 02




நன்றி Fun day Times (தொடரும்)

## வாரம் ஒரு குறள்



அறஞ் செய்தல் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றேயாகும். அறம் செய்வதால் பலன் கிடைக்கும் என்று நம்பியே பலர் காரியம் புரிகின்றனர். இன்னது செய்தால் இன்னது கிடைக்கும் என்று நம்பிக்கை அடைகின்றனர். ஆனால் உள்ளவன் ஒருவன் இல்லாத ஒருவனுக்கு உதவுதலே அறமாகும். அறம் என்பது ஒருவன் செய்யக் கூடிய செயல் என்பதே ஆகும். ஆகவே ஒருவன் செய்யக் கூடியது தன்னிடத்தில் உள்ளதை இல்லாதவனுக்கு கொடுப்பதாகும். நலம் செய்யும் அறத்தின் பலன் எப்படிக்கும் கிடைக்கும் என்று நம்பியிருத்தல் கூடாது. அது நாம் நொந்து போகின்றபோது எமக்குத் தெரியாமலே உதவியாக வரும். இது நிச்சயமானது என்பதையே வள்ளுவர்

**"அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க மற்றையது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"**

என்று கூறியுள்ளார்.

## குறுக்கெழுத்துப் போட்டி 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | 06 |
| | 08 | 09 | | | |
| | | 15 | | | |
| | | | 22 | | 24 |
| | | | | | |
| 31 | | | | | |

**இடமிருந்து வலம்**
01. செருக்கு.
08. சங்கு வகைகளில் ஒன்று.
15. கோயில் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
22. தோள்.
31. இரத்தம் தலைகீழாக உள்ளது.

**மேலிருந்து கீழ்**
01. அபயம்.
02. திருடன் குழம்பி உள்ளது.
06. கோடைக்கு எதிரானவை தலைகீழாக உள்ளது.
09. நஞ்சு குழம்பி உள்ளது.
22. நீரில் விளைவது தலை கீழாக உள்ளது.
24. கை தலைகீழாக உள்ளது

### குறுக்கெழுத்துப்போட்டி இல.25 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
01. திருக்குறள்.
07. பருப்பு.
15. செவி.
22. கவிதை.
26. பவள(ம்)
34. பூ

**மேலிருந்து கீழ்**
01. திருமால்.
08. பரம்பரை.
12. கிரகணம்.
15. செல்வம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.25இன் பரிசுக்குரியவர்

செ. சதீஸன்,
மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு

### குறுக்கெழுத்துப்போட்டி இல.25 இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. யோ.சுந்தரலிங்கம், சுளிபுரம்.
02. க.நடராசா, செக்கட்டிப்புலவு, வவுனியா.
03. செ. டயானி, தரம் -5, அக்கராயன், அ.த.க.பாடசாலை
04. வ.துசித்தா, குருமன்காடு, வவுனியா.

இளையவர்களே! ☞
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.27
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## பொது அறிவு

01. முதன் முதல் செய்மதி அனுப்பிய நாடு ?
ரஷ்யா
02. அதிக நீர் அருந்தும் பறவைஎது?
புறா
03. அமெரிக்காவின் தேசியப் பறவை எது?
கழுகு
04. இந்தியாவின் தேசிய மிருகம் எது?
புலி
05. விசர் நாய் கடிக்கான மருந்தை கண்டறிந்தவர் யார்?
லூயிபாஸ்ரர்(பிரான்ஸ், 1860ம் ஆண்டு)

சு.ராஜினி, தரம் - 6A
மு/பாண்டியன் குளம் ம.வி.

## தாயகம் பற்றிய சில தகவல்கள்

01. தமிழீழத்தின் பரப்பளவு என்ன?
18881 சதுரகிலோமீற்றர்.
02. தமிழீழத்தில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
08 மாவட்டங்கள்.
03. தமிழீழத்தில் பெரிய மாவட்டம் எது?
அம்பாறை.
04. தென்தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றத்துக்காக இரண்டாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம் எது?
மட்டக்களப்பு.
05. வடதமிழீழத்தில் நிர்வாகத்தேவைக்காக இரண்டாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் எவை?
வவுனியா, யாழ்ப்பாணம்.

த. அருவி.

## சிறுகதை

"என்றைக்குத் தான் இந்தப் பிரச்சினை தீர்ந்து சந்தோசமா இருக்கப் போறோமோ இந்தத் துலைவான்கள் ஏன் எங்கட நிலத்தில வந்து நிக்கிறானுகள்! அவன் அவன்ர ஊருக்குப் போனால் அவனும் சுகமாக இருக்கலாம் நாமும் சந்தோசமாக இருக்கலாம்"

# அகதியாய்

மிரேஸ்

**வானத்தை** அண்ணார்ந்து பார்த்தவாறு அம்மா வாசலில் நின்றாள். என்னவோ அம்மாவுக்குள் புகுந்து தன்னைப் பயப்படுத்துவதாக உணர்ந்தவளாய், அன்றைய நாளின் இரவு. சிலவேளை நிம்மதியற்றதாக இருக்குமோ என நினைத்து வெள்ளியையும் காணோம் இண்டைக்கும் மழைதானோ தெரியேல்லை என மனதில் நினைத்தவளாய் வாசலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த ஒளியற்ற ஊருக்குள் எங்கெங்கோ தொலைவொன்றிற்காக மின்னிப் பூச்சிகளாய் விளக்குகள் தெரிந்தன. அந்த இருளுக்குள்ளும் ஓர் உருவம் வருவதை அம்மா உணர்ந்தவளாய் இருக்க அடக்க முடியாத இருமலுக்குள் ஒருமனிதன் அந்தச் சிறிய குடிசையை அண்டி வந்தவரைப் பார்த்து மிக இளகிய மனித நேயத்துடனும் அன்பான வார்த்தைகளுடனும்.

"வாங்கோப்பா என்ன இண்டைக்கு கன நேரமாச்சு."

"ஓமப்பா இண்டைக்கு முதலாளி வரநேரமாச்சுது. காசும் வாங்காம வரேலாது அதுதான் அவர் வர மட்டும் பாத்திருந்து காசு வாங்கி கடைக்கும் போய் சாமானை வாங்கிட்டு வாறன்."

கணவனிடம் இருந்து கடைச்சாமான்களை வாங்கியதும் வேகவேகமாக சமையலில் ஈடுபட்டாள் அம்மா. அதற்கிடையில் மூத்தவனின் சிணுங்கல் குரல் இருவரின் காதிலும் கேட்கவே செய்தது!

"அம்மா பசிக்குது..... அம்மா பசிக்குது...."

"தம்பி சத்தம் போடாமல்படு. இப்ப அம்மா சமைச்சுத் தந்திடுவா"

"இவன் பெரியவன் கடும் மோசம் கத்திக்கத்தியே சின்னதுகளையும் எழுப்பி விட்டிருவான். இப்ப சாப்பிடலாம் சத்தம் போடாமல்படு. கொஞ்சம் பொறப்பு என்ர செல்லமல்லே" என்றாள் அம்மா. மூத்தவன் பசியோடேயேபடுத்து நித்திரையானான்.

அம்மா சமையலைத் தொடர கந்தர் ஏதோ யோசனையில் மூழ்கியவராய் வாசலில் அமர்ந்திருந்தார்.

"என்னப்பா யோசிக்கிறியள்."

"வானமும் இருண்டு கிடக்குது. இண்டைக்கும் மழை வந்தால் என்ன செய்யப் போகிறோமோ தெரியாது."

"என்னத்தச் செய்யிறது. வழமை போல பக்கத்திலூர் கோயில்ல போய் இருந்திட்டு மழை விட்டா வாறது தானே. இதற்கு ஏன் கவலை." கவலை தோய்ந்த மனதோடு அம்மா சொன்னா.

"என்றைக்குத் தான் இந்தப் பிரச்சினை தீர்ந்து சந்தோசமா இருக்கப்போறோமோ இந்தத் துலைவான்கள் ஏன் எங்கட நிலத்தில வந்து நிக்கிறானுகள்! அவன் அவன்ர ஊருக்குப் போனால் அவனும் சுகமாக இருக்கலாம். நாமும் சந்தோசமாக இருக்கலாம் என்று புலம்பிக் கொண்டிருந்தார்."

"ஏனப்பா சும்மா புலம்பிறியள். ஏதோ எங்கட தலைவிதி தமிழனாப் பிறந்தா இப்படித்தான் வாழ வேண்டும் என்று எழுதியிருந்தா அத யாரால மாத்தமுடியும். ஏதோ எங்கட பொடியளும் இயலுமாப்போல போராடிப் பாக்கிறாங்கள். எப்படியும் இன்னும் கொஞ்சநாளில சரியா வந்திடும் போலகிடக்கு. அப்படிப் பிரச்சினை சரியா வந்திட்டா எல்லாரும் எங்கட ஊர்ச்சனத்தோட போயிடலாம" என்றவாறே அம்மா எழும்பி வந்தாள்.

எழும்பி வந்தவள் பிள்ளைகள் நான்கையும் எழுப்பிச் சாப்பாடு கொடுத்தாள்.

"நீங்களும் போய் கால் முகத்தைக் கழுவிற்று வாங்கோவன் சாப்பிடுவம் என்றாள்."

கந்தர் எழும்பிச் செல்லவும் குழந்தைகள் நச்சரிக்கவும் சரியாய் இருந்தது.

"ஏனம்மா இண்டைக்குச் சாப்பிடச் சுணங்கிப் போச்சு இது மூத்தவன். ஏனம்மா அப்பா இண்டைக்கு வரச் சுணங்கினவர் அப்பா வராமல் விட்டிருந்தால் இண்டைக்கு எங்களுக்குச் சாப்பாடு இல்லையோ" இது இரண்டாமவன்.

"அம்மா இப்பிடி எத்தனை நாளைக்குத்தான் பசியும் பட்டினியுமாய்க் கிடக்கிறது. கொட்டிலிலும் ஒரே ஒழுக்காய் இருக்கு. ஏனம்மா எங்கட ஊருக்குப் போனா எங்கட வீட்டில இருக்கலாம் தானே" இது மூன்றாமவன்.

எல்லாவற்றுக்கும் காதைக் கொடுத்தவள் அதற்கு விடை தெரிந்தும் தெரியாதவளாய் "இப்ப ஒன்றும் என்னட்டக் கேட்க வேண்டாம். அப்பா வந்திடுவார் வேகமாய்ச் சாப்பிடுங்கோ" என்றவாறே தன் கடைக்குட்டி நிலாவிற்கு சோற்றை ஊட்டிக் கொண்டிருந்தாள்.

ஒருவாறு குழந்தைகளைச் சாப்பிடச் செய்து படுக்க வைத்து விட்டு தன் கணவனுக்குச் சாப்பாட்டைக் கொடுத்தாள்.

"தங்கம் உனக்குச் சாப்பாடு கிடக்கோ நீயும் சாப்பிடு" "எனக்குச் சாப்பாடு கிடக்குதப்பா உழைக்கிற மனுசன் நீங்கள் தான் நல்லாச் சாப்பிட வேண்டும்"


அதுக்காக நீங்கள் சாப்பிடாமல் கிடக்கிறதோ. சாப்பிட்டாத்தானப்பா பிள்ளைகளையும் குடும்பத்தையும் பாக்கலாம். கொஞ்சமெண்டாலும் இரண்டு பேரும் பிரிச்சுச் சாப்பிடுவம் அதுதான் சந்தோசம்."

இருந்த சாப்பாட்டை இருவருமாகப் பகிர்ந்துசாப்பிட்ட போது இரவு 11.00 மணி ஆகி விட்டிருந்தது. இருவரும் படுக்கச் சென்றபோது மழையும் தூறத் தொடங்கியது.

"தங்கம் பிள்ளைகளை எழுப்பிவிடு மழை பெரிசாகிறதற்கு முன் கோயிலுக்குப்போவம்" என்றவாறு கந்தர் சில பொருட்களை கையிலெடுக்க அம்மா பிள்ளைகளை எழுப்பி நிலாவைத் தூக்கிக் கொண்டு வானத்தையே பார்த்தவாறு ஓட்டமும் நடையுமாக கோயிலடியை நோக்கிச் சென்றனர்.

இவர்கள் போவதற்கு முன்பே அங்கு கூட்டம் கூடியிருந்தது. காரணம் அந்தக் கிராமத்தில இடம் பெயர்ந்தவர்களே அதிகமாக இருந்தனர். அதிலும் வீடில்லாதோரே அனேகமானோர் என்பதனால் எல்லாரும் எப்போதோ? கொடுத்த அகதித் தறப்பாளிலேயே கொட்டில் போட்டிருந்தனர். அதிலும் பெரி பெரிய ஓட்டைகள் என்பதனால் மழை என்றால் கோயிலுக்கு வருவது வழக்கம்.

எல்லாரும் கோயிலுக்குள் புகுந்ததும் மழையும் பலத்திருந்தது. கோயிலில் ஒரே சத்தமாக இருந்தது. குழந்தைகளின் கீச்சிடும் சத்தமும், முதியவர்களின் வரட்டு இருமலும் கடுமையாக இருந்தது. சில நோயாளர்களின் சத்தம் மரணவேதனையைத் தந்தது. இப்படியாக அந்தக் கோயிலில் அவலக்குரல் எழுப்ப மூலஸ்தானத்திலிருந்த முருகனோ எந்தவித சலனமோ அசைவோ இன்றி அப்படியே கருங்கல்லாகவே இருந்தார். அந்த முருகனுக்கு எங்கே எமது கஸ்ரம் புரியப்போகிறது. அவருக்குக் கோயில், சிலை, மூலஸ்தானம், மூன்றுவேளை பூசை இப்படியே எல்லாமே இருக்க அவருக்கென்ன கவலை. இங்கே நாங்கள் தான் இவ்வளவு கஸ்ரப்படுகிறம் என்று நினைத்தவாறே கந்தர் நித்திரையானார்.



அம்மாவிற்கோ நித்திரையே பிடிக்கவில்லை. ஏதோ தான் நரக வேதனையில் தள்ளப்பட்டிருப்பதாக உணர்ந்தாள். தனது கடந்தகால வாழ்க்கை கற்பனைகள், மனக்கோட்டை என்பவற்றை நினைத்தும் தற்போது தனது குடும்ப நிலையை நினைத்தும் தனது கணவனின் கஸ்ரத்தை நினைத்தும் தனது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்தும் மிகவும் வேதனை அடைந்தவளாக நித்திரை வராமல் அங்குமிங்கும் புரண்டு கடைசியில் நித்திரையானாள். காலை விடிந்ததும் அன்றைய நாளுக்கான ஜீவ னோபாயத்தை நினைத்து கந்தர் கூலித்தொழிலுக்குச் செல்ல அம்மா வீட்டை நோக்கிப் பிள்ளைகளுடன் நடந்தாள். இனி மாலை கணவன் வந்தால்தான் உணவு என்ற நிலை தொடர்ந்தது. பிள்ளைகளின் படிப்பும் பசி, பட்டினியால் இல்லாது போனதுடன் இப்படியாகவே நாட்கள், மாதங்கள், வருடங்கள் பல கடந்திருந்தது.

இப்போதும் அம்மாவின் குடும்பம் அதே இடத்தில் தான் இருந்தது. பிள்ளைகள் வளர்ந்திருந்தனர். அம்மாவின் கணவரும் அதே கூலித்தொழிலைத்தான் செய்து கொண்டிருந்தார். ஆனால் ஒரு மாறுதல் கந்தர் இப்போது எல்லைப் படையில் இருந்தார். மாதம் ஒரு முறை எல்லைக்கும் போய்வந்து மீதி நாட்களில் கூலித்தொழிலுக்குச் சென்று கிடைப்பதில் குடும்பத்தைப் பார்த்துவந்தார். அம்மாவின் மூத்தவன் சோதியும், இளையவன் காசியும் வளர்ந்து விட்டது மட்டுல்லாமல் இருவரும் வேலைக்குப் போனதால் குடும்பத்தில் ஓரளவு வறுமை குறைந்தது. மூன்றுவேளை சாப்பிடக் கூடியவாறு இருந்தது. கிடைத்த பணத்தை சிறுகச்சிறுகச் சேர்த்து அம்மா கிடுகு வேண்டி வீட்டையும் வேய்ந்திருந்தாள். ஆனால் வறுமை முற்றாக அகலவில்லை. நாட்கள் நகர்ந்து கொண்டிருக்க நாட்டுப்பிரச்சினையும் மிகமோசமானபோது எல்லைப்படைக்குச் சென்று அப்பாவும் காயம் அடைந்து வந்த அதேநாள் பாடசாலை சென்ற தம்பியும் தங்கையும் சிங்கள இராணுவத்தின் மிருகத்தனமான விமானக்குண்டு வீச்சில் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதைக் கேள்விப்பட்ட அம்மாவும், சோதியும், காசியும் கதறி அழுதவாறு வைத்திய சாலைக்குச் சென்று பார்த்தபோது அங்கு நடந்த சம்பவத்தைப் பார்த்து மேலும் கதறி அழுதனர். காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அம்மாவின் மூன்றாவது மகனும் கடைக்குட்டி நிலாவும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். மூவரும் அவர்களின் கட்டிலின் அருகே சென்று கதறி அழுதனர். அப்போது கடுமையாக தாக்கப்பட்டிருந்த அப்பாவின் மூன்றாவது மகன் கமல் இறந்திருப்பதைப் பார்த்து அம்மா கதறிக் கதறி அழுதாள். கமலின் சகோதரர்களும் கதறி அழுதனர். இவர்கள் அழுவதைப் பார்த்து நிலாவும் அழத்தொடங்கியதால் அவளுக்கும் ஏதும் நடந்து விடுமென்று அம்மா அழுகையை நிறுத்தி நிலாவைக் கட்டித் தழுவி முத்தமிட்டு நடக்கப் போவதை கவனிக்க வெளியேறினர்.

வீட்டிற்கு வந்த போது செஞ்சிலுவைச் சங்கத்தினர் கமலின் உடலை வீட்டை கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்றிருந்தனர். இயக்கப்பெடியள் அப்பாவைக் கொண்டு வந்து இறக்கிவிட்டு சென்றதிலிருந்து கமலின் இறுதிச் சடங்கு நடைபெறும் வரைவீட்டில் ஒரே மரண ஓலமாகவே இருந்தது. அயலவரும் உறவினரும் அம்மாவை மாறிமாறி கட்டியணைத்து அழுதுதீர்த்தனர். கமலின் இறுதிச் சடங்கு முடிந்துவிட்ட நிலையில் கந்தர் போராளிகளின் மருத்துவ மனைக்குச் சென்று விட்டார். நிலாவும் வைத்தியசாலையிலேயே இருந்தாள்.

இந்த நேரத்தில் தான் சோதி தம்பியைக் கூப்பிட்டு,

"தம்பி எங்களின்ரை குடும்பத்தில அடுத்தடுத்து வேதனையும் சோதனையுமாகவே காலம் கடந்து விட்டது. இது எங்களுக்கு மட்டும் புதிதல்ல இந்த மண்ணில் எல்லாத் தமிழர்களுக்கும் இந்த நிலமை தான். எனவே இனியும் நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கஏலாது. அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக நாம் எல்லோரும் அழிய வேண்டிவரும். எனவே நான் இயக்கத்துக்குப் போகப்போறன். நீ வீட்டையும் அம்மா அப்பா தங்கச்சியையும் நன்றாக பாத்துக்கொள். இப்போது நான் போனதாக அம்மாவிடம் சொல்லாதே. வேறு இடத்திற்கு வேலைக்குப் போனதாகச் சொல்லிவிடு கொஞ்சநாள் போனதும் சொல்லலாம்" என்று விடை பெற்றவனை

"நில் தம்பி" எனத் தடுத்தது ஒரு குரல்.

அங்கே அம்மா நின்று கொண்டிருந்தாள். "தம்பி நீ கதைத்ததை எல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தன். ஏன் என்னிடம் சொல்லக்கூடாது நீ சந்தோசமாகப் போய்வா. எங்களின்ர சனம் எல்லாரும் ஊமையாய் இருந்ததினால் இந்த எவு கேவலமாக இண்டைக்கு சிங்கள வனுக்குப் பயந்து வாழுறம். இனியும் அந்த நிலைமை, அதுவும் எங்க ளின்ர குடும்பத்திற்கு வந்த நிலைமை எமது நாட்டில எந்தக் குடும்பத்துக்கும் வரக்கூடாது. எனவே நீ சந்தோசமாக போய்வா... "என அம்மாவே வழி அனுப்பி வைத்தாள்.

நாட்கள் கடந்த வேளை நிலாவும், அப்பாவும் காயங்கள் சுகமாகி வீடு வந்து சேர்ந்தனர். இப்போது சோதியும் போராடச் சென்று பல களங்களில் நன்றாகச் சண்டை செய்து திரும்பியதை அம்மா அறிந்திருந்தாள். இவற்றையெல்லாம் விட அம்மாவின் ஊரும் மீட்கப்பட்டிருந்தது. அந்தச் சண்டைக்கு தனது மகனும் போயிருந்ததை நினைத்து அம்மா சந்தோசப்பட்டிருந்தாள்.

"அப்பாடா ஊரையும் பெடியள் எவ்வளவோ பாடுபட்டு பிடிச்சிட்டாங்கள் இனி எப்பதான் ஊருக்குப் போவதோ..."

அம்மா தவித்துக் கொண்டிருந்தாள். அப்போது சமாதானமும் வந்திருந்தது. அம்மாவிற்கு மேலும் சந்தோசமாக இருந்தது. எப்படியெண்டாலும் 10, 15வருடமாக தொலைந்து விட்ட சந்தோசத்தை சொந்த ஊருக்குச் சென்று தனது வீட்டின் முன் உள்ள வேப்பமரத்தடியில் பாய்போட்டு படுத்தால் தீர்ந்து விடுமென அம்மா நினைத்துக் கொண்டே நாட்களை ஓட்டினாள். விடுமுறையில் வந்த மகனிடமும்.

"எப்படா தம்பி வீட்டுக்குப் போகலாம்" எனக்கேட்டாள். "போகலாம் விரைவில்" என தம்பி சொன்னதில் ஏதோ மாயம் இருக்குது என அம்மா உணர்ந்து கேட்காமலேயே விட்டு விட்டாள். அன்றும் வழமைபோல் முற்றத்தில் அமர்ந்த தன் கணவனிடம் அம்மா கேட்டா.

"ஏனப்பா சமாதானமும் வந்திட்டுது ஏன் இனிமேல் எண்டாலும் ஊருக்குப் போகலாம் தானே."

பதிலுக்கு கந்தர் "போகலாம் தானப்பா முகமாலையில அவன் இருக்கேக்க என்னெண்டு நாங்கள் புதுக்காட்டில இருக்க முடியும். இங்கிருந்து அங்க போய் வீடு வாசலை திருத்துவதெண்டால் காணியில ஒண்டும் இல்லை. வீடெல்லாம் தரைமட்டமா இருக்குது சிங்களவன் கண்ணி வெடிகளையும் விதைச்சிட்டுப் போயிருக்கிறான் எப்படியப்பா போறது. சரி அப்படியே போனாலும் திடீரெண்டு மீண்டும் ஒருமுறை பிரச்சினை எண்டால் எங்களால என்ன செய்ய முடியும். அதை விட இப்ப போகாம இங்கேயே இருந்திட்டு நல்ல நிலைமை வந்தாப் போவம். அதுவரைக்கும் எங்கட நிலைமை இப்படித்தானப்பா ஒவ்வொருநாளும் சிங்களவன் எங்களுக்கு அள்ளித்தரப்போறதில்லை. சமாதானம் எண்டு சொல்லி வந்து இவ்வளவு நாளாகியும் இதுவரை ஒண்டுமே நடக்கேல்லை. இப்பிடி இருக்க என்னெண்டு போறது."

"எதுவெண்டாலும் பெடியள் அடிச்சுப் பிடிச்சுச் தந்தால்த் தான் நாங்கள் எல்லாரும் சுதந்திரமாக, சுவீட்சமாக எங்கட நிலத்தில வாழமுடியும்.அது வரை இந்த அகதி வாழ்வை ஆராலும் தடுக்கமுடியாது. அதைத்தடுக்கிறது என்றால் நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து போராடி மண்ணை மீட்க வேண்டும்."

பெரிய விரிவுரையை அம்மாவிற்கு வழங்கினார் கந்தர்.

அம்மாவும் "அதெல்லாம் "உண்மை தானப்பா என்னதான் சமாதானம் வந்தாலும் நிரந்தர சமாதானம் வராமல் விட்டால் எங்கள் எல்லோரின் வாழ்வும் அகதி வாழ்வுதான்" என்று பெருமூச்சு விட்டாள். "நிச்சயமாய் எங்கட பிள்ளைகள் இருக்கும் மட்டும் எங்களுக்கு எந்தவித கவலையும் இல்லை" என்று சொல்லிவிட்டு எழுந்தார் கந்தர்.



# இளம் கவிஞனுக்கு சில ஆலோசனைகள்

உன் கவிதைகள் நன்றாக இருக்கின்றனவா என்று கேட்டெழுதியிருக்கிறாய். வேறு பலரிடமும் கேட்டிருப்பாய். பதிரிகைகளுக்கு அவற்றை அனுப்பியிருப்பாய். வேறு கவிதைகளோடு ஒப்பிட்டுப் பார்த்திருப்பாய் சில பத்திரிகையாசிரியர்களிடமிருந்து அவை திரும்பி அனுப்பப்பட்டிருப்பதற்கு நீ சஞ்சலமடைந்திருப்பாய் இப்போது நீ என்னிடம் கேட்டிருப்பதால் சொல்கிறேன். எல்லா அபிப்பிராயங்களையும் தூரத் தள்ளிவிடு. வெளியில் இருந்து வரும் அபிப்பிராயங்களை நீ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய். உண்மையில் நீ செய்ய வேண்டியது அதுவல்ல. யாரும் ஆலோசனை தரவோ, உதவி செய்யவோ முடியாது. ஒரே ஒரு வழிதான் உள்ளது. உன்னுள் செல். எது உன்னை எழுதத் தூண்டுகின்றது என்று ஆராய்ந்துபார். அது உன் இதயத்தின் ஆழத்தில் வேர்பாய்ச்சி பரவியிருக்கிறதா என்று அறிய முயற்சிசெய். எழுத அனுமதிக்கப்படவில்லையென்றால், அதைவிட இறந்து விடுவதே மேல் என்பதை உணர்வாயா என உன்னையே கேட்டுக்கொள். எல்லாவற்றிற்கும் மேலாக இரவில் அமைதியான பொழுதில் உன்னையே கேட்டுக் கொள்! நான் கட்டாயம் எழுதத்தான் வேண்டுமா? உனக்குள்ளேயே ஆழமான பதிலைத் தேடு. பதில் சாதகமானதெனில், அந்த நேர்மையான கேள்விக்கு " நான் கட்டாயம் எழுதத் தான் வேண்டும்" என்ற உறுதியான பதில் உனக்குக் கிடைக்குமென்றால், அதற்கேற்ற வகையில் உன் வாழ்க்கையை அமைத்துக் கொள். உன் வாழ்வின் சாதாரண கணம் கூட இந்த வேட்கையின் அறிகுறியாகவும், அதன் சாட்சியாகவும் அமைய வேண்டும்.

பின் இயற்கையோடு நெருங்கி நில். முதல் மனிதனாக உன்னை நினைத்துக் கொண்டு நீ காண்பதையும், அனுபவிப்பதையும், நேசிப்பதையும், இழப்பதையும் சொல்ல முயற்சி செய். காதல்க் கவிதைகள் எழுதவேண்டாம். வழக்கத்திலுள்ள அதிக புழக்கத்திலுள்ள வடிவங்களை தவிர்த்துவிடு. இது உண்மையில் மிகக் கடினமானது. ஏனெனில் சிறந்த அற்புதமான பாரம்பரியங்களில் உன் மனது ஊறிப் போயிருக்கும் போது, அவற்றை விலக்கு. உனக்கு சுயமானதாக சிலவற்றை முன் வைப்பதற்கு, பெரிய முதிர்ந்த சக்தி வேண்டியிருக்கிறது.

ஆக, இத்தகைய பொதுவான கருப்பொருளைத் தவிர்த்து, உன் அன்றாட வாழ்க்கை உனக்கு அளிப்பவற்றைத் தேடு. உன் சோகங்களை, விருப்பங்களை, தோன்றும் எண்ணங்களை, அழகைப் பற்றிய உன் நம்பிக்கையை எல்லாவற்றையும் விவரி. இவையனைத்தையும் அன்பாக, அமைதியாக, பரிவான அக்கறையோடு விவரி. உன்னை வெளிப்படுத்த உன்னைச் சுற்றியுள்ள பொருட்களையும் உன் கனவிலிருந்து பெற்ற சித்திரங்களையும், உன் ஞாபகங்கள் அளித்த விஷயங்களையும் பயன்படுத்திக் கொள். உன் அன்றாட வாழ்க்கை ஏழ்மையுற்றிருப்பதாக உனக்குத் தோன்றுமெனில் அதைக் குறை கூறாதே. உன்னைக் குறை கூறிக்கொள். அதன் செழிமையான உள்வாங்கும் அளவுக்கு நீ கவிஞனாகவில்லை என்று சொல்லிக் கொள். ஏனெனில், ஒரு படைப்பாளிக்கு விஷயங்களின் வறட்சி என்பதோ, அக்கறை காட்ட வேண்டாதவை என்பதோ ஒன்றுமில்லை.

மேலும் வெளியுலகத்து ஓசைகள் உன்னை வந்தடையாதபடி சூழப்பட்ட சுவர்கள் நடுவில் நீ சிறையிடப்பட்டால், உன் குழந்தைப் பருவம், அந்த அருமையான இன்ப உலகம், அந்த ஞாபகக் களஞ்சியம் இல்லாமலா போய்விடும்? அதிலே உன் கவனத்தைச் செலுத்து. கடந்து போன அக்காலத்தின் அமிழ்ந்து போன உன் உணர்வுகளை தட்டியெழுப்ப முயற்சி செய். உன் ஆளுமை உறுதி பெற்று வளரும்.

இத்தகைய உனக்குள்ளே செல்லுதல் மற்றும் உன் உலகத்திலேயே அமிழ்தல் இவற்றிலிருந்து கவிதைகள் கிளம்புமானால், அவை சிறந்தவையா என யாரிடமும் கேட்கத் தோன்றாது. உன் கவிதைகளால் பத்திரிகைகளைக் களிப்பூட்டவும் விரும்பமாட்டாய். ஏனென்றால் அவற்றில் உன் இயல்பான பற்றுதலை, உன் வாழ்வின் ஒரு பாகத்தை, அதன் குரலை இனங் காண

## ரெய்னர் மரியா ரில்கே

முடியும். ஒரு படைப்பு, தேவை கருதி முகிழ்ந்தால் அது நிச்சயம் சிறந்ததாக இருக்கும். இத்தோற்றத்தின் இயல்பிலேயே இதை மதிப்பிடவேண்டும்.

எனவே, நான் உனக்குச் சொல்ல விரும்புவது இது தான்: உனக்குள்ளேயே செல். உன் வாழ்வு முளைவிடும் ஆழங்களைச் சோதனை செய். நீ கட்டாயம் எழுதத்தான் வேண்டுமா என்ற கேள்விக்குப் பதில் இதன் ஊற்றில் தான் உள்ளது. அதனை விளக்க முற்படாமல் அப்படியே ஏற்றுக் கொள். ஒருவேளை நீ கவிஞனென்று அழைக்கப்பட வேண்டியவன் என அதுகூறலாம். பின் உனது முடிவை ஏற்றுக்கொள். அதன் உன்னதத்தையும், சுமையையும் தாங்கிக்கொள். வெளியிலிருந்து அதற்கு என்ன கைமாறு கிடைக்கின்றது என்று எதிர்பார்க்காதே. ஒரு படைப்பாளிக்கு அவனே ஒரு உலகம். அவன் எல்லாவற்றையும் தன்னுள்ளும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கும் இயற்கையிலும் கண்டு கொள்கிறான்.

• தமிழில்: மாதா– நன்றி: தொனி

# யதார்த்தம்



'சூரியன் பற்றிய கனவுகள்
எனக்கு இப்போது குறைந்து
வருகின்றன'
அன்னா அக்மதோவா!
எந்த முகூர்த்தத்தில் இதை
எழுதினாய்?

எமக்கும் வெள்ளையின்
மீதும்
ஒலிவ் தளிர்களின் மீதும்
எதிர்பார்ப்புகள் செத்துக்
கொண்டிருக்கின்றன.
உண்மையிலேயே
பரிதாபத்துக்குரியவை
இவை.
பாவிக்கப்படுவதும்
வீசப்படுவதுமாய்
உருக்குலைந்துள்ளன
இரண்டும்.

இன்றைய எமது நாட்களில்
ஒரேயடியாக வீசப்பட்டு
விடவில்லை இரண்டும்!
பையப்பைய இவற்றின்
'உள்ளர்த்தம்'
உருவப்படுகிறது மறைவாக.
கறுப்பினையே
வெள்ளையாகவும்
காஞ்சூரையையே
'ஒலிவ்'வெனவும்
சாதிக்கிறது இன்றைய
காலம்

அன்னா அக்மதோவா!
செத்துக்
கொண்டிருக்கின்றன
எமது எதிர்பார்ப்புகள் இன்று.

பு. சிந்துஜன்

# பிரிவின் வலி



தொலைந்து போகும் நினைவுகளாய்
வசந்தம் பூத்த
எங்கள் நேற்றைகள் - என்னுள்
விலகி விலகி வெகுதொலைவாகி
ஒளியாண்டுகளிற்கப்பாலான
இன்னொரு சந்திரப் பிம்பமாய்
உந்தன் வசீகர முகம்
மன இடுக்குகளில் ஒட்டிய
உயிர் வாழத் துடிக்கும் மிச்ச நினைவுகளின்
ஆவேசப் பீறிடலில்
இதயம் பிளப்பதான வேதனை

கைகோர்த்துலவிய,
மழை நாட்களில் மட்டும் நகரும்
நம்மூர் சிற்றாற்று நதித் தீரங்கள்...
வயலோரங்கள்....மழை நாட்கள்...
இன்னும்,
அந்தப் பெரிய ஆலமரம்...
கொல்லும் கோரவாட்களாக
மன மேடையில் நினைவுகளின்
ஆவேசத் தாண்டவம்.

இரும்புகள் அறியுமா
இதயத்தின் காதல்களையும்... அன்பினையும்
சாத்தானின் வாரிசுகளிற்கெங்கே தெரியும்
அன்பின் உயிரோட்டம்.

ஆள, வேர்பரப்பிய ஊரிலிருந்து
வேரடி நறுக்கி எறியப்பட்ட நாட்கள்...
மீண்டும் ஊர் மீள தடையிட்டு
முள் வேலிகளும் நீசர்களும்
குந்தியிருக்கும் இந் நாட்கள்....
துப்பாக்கிகள் தூக்கும் இப்பொழுதிலும்
உண்ணவும்...உறங்கவும்...படுக்கவும் வசதியற்று,
முகவரிகளையும் தொலைத்து
எங்கோ ஓர் அகதி முகாமில்
மிச்சமிருக்கும் காதல்களுடன் நீ

பிரிவின் கொடுவலி உயிரை அரிக்க,
நசுங்கி...சின்னாபின்னமாகிச் செத்துப்போன
நம்பிக்கைகள்
மீளவும் உயிர்த்தெழுந்து
உருப்பெற்றுலவுமென்ற
குருட்டுத் துளி நம்பிக்கையுடன்
மரநிழலடியில் மெதுமெதுவாய்ச் செத்தபடி நான்.

என் பிரிய பெண்ணே...
எங்கோ தொலைவாகி தொடர்பற்ற உறவுகளே...
எமக்கான நாட்கள் மீளவும் வருமா?
அன்றி,
காத்திருந்து காத்திருந்து காலத்துள் கரைந்து
போக
நமதிளைய சந்ததியும் சிலுவை சுமக்குமா?

அலைமகள்

## குறுங்கதை

# எறும்புகள்

இமை கொட்டாத அந்த இரவின் போர்வையை விலக்கிக் கொண்டு பார்வதி அக்கா முற்றத்தில் கால் பதித்தாள். வாயில் கொஞ்சம் குளிர்ந்த நீரை விட்டுக் கொப்பளித்து ஈரக் கையால் கண் எரிவை துடைத்துக் கொண்டாள்.

அவள் எப்போதும் அப்படித் தான்.

வெள்ளாப்புடன் எழுந்து தன் வேலைகளைத் தொடங்கிவிடுவாள்.

பகல் முழுவதும் மாடு மாதிரி உழைத்த அலுப்பு கால்கை சோர்வு எது இருந்தாலும் முதலில் எழுந்து விடுவது அவள்தான்.

இது அவள் தனக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஒழுங்கு. மூடப் பழக்கங்களில் ஊறிக் கிடக்கும் தமிழ்ப் பெண்களில் அவளும் ஒருத்திதான்.

கணவன் வேலைக்குப் புறப்படுமுன் முற்றத்தைப் பெருக்கி விட வேண்டும். அவனுக்குத் தாறுமாறாக எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதில் அவள் கவனம்.

பலார் பத்தி விடிஞ்சு போச்சு. இருள் நகரத்தொடங்கி முற்றத்தில் வெளிச்சம் பரவத்தொடங்கியது.

விளக்குமாற்றைக் கையில் எடுத்தாள்.

சறுக்......சறுக்..... பாதி முற்றம் கூட்டப்பட்டு விட்டது.

" ஆ....ஊ" அறுந்த மிறுகங்கள்......

அவள் கால்களை உதறித் துள்ளிக்குதித்தாள்.

விளக்குமாற்றை எறிந்து விட்டு, விலகியவள் கால் விரல் இடுக்குகளில் கொழுவிக்கொண்டிருக்கும் எறும்புகளை பிய்த்துக் கசக்கி எறிந்தாள்.

தலை விண்விண் என விறைத்தது.

கால் விறுவிறுத்தது.



தழும்புகளாய் தடித்துப் பொருமிய இடங்களுக்கு எச்சிலைத் தொட்டுப்பூசினாள்.

குழம்பிப்போன மனத்தோடு நிலத்தைப் பார்த்தாள்.

விளக்குமாற்றின் தாக்கலில் சிதறிப்போன எறும்புகள் மீண்டும் அணிசேரத் தொடங்கின. மெய் சிலிர்க்க இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

" என்னப்பா நிலத்தையே பார்த்துக்கொண்டு நிற்கிறாய் "

கேட்டுக் கொண்டே சிதம்பரம் அருகே வந்தார்.

பார்வதிக்கு விறுவிறுப்பும் தீரவில்லை. ஆச்சரியமும் தீரவில்லை.

" இஞ்சை பாருங்கோவன்"

பார்வதி தன்னை மறந்து விட்டாள்.

" உதுக்கையே காலை வைச்சனி நல்ல கடி தந்திருக்கும்" அவர் நகைச்சுவையாகச் சிரித்தார்.

"அது கிடக்கட்டும் பாருங்கோவன் அவை போற வடிவை. கொஞ்சப் பேர் முடிஞ்சு போட்டினம்."

அது தான் எறும்புகள் சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் கொண்டது. எத்தனை இழப்பு வந்தாலும் உறுதி குலையாமல் தங்கட பயணத்தைத் தொடரும்.

எறும்புகளின் அணி நகர்ந்து கொண்டிருந்தது.

சிதறிப் போனவைகளும் சேர்ந்து கொண்டன.

எங்கை போகினம்.....
இலக்கை நோக்கி
எங்கட சனம்....

பார்வதி அக்கா வாயில் விரலை வைத்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

" விடாமுயற்சியும் ஒன்று பட்ட பலமும் உறுதியும் உள்ளவர்களை எவ ராலும் வெல்ல முடியாது."

சிதம்பரம் கூறிக்கொண்டே வெளியே சென்றுகொண்டிருந்தார்.

முருகுபாரிமகன்

ஒரு கணநேரச் சிந்தனை, ஒரு மணிநேரச் சொல்லுக்குச் சமம். - தாமஸ்ஹூட்.




## தொடர்கதை

### அத்தியாயம் -4

# இடம் பெயர்ந்தவன்

### பிளானறி ஓ கொணரின்

**தமிழில் சு.மகேந்திரன்**



அவள் அந்தப்பகுதியால் சென்று தொழுவத்திற்குள் புகுந்தாள். அவளுக்கு திருப்தி உண்டாகியது. இப்போது மணி ஒன்பது முப்பதுதான். சோட்லியாயின் 11.30 இற்கு முன், எந்தவிதமான சுத்திகரிப்பு வேலைகளையும் முடித்திருக்கமாட்டான். அவள் மற்றப் பகுதியை அடைந்த போது நீகிரோ மெதுவாகப் பாதையை குறுக்காகக் கடந்து, அவளுக்கு முன்பாக வந்துகொண்டிருந்தான். அவனது கண்கள் கெளசக் கொடுத்த பொருளின் மேலே பதிந்திருந்தது. அவன் நாக்கைச் சுழற்றி சிறிய வட்டங்கள் செய்து கொண்டிருந்தான். அவனிடம் ஒரு சிறிய போட்டோ இருந்தது. ஒரு விரலால் போட்டோவை மென்மையாகத் தடவியபடி இருந்தான் சல்க். மேலே அண்ணாந்து பார்த்தவன் மிஸிஸ் மக்கின்ரயரைக்கண்டு உறைந்து போனான். . கைவிரல் நீண்டவுடன் அரைகுறையான அசட்டுச் சிரிப்பு அவனில் தெரிந்தது.

அவன் தனது வாயைப் பெரிதாக திறந்து கொண்டு, ஒரு காலை உயத்தினான். கையிலிருந்த புகைப்படத்தை தன் பைக்குள் வைத்தான்.

"அது என்ன?" என மக்கின்ரயர் கேட்டாள்.

"அது ஒன்றுமில்லை" எனக்கூறிக் கொண்டு சல்க் அதனை தன்னிச்சையாகவே அவளிடம் கொடுத்தான். அந்தப் புகைப்படம் 12 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்குழந்தையினுடையதாக இருந்தது. அவள் வெள்ளை உடை அணிந்திருந்தாள். வெளிர் நிற தலைமயிருடனிருந்தவளது தலையில், மலர்ச் செண்டு ஒன்று இருந்தது. மோரின் நிறத்தையுடைய கண்களால் முன்னோக்கிப் பார்த்த பார்வையிலிருந்த போட்டோ "யார் இந்தக் குழந்தை?" என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர்.

'கௌசக்கின் மச்சாள் என்றான் சல்க். பையன் இதனை உரத்தகுரலில் கூறினான்.

நீ அதனை வைத்துக் கொண்டு என்ன செய்கிறாய்?

முன்பைவிட உரத்த குரலில் 'நான் அவளைத்தான் கல்யாணம் செய்யப் போகிறேன்' என்றான் சல்க். 'என்ன மணக்கப் போகிறாயா?' என சடுதியாக ஏற்பட்ட கோபத்தால் கீச்சிட்டுக் கத்தினாள்.'

'நான் அவளை இங்கே கொண்டு வருவதற்கான செலவின் அரைவாசியைக் கொடுக்கப் போகிறேன். கிழமைக்கு மூன்று டொலர் கௌசிக்கு நான் காசு கொடுக்கிறேன். அவள் இப்போது பெரியவளாகி இருப்பாள். அவள் அவனது மச்சாள்,யாரை மணப்பதற்கு அவள் தயாராக இருக்கிறாள். அவள் அங்கிருந்து வெளியேறுவதையே வேண்டி நிற்கிறாள்.' கலவரத்துடன் பீரிட்டு பெருகிவந்த அவனது குரல், அவளது முகத்தைப்பார்த்தவுடன் அடங்கித் தன்னிலைக்கு வந்தது. வெளிச்சம் அவளது கண்ணில் பட்டவுடன், அது ஒரு நீலக்கல் போல் பிரகாசித்தது. தூரத்தில் ரக்ரர் சத்தம் கேட்டது. சத்தம் கேட்ட ரோட்டின் பக்கமாக தனது பார்வையைச் செலுத்தினாள்.

'அவன் இப்போது இங்கு வருவான் என நான் நினைக்' கவில்லை.'

' நீ அவனுக்குக் கொடுத்த ஒவ்வொரு சதத்தையும் உனக்குக் கிடைக்கும் படி பார்த்துக் கொள்கிறேன் என எந்தவிதப்பாவனையும் அற்ற குரலில் கூறியபடி திரும்பி நடந்தாள் மிஸிஸ் மக்கின்ரயர். அவள் கையில் அந்தப் புகைப்படம் இரண்டாக மடிந்த நிலையில் இருந்தது. இந்நிகழ்வால் ஆடிப்போய் விட்டாள் என்பதற்கான அடையாளம் அவளது விறைப்பான முகத்தில் தெரியவில்லை.

வீட்டுக்குள் சென்றவுடன் தனது கட்டிலில் படுத்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டாள். தனது இருதயத்தை அது இருக்கும் இடத்திலேயே வைத்திருப்பதற்கு முயற்சி செய்வது போலிருந்தது. அவள் நெஞ்சைக் கைகளால் அமுக்கியபடியிருந்தது. வரட்சியுடன் கூடிய சத்தங்கள் அவள் வாயிலிருந்து வந்தன. ஒரு நிமிடம் தாமதித்து 'அவர்கள் எல்லோரும் ஒன்றே' எனப் பலமாகக் கத்தினாள். பின்பு கிடையாகக்கட்டிலில் படுத்தாள். '20 வருடங்களாக இருப்பவை எல்லாவற்றையும் களவெடுத்து, அவரது கல்லறையைக் கூட எடுத்துச் சென்றார்களே' என கிழவரது கல்லறையின் நினைவு வந்தவுடன் கூறியவள், தனது மேல்ச்சட்டையின் ஓரத்தால் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவளுக்கு உடனே நீதிபதியின் கல்லறை மேல் வைத்துக் கட்டப்பட்ட தேவதூதன் சிலைபற்றிய நினைவு வந்தது. மனிதமுகமும் இறகுகளும் கொண்ட நிர்வாணமான அந்தச் சிலை கருங்கல்லால் அமைந்திருந்தது. ஒருநாள் பட்டணத்துக்குச் சென்ற நீதிபதி கல்லறைகளில் அமைக்கும் நினைவுச் சின்னங்களை விற்கும் கடையின் கண்ணாடி யன்னல்களுக் ஊடாக அதனைக் கண்ணுற்று, உடனே அதனை வாங்கிவந்தார். அவர் தனது முகம் தனது மனைவியின் முகம் போலிருந்தாலும், தனது கல்லறையில் சிறந்த வகையில் அமைந்த ஒரு கலைத்துவமான சிலை ஒன்று இருக்க வேண்டுமென்பதாலும் அதனை வாங்கி வந்தார். வெல்வெற் போன்ற ஒரு துணியிலான ரயில் சீற் ஒன்றில், சிலையைத் தன்னருகே வைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார் நீதிபதி.

தன்னைப்போன்ற ஒரு தோற்றம் அதிலிருந்ததாக என்றும் மிஸிஸ் மக்கின்ரயர் எண்ணியதேயில்லை. அது ஒரு விகாரமான உருவமென்றே அவள் எப்போதும் நினைத்து வந்தாள். ஆயினும் றெரின்ஸ்குடும்பத்தவர்கள் கிழவரது கல்லறையிலிருந்து அதனைத்திருடிக் கொண்டு சென்ற போது அதிர்ச்சியடைந்ததுடன் மூர்க்கமான கோபத்தையும் வெளியிட்டாள். மிஸிஸ் அந்தச் சிலை மிகஅழகானது என்ற நினைப்புடன், கிழவரின் கல்லறைக்குச் சென்று அதனைப் பார்வையிட்டு வந்தாள் அக்குடும்பம் எஸ்ரெற்றிலிருந்து வெளியேறிய போது அச்சிலையும் அவர்களுடன் சென்றது. றெரின் அதனை உடைப்பதற்கு பாவித்த கோடாலி, சிலையின் காலடிக்கு சற்று மேலாக அதன் மேல் பட்டிருந்தது. அதனால் சிலையின் பாதங்கள் மட்டும் கல்லறையின் மேல் பதிந்துமிருந்தன. அச்சிலைக்கு ஈடாக வேறொரு சிலையை வைத்து விட மிஸிஸ் மக்கின்ரயரால் முடியவேயில்லை.

அவள் அழுதழுது ஓய்ந்த பின் பின்புறமாக இருந்த ஹொலுக்குள் சென்றாள். அது அடைக்கப் பட்டு இருள் சூழ்ந்ததாக இருந்தது. அத்துடன் ஒரு சிறிய கோயில் போல் அமைதியுடனிருந்தது. அங்கிருந்த நீதிபதியின் சுழல் நாற்காலியின் நுனியில் அமர்ந்து கொண்டாள். அவளது முழங்கைகள் அவரது மேசையில் பட்டுக் கொண்டிருந்தன. பழைய வங்கிப் புத்தகங்களும், பேரேடுகளும் அரைகுறையாக மூடிய நிலையில் இருந்தன. மேசையின் நடுப்பகுதியில் சிறிய கோயிலைப் போன்ற வெறுமையான பணப் பெட்டி ஒன்று இருந்தது. கிழவரின் மறைவுக்குப் பின் இந்தப் பகுதியை மட்டும், எந்தவித மாற்றங்களுக்கும் உட்படுத்தாமல் வைத்திருந்தாள். அங்கிருந்து கொண்டு தான் நீதிபதி தனது வியாபார விஷயங்களை பார்த்து வந்ததால், அந்த இடத்தைப் பரிசுத்தமாக பாவித்து, ஒரு ஞாபகச்சின்னம் போல் வைத்திருந்தாள். கதிரையின் சிறிய நகர்வு கூட பழுதடைந்த எலும்புகள் போடும் சத்தம் போலிருந்தது. அது அவர் கூறும் வறுமை நிலையைப் பிரதிபலிக்கும் ஒலியாக இருந்தது. அவரது முதன்மைக் கொள்கையாக, தானே உலகின் மிக வறுமையான மனிதன் என்று சொல்லிக் கொள்வதையே கொண்டிருந்தார். அதையே அவளும் பின்பற்றினாள். அவர் கூற்றும் உண்மை நிலையையே பிரதிபலித்தது. அவளது கடுமையாகத் தெரிந்த குறுகிய முகத்தால், வெறுமையான பணப்பெட்டியைப் பார்த்தாள். அவளை விட வறுமையான யாருமே உலகில் இல்லை எனறேஅவளுக்குத் தோன்றியது.

பொறுமையிழந்த நிலையில் தனது மேலாடைக்குக் கீழ் கைகளைக் கட்டிய படி நின்றிருந்தாள் மக்கின்ரயர். அவனது ரக்ரர் வயல் கரையோரமாகமெதுவாக முன்னேறிக் கொண்டிருந்தது. கையசைத்தால் அது தெரியக்கூடிய வகையில் ரக்ரர் வரும் வரை பொறுத்திருந்து விட்டு, இறங்கி வா, என்ற வகையில் கையசைத்தாள் மக்கின்ரயர். 'உன்னுடன் பேச வேண்டும்' எனக்கூறியபடி, நிழல் பரவியிருந்த அடர்ந்த மரங்கள் இருந்த பகுதிக்கு அவனை அழைத்துச் சென்றாள் மக்கின்ரயர். தொப்பியைக் கழற்றியபடி அவள் பின்னே சென்று கொண்டிருந்தவனது சிரிப்பு, அவள் அவனைத்திரும்பிப் பார்த்ததுடன் அகன்றது. சிலந்தியின் கால்கள் போல் தோன்றிய அவளது புருவங்கள், கெடுதியொன்றை அறிவிப்பது போல் ஒன்றுடனொன்று பொருந்தின. அவளது சிவந்த நெற்றியின் கீழே ஒரு நிலைக்குத்தான பள்ளமொன்று நெற்றியில் ஏற்பட்டு, அது மூக்கு நெற்றியுடன் இணையும் இடம் வரைசென்றது. தனது பையிலிருந்த மடிந்த புகைப்படத்தை எடுத்து, அவனிடம் கொடுத்தாள். ' நீ ஒன்றுமே அறியாத அப்பாவியான ஒரு சிறுமியை வரவழைத்து, அரப்பைத்தியமான இந்த துர்நாற்றம் வீசும் திருட்டு நீகிரோவிற்கு மணம் செய்து கொடுக்கப் போகிறாயே. எவ்வளவு கொடுர மானவன் நீ!' என்றாள் மக்கின்ரயர்.

அவன் மெல்லெனத் தோன்றிய புன்சிரிப்புடன்; இந்தப் புகைப்படம் எனது மனைவியின் தங்கையினுடையது. அவளது முதலாவது மத ஒன்று கூடலின் போது, அவளது 12வது வயதில் எடுத்தது. இப்போது அவளது வயது 16 என்றான்.

(தொடரும்....)

---

## படித்ததில் பிடித்தது



## வங்கி நினைப்பு:::

*வண்டுகள் உண்டு மகிழ பூக்களை பூத்துச்*
*சிரிக்கிறது செடிகள்.*

*உயிரினம் உண்டு மகிழ*
*நீர்தேடி, வேரோடி,*
*கனிகொடுத்து மகிழ்கிறது மரம்!*
*ஆறு சிலிர்த்து ஓடுகிறது*
*பூமி செழித்து சிரிப்பற்கு!*

*வானம் குளிர்ந்து பொழிகிறது*
*வயல் நிமிர்ந்து சிரிப்பதற்கு!*

*மனமிழகி பால் சுரக்கும் போது*
*உயிரில் பரவும் உன்னத இன்பத்தில்*
*உலகம் முழுதாய்ச் சிரிக்கின்றாள் அன்னை!*

*முகம் புதைத்து, காலுதைத்து*
*எழுச்சியில் சிரிக்கிறது குழந்தை!*

*இயற்கை முழுவதும் மகிழ்ந்து சிரிக்கிறதே*
*மகிழ்ச்சியை அள்ளிக் கொடுப்பதில் தானே!*

*மனிதன் மட்டும் தான் இயற்கையோடு*
*முரண்பட்டு நிற்கிறான்!*

*ஒன்றும் கொடாமல்*
*எல்லாம் பெற நினைக்கின்றான்!*

*கொடுக்கும் போது கூட "வாங்கலை"ப்பற்றி*
*வட்டியோடு நினைக்கிறான்!*

*தன்குஞ்சுக்கு ஒன்றென்றால்*
*வெறிநாயையும் எதிர்த்து நிற்கிறது கோழி!*
*தன் ஊன்சுருக்கி தீன்பொறுக்கி*
*ஊட்டுகிறது குஞ்சுக்கு!*
*தான் போட்ட தீனிக்காக- குஞ்சை*
*கூடுகட்டி தன்னைக் காக்கும்படி*
*எந்தக் கோழியும் கூக்குரலிட்டு*
*அழுததில்லை!*
*இந்தக் கோழியும் குஞ்சாய் இருந்தபோது*
*அதன் தாய்க்கோழியும் இப்படித்தான்*
*காத்தது!*

*தாழுண்ட நீரை தென்னை*
*தலையாலே தருவதுபோல்.*

*ஆனால், மனிதன் மட்டும் தான்*
*இயற்கையோடு முரண்பட்டு நிற்கிறான்!*

*வாழ்க்கையையும் சந்தைக்கு*
*ஓட்டிச் செல்லத்*
*தொடங்கியுள்ளார்கள்!*

*பிள்ளைக்கு சோறூட்டும் போதும்*
*'பின்னுக்கு உதவும்' என்று நம்புகிறான்!*

*புண்ணியம் கிடைக்குமென்றுதான்*
*பிச்சையே போடுகிறான்!*

*கோபுரம் கட்ட நிதி கொடுக்கிறான்*
*"கோடி இலாபம் கொடு" என்று*
*கும்பிட்டபடி!*

*சொந்த தேசம் பட்டுப்போனாலும்*
*தேகம் கெட்டு மோசம் போனாலும்*
*மரமாக, இயந்திரமனிதனாக (Robo)*
*பணம் காய்க்க பரதேசம் போகிறான்*
*பிள்ளை!*

*தொலைபேசியில் சம்பிரதாய*
*பேச்சுக்கள் பல மணிநேரம் பரிமாறப்படும்*

*இறுதிநேர நிமிசத்தில்*
*நிசமாவது இலட்சம் பற்றிய பேச்சே!*

*ஐந்து பிள்ளை பெற்றும்*
*இறுதிப் படுக்கையில்*

*நெஞ்சு தடவிக் கொடுக்க பிள்ளை இல்லை!*
*பெற்றவள் இறந்து போக தந்திபோகும்.*

*கொள்ளி வைக்க, கூலிக்கு ஆள்பிடிக்க*
*பிள்ளை 'தான்' அனுப்புவான். பிணம்*
*எரியும்!*

*உறவுகளுக்குள்ளும்*
*பெறுவது மட்டும் என்பதும்*

*கொடுக்கும் போதெல்லாம்*
*வாங்கலைப்பற்றிய வங்கி நினைப்பும்*

*மகிழ்ச்சியை நோக்கிய வாழ்வு*
*வழிதவறி துன்பத்துள் இழுத்துப் போகிறது!*

நன்றி – சுந்தரன்

---

குழந்தையின் சிரிப்பைக்கண்டு வெறுப்பவனிடம் எச்சரிக்கையாய் இரு. – ஜொஹன் லேவேட்டர்.

# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கியக் குடிமகனின் வாக்கு மூலம் - 07



அவரது நக்கலுக்கு ஆப்புப் போல நான் கேட்டேன்.

"நீங்கள் இந்தக் கடல் அனுபவத்தில் எப்பொழுதாவது அமெரிக்கர்களிடம் பிடிபட்டிருக்கிறீர்களா?"என்று.

*"ஏன் ஏன் கேட்கிறீர்கள் நானா பிடிபடுவேன் இந்த அமெரிக்கர்களிடம்."*

"மன்னிக்க வேணும் சும்மா ஒரு கேள்வியாகத்தான் கேட்டேன். இதற்காக உங்கள் மனம் புண்பட்டிருந்தால் அதற்கென்னை மன்னிக்கவேண்டும்" இந்த இடத்தில் நான் நாகரீகமாக நடந்து கொண்டேன்.

*''இல்லை... இல்லை... இல்லையில்லை.''*

என்று எனது மன்னிப்பை மிகவும் நட்போடு மறுத்தவர் சிரித்து விட்டுச் சொன்னார்.

*"ஏழு வருடங்களுக்கு முன் 1995ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரே ஒரு முறை பிடிபட்டேன். அதற்கு முன்னோ பின்னோ இன்றுவரை பிடிபட்டதில்லை. பத்து வருடத்திற்கு மேலாக ஒரே ஒரு முறைதான் பிடிபட்டேன் என்ற பெருமை எனக்கிருக்கிறது. நானொரு சிறந்த கப்பல் கப்டன் என்று இதனால்தான் பிரபல்யம் பெற்றேன்."*

இதைச் சொன்னபோது சேட்டுக் கொலரை இழுத்துவிடும் பெருமிதத்தோடு அவர் இருந்தார். எனக்குள்ளோ பல கேள்விகள் எழுந்தன. எதை முதலில் கேட்பது பிறகு கேட்பதென்று எனக்கு ஒரே தடுமாற்றமாக இருந்தது. கைதாகிய அவருடை அனுபவத்தை தொண்டைக்குள் விரல் விட்டு இழுத்தெடுத்துவிடும் நோக்கோடு நான் கேட்டேன்.

"பிடிபட்டு என்ன நடந்தது?"

*"என்ன ஒன்றும் நடக்கவில்லை. மூன்று மாதம் விசாரணை அது இது என்று உபத்திரவப்படுத்தி விட்டார்கள். பிறகு விட்டபோது மூன்று மாதச் சம்பளமும் தந்து விட்டார்கள."*

நான் எதிர்பார்த்ததொன்றும் அவரிடமிருந்து பதிலாக வரவில்லை. எனது கேள்வியில் தான் எங்கோ பிசகிருக்கவேண்டும். மீண்டும் தூண்டிலை எறிந்தேன்.

"கப்பல் சொந்தக்காரன் உங்களிடம் கப்பலைத் தந்ததால் தனது சரக்குப் பிடிபட்டுவிட்டதாகவோ உங்களது ஊழியர்கள் உங்களுடன் நின்றதால் தான் பிடிபட நேர்ந்தது என்றும் உங்களோடு குறைப்பட்டுக் கொள்ளவில்லையா."

*"அவங்களுக்கென்ன மூன்று மாதம் பிடிபட்டு நின்றதில் ஆறுமாதச் சம்பளத்தை அமெரிக்கன் கொடுத்து விட்டான். கப்பல் சொந்தக்காரனுக்கு நான் உழைத்துக் கொடுத்ததே பறிபோன எண்ணையோடு ஒப்பிட்டால் பலமடங்கு வரும். ஒரு தடவை ..ற்றிக் கொடுத்துவிட்டால் அந்தக் காசு அவனுக்கு வந்துவிட்டுப் போகிறது."* என்றார் ..கவும் அலட்சியமாக.



அவரது ..வாயைக் கிளறுவதில் தோற்றுப் போய் விட்டதாக நான் உணர்ந்தாலும் அதற்கொருவழி கண்டுபிடித்துவிட்டதான உற்சாகத்தில் நான் ஒரு அப்பாவியாகக் கேட்டேன் "எப்படி விளங்கவில்லை. எப்படி அது.... நீங்கள் சொல்வது விளங்கவில்லை."

*"கப்பலில் வேலை செய்பவர்களுக்கு நாங்கள் அவர்களின் பதவிக்கேற்ற சம்பளங்கள் கொடுப்போம். ஆனால் அமெரிக்கன் பிடித்து வைத்திருக்கும்போது அக்காலத்திற்குரிய சம்பளத்தை அவனே கொடுப்பான். அந்தச் சம்பளத்தை நிர்ணயிக்கும்போது அவன் சர்வதேச அளவில் கப்பல் பணியாளர்களின் பதவி நிலைக்கேற்ப வழங்கப்படும் சம்பளத்தைத்தான் எடுத்துக் கொள்வான். அது நாங்கள் வழங்கும் சம்பளத்திற்கு இரண்டுமடங்காக இருக்கிறது. மூன்று மாதம் மனைவிமாரைக் காணவில்லை என்பதைவிட அவங்களுக்கு வேறு என்ன நட்டம்"* என்று விட்டுச் சிரித்தார். மேலும் அவர் சொன்னபோது.



*" நீங்கள் பாருங்கள் கப்பல் சொந்தக்காரன் ஈராக்கில் எழுபது டொலருக்கு ஒரு டன் டீசலை வாங்குகிறான். அதைக் கொண்டு சென்று விற்கும் போது ஒரு டன் 200 தொடக்கம் 250 டொலரிற்கு விற்கிறான். 1000 டன் கப்பலில் குறைந்தது ஒரு முறைக்கு 13,0000 டொலர் இலாபமாக இருக்கிறது. செலவுகளையோ கப்பல் முதலீட்டில் தேய்மானத்தையோ வட்டியையோ கழித்தாலும் 100000 டொலரிற்குக் கிட்டவாக தேறிய இலாபம் கிடைக்கும். ஆனால் நீங்கள் பாருங்கள் ஒரு முறை பிடிபட்டால் 1000 டன் டீசலுக்கும் 70,000 டொலர்களும; செலவாகப் பத்தாயிரமோ, இருபதாயிரமோ கூட்டினாலும் ஒருமுறை பிடிபடும் நட்டம் ஒருமுறை வெற்றிகரமாக விற்கப்படும் இலாபத்திற்கு சமனானது. அப்படியென்றால் கப்பல் சொந்தக்காரனுக்கு இதில் என்ன நட்டமிருக்கிறது. என்ன விளங்குகிறதா இப்பொழுது."* என்றார் அவர்.

நான் அவர்சொன்ன கணக்கை எங்கள் ரூபாய்க்கு மாற்றி ஒரு முறை இலாபத்தையும் பத்துமுறை பத்தில் இருந்து நூறு முறைக்கான இலாபத்தையும் மனதில் கணிப்பிட்டவாறு அதிர்ச்சியடைந்து போய் இருந்தேன். அதன் பயனாய் எனக்குள் எழுந்த கேள்வி இது "ஒரு முறை போய்வர எவ்வளவு காலம் பிடிக்கும்" என்று கேட்டேன்.

*"2500 டன் பெரிய கப்பல் என்றால் மாதத்தில் ஒரு முறை போய் வருவோம். 500அல்லது 750 டன் என்றால் மாதத்தில் இரு முறை போய்வருவோம்."* என்று பதில் தந்தார் அவர்.

அப்படியானால் வருட இலாபத்தை சிறிய, பெரிய கப்பல்களில் கணக்கிட்டு நான் பார்த்தேன் விரும்பினால் நீங்களும் பாருங்களேன்.

ஆனால் அமெரிக்கக் கடற்படை பிற்காலத்தில் கடத்துகின்ற கப்பலையும் சேர்த்து பறிமுதல் செய்து விடுவதாக முன்னர் அவர் சொன்னாரே!

விட்டேனா நான் அதைப்பற்றியும் அவரிடம் கேட்டேன்.

பிரவீன்

(ஒரு வாரம் காத்திருக்க)

# நேர்நோக்கு

## அமைச்சுக்களைக் காப்பாற்ற தமிழர்மீது கெடுபிடி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அவசரகாலச்சட்டத்தையும் மீண்டும் அமுலுக்குக்கொண்டு வரவேண்டும் என சிங்கள இனவாதசக்திகள் மீண்டும் கூக்குரலிட ஆரம்பித்துள்ளன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் இராணுவத்துக்கும் பொலிசாருக்கும் தகவல் கொடுப்போர் மற்றும் புலனாய்வாளர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் தொடர்பாகவே இவர்கள் இவ்வாறு கூக்குரலிடுகின்றனர்.

இதேவேளை கொழும்பில் புலனாய்வுப்பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின் பொலிசாரும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தவேண்டும் எனக்கோரி வருகின்றனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத அதேவேளை, பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்காவிடினும் அதனை அமுல் படுத்துவதில்லை என்ற ஓர் இணக்கப்பாட்டிற்கு அரசாங்கம் வந்துள்ளது உண்மையே ஆயினும் அவசரகாலச்சட்டம் அமுலில் உள்ள வேளைகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற நடைமுறைகள் எப்பொழுதோ கடைப்பிடிக்க ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்பதையும் எவரும் மறுக்க முடியாது.

காவலரண்களில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் அடையாளஅட்டைப்பரிசோதனைகள், உடற்பரிசோதனைகள், சுற்றிவளைப்புத்தேடுதல்கள், விசாரணைகள் என்பன சாதாரண சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடியவையா? அரசியல் கட்சிகள் சனநாயக வழிக்குத் திரும்பியவர்கள் என்ற போர்வையில் இராணுவத்திற்குத்தகவல் கொடுப்போராகவும், உளவாளிகளாகவும் இயங்கிவந்தோர் கொலை செய்யப்பட்டதைச் சாட்டாகவைத்துக்கொண்டு இந்த நடவடிக்கைகள் எப்பொழுதோ தமிழர் தாயகப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

புலிகளின் கப்பல்களை கடற்படை மூழ்கடித்த போது பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் ஒப்புக் கொண்டவற்றை நிறைவேற்றாத நிலையில் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்ட பொழுது- புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கப் போகிறார்கள், பாதுகாப்பு உசார்நிலை, பலப்படுத்தல் என்று கூறிக்கொண்டு சோதனை நடவடிக்கைகள் இராணுவத்தினரால் நடத்தப்படுகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி புதிய காவலரண்கள் அமைக்கப்படு கின்றன. மண் அரண்கள் போடப்படுகின்றன.

கொழும்பில் தொடராக அரசியல்வாதிகள் கொல்லப்பட்ட போது அதுவும் சிறிலங்காவின் புலனாய்வுப் பணியகத்துக்கு முன்பாகவே பாதாள உலகக்குழுவினர்களால் மாகாண அமைச்சர் ஒருவர் கொல்லப்பட்டபோது துடித்தெழாத ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் இப்பொழுது பாரிய சுற்றிவளைப்புகளுக்கும், கைதுகளுக்கும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளது. பெரும்பாலும் சுற்றிவளைப்புக்கு உட்படுவது தமிழர் குடியிருப்புப்பகுதிகளாகவும; விசாரணைக்குள்ளாவதும் கைதாவதும் பெரும்பாலும் தமிழர்களாகவுமே உள்ளனர். இவர்கள் கைதாவதற்கும் விசாரணைக்கு உள்ளாவதற்கும் உறுதியான ஆதாரங்கள் இருக்க மாட்டாது என எவருமே துணிந்து கூறலாம். ஏனெனில் அவ்வாறு ஆதரமிருப்பின் எழுந்தமானமான சுற்றிவளைப்புகளுக்கும், விசாரணைகளுக்கும், கைதுகளுக்கும் அவசியமிருக்க முடியாது. நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்டோரை கைதுசெய்துவிடமுடியும். இக்கைதுகள் இடம்பெற்ற இடங்களில் கைதுசெய்யப்பட்டோர் மோதலில் ஈடுபட்டதாகவோ அல்லது பொலிசாரைத்தாக்கமுற்பட்டதாகவோ குறைந்த பட்சம் தப்பி ஓட முற்பட்டதாகவோ கூடத்தகவல்கள் இல்லை.

எனவே பொலிசார் அமைத்த திடீர் சோதனைச் சாவடிகளும், ரோந்துகளும், சுற்றி வளைப்புகளும், விசாரணைகளும், அப்பாவிகளைக் கைதுசெய்யவே உதவியிருக்குமென நம்பலாம். அவர்களிடம் அடையாள அட்டை இல்லாமை கொழும்பில் தங்கியிருப்பதற்கான காரணங்களைச் சரிவரக் கூறாமை போன்ற காரணங்கள்கூட இக்கைதுகளுக்குக் காரணங்களாக அமையலாம். அல்லது கைது செய்தபின் கைதுக்கான காரணங்கள் கூடத் தேடப்படலாம்.

இவ்வாறான கைதுகளே பயங்கரவாதச்சட்டமும் அவசர காலச்சட்டமும் கடந்த காலங்களில் அமுலில் இருந்த வேளைகளில் பெரும்பாலும் நடந்தேறின் இப்பொழுதும் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

சிறிலங்காவின் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள மனித உரிமைகள் பாதுகாப்பும் சாதாரண சட்டநடைமுறைகளும் இக்கைதுகளை அனுமதிக்கின்றனவா? அவ்வாறாயின் அவசரகாலச்சட்டமும் பயங்கரவாதத்தடைச்சட்டமும் ஏன்? என்ற கேள்வி எழுகின்றது.

இது ஒருபுறமிருக்க, பாதாள உலகத்வரைத் தேடியும், புலிகளின் "பிஸ்ரல் குறூப்பை" தேடியும் இரு பிரிவுகளாகத்தேடுதல் நடக்கிறதாம். பலர்கைது செய்யப்பட்டிருக்கிறார்களாம். பாதாள உலகத்தவர் பலர்-கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்கள், தேடப்பட்டவர்கள் எனப்பலர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்களாம். பலர் சரணடைந்துள்ளனராம் என்று கூடப்பொலிஸ் அறிக்கைகள் கூறுகின்றன.

அத்துடன் நாட்டின் பாதுகாப்பில் எதுவித பலவீனமும் இல்லை. எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க படைகள் தயார்நிலையில் உள்ளனஎன பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன கூறி வருகின்றார்.

இப்பொழுது நடைபெறும் சுற்றிவளைப்புத் தேடுதல்களும் இவ்வாறான அறிக்கைகளும் உள்துறை அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் சந்திரிகா அம்மையாரிடமிருந்து பாதுகாக்கும் நோக்கம் கொண்டவையே என்பது வெளிப்படையாகும். அதற்காக அவசரகாலவிதிகளையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் கூட அரசாங்கம் கொண்டு வரமுயலக் கூடும்.

ஆனால் அது சந்திரிகாவிடமிருந்து இவ் அமைச்சுக்களைப்பாதுகாக்க உதவப்போவதில்லை. மாறாக ஆட்சியை முழுமையாகவே சந்திரிகாவிடம் பறிகொடுப்பதிலேயே முடியும். உண்மையில் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டுமானால் சமாதான நடவடிக்கைகள் குலைந்துவிடாது காப்பதே ஐக்கிய தேசியமுன்னணியிடம் உள்ள ஒரேவழி

வேலவன்

கிணறு வற்றும்வரை, தண்ணீரின் மதிப்பை நாம் உணருவதில்லை. - தாமஸ்புல்லர்

# பொருண்மிய வாசகம்

கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ அவர்கள் 1991ம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி உதிரிப்பாகங்கள் மற்றும் உயர்தொழில் நுட்பத்திற்கான 6வது தேசிய சம்மேளனத்தின் போது ஆற்றிய உரையில் ஒரு சிறுபகுதி இங்கே தரப்படுகிறது.

அரசியல் விடுதலையுடன் பொருண்மிய விடுதலையும் நோக்கிச் செயற்படும் எங்களுக்கும் இக்கருத்துக்கள் பொருந்தி வருகின்றன அல்லவா?

"........ நமக்கு வருங்காலத்தில் என்ன தேவையோ அதை நாமே நம்கையால், நம் வேர்வையையும் இரத்தத்தையும் சிந்தி நம் அறிவுத்திறமையால் வார்த்தெடுப்போம். நம்மால் பல விசையங்களை செய்ய முடியும். நம்மால் வெகுதூரம் போக முடியும். ஏனெனில் பிறரிடம் இல்லாதது நம்மிடம் இருக்கிறது. அதுதான் நாம் சமுதாயத்தில் இதுவரை சேர்த்துள்ள திறமை வளம், அறிவுச்சொத்து. நம்மிடம் இருப்பவைகளைக் கொண்டு நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் நாம் சாதிக்கலாம்.

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

வேளாண்மையில்ஈடுபட ஒரு மக்கள் கூட்டம் போவதைப் பார்க்கும் போது, கட்டடவேலையில் ஈடுபட ஒருமக்கள்கூட்டம் போவதைப் பார்க்கும்போது, ஒரு நாளைக்கு 10,11,12,13,14 மணிநேரம் மக்கள் வேலை செய்வதைப் பார்க்கும் போது நமக்கு இது சுலபமானதாகவே தெரிகிறது. இப்படி வேலை செய்தால் நம்மிடம் இருக்கும் வளத்தை வைத்துக்கொண்டு நாம் வெகுதூரம் போகலாம்.

நமக்கு எவரும் எதையும் தரவேண்டியது இல்லை. பிறரின் ரொட்டியைச் சார்ந்து வாழும் காலம் நமக்கு ஒரு போதும் வராது. அதுவுமே அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கும் காலம் வரவே வராது. மிச்சம் மீதியை பொறுக்குவது சிலருக்குப் பழக்கமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் நம்மக்கள் நமது புரட்சியாளர்கள் ஒருபோதும் இந்த ஈனத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மக்களையும் கட்சியையும்பிரதிநிதித்துவப் படுத்துகிற நமக்குத் தெரியும் இப்போராட்டத்தில் நமது பங்கு என்ன என்பது"

# அருச்சுனா பால் பதனிடல் நிலையம்

அருச்சுனா பால் கொள்வனவு விற்பனை நிலையம் என 1994 இல் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டம் 1996ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கணும் வியாபித்த நிலையில் பதின்மூன்று கிளை நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு இயங்கியது. ஒவ்வொரு நிலையத்திலும் நாளாந்தம் சராசரியாக 200லீற்றர் பாலுக்கு மேல் கொள்வனவு செய்யப்பட்டு.

(1) பாலாக
(2) ஆடைநீக்கிய பாலாக
(3) சுவையூட்டிய பாலாக
(4) யோக்கற்றாக ஈற்றில்
(5) நெய்யாக

விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையத்தினூடாக தினசரி 2500 லீற்றருக்கு மேல் பால்கொள்வனவு செய்யப்பட்ட வகையில் பெருமளவிலான கால்நடை வளர்ப்போர் பயனடைந்ததுடன் புதியவர்கள் பலரும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடவும் செய்தார்கள்.

ஆனால், துரதிஷ்டவசமாக 1996 இல் ஆக்கிரமிப்பு இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட சத்ஜெய, ரணகோச, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைகள் மக்களது இடம் பெயர்விலான துன்பியல் நிகழ்வுகளிலும் அதனுடனிணைந்த கால்நடை அழிப்பிலும் சென்று முடிந்தன. இதனால் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கிய கொடுமைகள் சொல்லுந்தரமன்று.

சுதந்திர தாயகம் அமைய வேண்டுமெனில் அதற்கான தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் எதிர்பார்க்கப்பட்டவையே. இது அரசியல் விழிப்புணர்ச்சி பெற்ற எம்மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டிய தொன்றல்ல.

ஆனால்,

2002ஆம் ஆண்டில் கைச்சாத்தாகிய புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதனுடனிணைந்த இயல்பு வாழ்க்கை நிலையும் மீண்டும் எமது செயற்திட்டங்களை இயக்க வைக்க ஆரம்பித்ததில், அருச்சுனா பால் கொள்வளவு விற்பனை நிலையத்தின் ஒரு கிளை அருச்சுனா பால் பதனிடல் நிலையம் புதுக்குடியிருப்பில் புதுமெருகுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையத்தினூடே தினமும் 75 லீற்றர் பால் கொள்வனவு செய்யப்பட்டு,

(01) நெய் பிரிக்கப்பட்டு
(02) தொற்று நீக்கப்பட்டு
அ. கொக்கோ
ஆ. வனிலா
இ. கோப்பி

போன்றவற்றால் சுவையூட்டி போத்தலில் அடைக்கப்பட்டு பெரும் கிராக்கியுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

நிலையத்தினால் கொள்வனவு செய்யப்படும் 125 லீற்றர். பாலின் சுவையூட்டலுக்கென 75லீற்றர் பால் பாவனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் 50 லீற்றர் பால் நேரடியாக விற்பனையாகின்றது.

இந்நிலையத்தின் மூலம் தற்போது 12 கால்நடை வளர்ப்போர் பயனடைகிறார்கள். இத்தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ந. இராசாதங்கவேல்

# தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பு

முல்லை மாவட்டத்தில் கால்நடைக்கு தொண்டை அடைப்பான் நோய் வருகின்ற ஆடி, ஆவணி மாதங்களில் ஏற்பட்டு அழிவை ஏற்படுத்தும் ஆபத்தில் இருந்து முன்கூட்டியே கால்நடைகளைக் காப்பாற்றுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இந்த நோய் பெரும்பாலும் ஆடி, ஆவணி மாதங்களில் அதாவது மழைக்கு முன்னர் 4 மாத வயதுடைய கன்றுகளிலிருந்து முதிர் பருவம் வரை வயது வந்த மாடுகளுக்கு ஏற்படுகின்றது. இந்நோய் பற்றீரியாவினால் தாக்கப்படுகின்றது. இந்நோய் கண்டு 24 மணி நேரத்துக்குள் இறந்து விடுகின்றன. நோய்க்கான அறிகுறி தொண்டை முன்னங்கால் பகுதிவீங்கிப் புடைத்திருக்கும். சுவாசிப்பதற்கு அவஸ்தைப்படும். உடலின் உஷ்ணம் 108பாகை பரனைட்டாக உயர்ந்திருக்கும். வாயால் நீர் வடியும், குருதி வெளியேறும்.

இந்நோய் முல்லை மாவட்டத்தில் பெரும்பாலும் அம்பலவன் பொக்கணை, நந்திக்கடல் வெளி, கேப்பாப் புலவு, வற்றாப்பளை, நீராவிப்பிட்டி , உடுப்புக்குளம், தண்ணிமுறிப்பு, வாவெட்டி ஆகிய பிரதேசங்களிலேயே முதலில் ஆரம்பித்துப் படிப்படியாக மற்றய கிராமங்களுக்கு பரவுகின்றது என அனுபவரீதியாக அறியப்பட்டுள்ளது.

எனவே முல்லை மாவட்டத்திலுள்ள கால் நடை சொந்தக்காரர்கள் உங்கள் பகுதி கால்நடை வைத்தியர்களை அணுகி மேற்படி நோய்க்கான தடுப்பூசிகளை ஏற்றி உங்கள் கால் நடைகளைக் காப்பாற்றிக்கொள்ளுமாறு முல்லை மாவட்ட பொ.மே நிறுவனச் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.



# பொறுக்கி எடுத்த பூக்கள்

## ஒரு தமிழ் வாழ்த்து...

ஆயர் கைப் புல்லாங்குழலில்
அமைந்தெழுந்து
தாயர் கை வளையலிலும்
சலங்கையிலும் குடிபுகுந்து
கோயில் மணி ஓசையிலே
கொஞ்சித்
தவழ்ந்து வந்து சேயின்
மணிவாய்ச்
சிறகை விரித்தெழுந்து
பூஞ்சிட்டுப் போல்வான் புறந்தே
பறந்து வந்து
அப்பனுக்கு கணக்காகி
ஆச்சியர்க்கு பாட்டாகி
ஒப்பரிய தாயர்க்கு ஒப்பாரிக்
கலையாகி
தப்பிப் பிறந்து வந்த
தங்கமென....
தாய் உரைத்த
இப்பாவிக் கவி மகனை
ஈன்றெடுத்த செந்தமிழே....!
நீயில்லையேல் நானில்லை
நிலமில்லையேல் பயிரில்லை
தாய் உனக்கோர் வாழ்த்துத்
தருகின்றேன்
நீ வாழ்க.....!

கவிஞர் கண்ணதாசன்-

## ஒரு தத்துவம்

அவர் மிகப்பெரிய கிரேக்க தத்துவஞானி டயோனிஸிஸ். ஒரு நாள் அவர் ஒரு பொதியுள் இருந்த எலும்புகளை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். அப்போது அவரருகே வந்த மாவீரரான அலெக்ஸாண்டர் "ஐயா அந்த எலும்புகளை ஏன் அப்படி உற்றுப் பார்க்கிறீர்கள் அப்படி எதனை அதற்குள் தேடுகிறீர்கள் ' -என்றான். சக்கரவர்த்தியை நிமிர் ந்து பார்க்காமலே தத்துவஞானி கூறினார்:- "இந்த எலும்புக்கும் உன்னுடைய தந்தையின் எலும்புக்கும் என்ன வித்தியாசம் என்று பார்க்கிறேன்.... ஒன்றுமே தென்படவில்லை....."

## ஒரு குறள்

சுற்றும் உலகினை சுற்றியபின் நான் கற்றேன்
சுற்றினிற் சுற்றாமை நன்று.....

- இளையராஜா

## ஒரு துணுக்கு

**ஒருவர்:-**

உனக்கென்ன ஐஞ்சும் பெடியங்கள் பஞ்சபாண்டவரைப் போல்...... அஞ்சும் வெளிநாட்டிலை வேறு.....

**மற்றவர்:-**

பஞ்சபாண்டவர்களுக்கும் என்ரை பிள்ளையளுக்கும் ஒரு வித்தியாசம். அந்த அஞ்சு பேரும் கடைசியிலை அஞ்சு வீட்டென்றாலும் தா என்று நின்றாங்கள்...... இவர்கள் இருந்த ஒரே வீட்டையும் வித்திட்டு வெளி நாட்டுக்குப் போட்டினம்

-ஜோக்கிரட்டீஸ்

## ஒரு பொன் மொழி

தன்னையே தான் புகழ்ந்து கொள்பவன் ஒரு முட்டாள்
தன்னையே தான் இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்

-டானீஷ்பழமொழி

## ஒரு வார்த்தை

சுடுகாட்டுக்குக் கொண்டுசெல்லப்படும் போதுதான்- அன்றைய தினத்தில்தான் நான் எழுதுவதை நிறுத்துவேன். அப்போதும் கூட புதைகுழிக்குள் எனது கால்கள் தான் முதலில் நுழையும் பின்பு தான் கைகள் நுழையும்....


குஷ்வந்த்சிங்

## ஒரு குறும்பா

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்த மின்றி வந்தவனின்
கைத்தலத்திற் பத்து முத்தை
பொத்தி வைத்தான்;போனான் முச்சூலன்

- மகாகவி





# அனுமார் பதில்கள்

● **அன்பின் அனுமாரே சிவனொளி பாதமலையைத் தூக்கி சந்திரிகாவின் தலையில் போட முடியுமா?**

இ.சாதுரியன்,
கீரிமலை.

ஏற்கனவேஅவர் கதிர்காம பாதமலைக்குக் கீழல்லவா இருக்கிறார்.

● **வாழ்க்கையில் இதுவரை காதலிக்காத ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

க. நகுலேஸ்வரன்,
முள்ளியவளை.

விட்டு விடுங்களேன்! அவர்களும் என்னைப்போல தப்பி வாழட்டுமே!

● **அரசியல் இலாபத்திற்காக மனித உயிர்களுடன் விளையாடும் அரசியல்வாதிகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மி. பகலவன்,
மாங்குளம்.

இலாபங்களிற்காக 'சா'பங்களை வாங்கும் ஆசாமிகள் என நினைக்கிறேன்.

● **அனுமார் முன்பு ஒரு காலத்தில் பெண்கள் மீற்றரில் உடுப்புத் தைத்துப் போட்டார்கள். இப்போது சென்ரிமீற்றறில் தைத்துப் போடுகிறார்களே?**

விழி,
வட்டக்கச்சி.

மில்லிமீற்றறில் தைப்பதற்கு மிசின் இல்லைப்போலும்.

● **ஹாய் அனுமார் நலமா? கொத்மலை நீர்மின் திட்டப்பிரச்சினை தொடர்பாக மலையக மக்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

எம்.எஸ். தூரன்,
முள்ளியவளை.

தன்னலமற்ற தலைமைத்துவம் ஒன்றை அவர்கள் தேட வேண்டும்.

● **ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாததை அமெரிக்கா மட்டும் ஏன் பெரிதுபடுத்துகிறது.**

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

பொறியில் தேங்காயைச் சுட்டு வைத்துக் காத்திருக்க புலி மாங்காயைச்சப்பிக்கொண்டு மரத்தில் இருந்தால் ஆத்திரம் வரும் தானே.

● **மோட்டார் சைக்கில்களில் வேகமாக ஓடும் ஆண்களுக்கு அறிவுரை கூறுவீர்களா?**

மதி,
வட்டக்கச்சி.

வாழ்க்கையெனும் மைதானத்தில் விரைவில் இலக்கை அடைவதற்கு ஏற்றவழி அதுதான்

● **அனுமாருக்கு போர் நிறுத்தத்தை இராணுவத் தரப்புகள் மீறுகிறார்கள். இது எந்தக் கட்டத்தில் முடிவடையும்.**

ஐயாத்துரை சாந்தன்,
இலுப்பக்கடவை மன்னார்.

அவர்களின் மறுதரப்பு யுத்தநிறுத்தத்தை மீறுகிற வரைக்கும்.

● **பொங்கு தமிழ் பாத்திரா அனுமாரே?**

ச. கரன்,
வவுனியா.

பார்த்தேன் பார்த்தேன்
ஊரெல்லாம் கூடி
தேர் இழுத்த அழகைப்
பார்த்தேன்.

● **காதல் - கல்யாணம் இரண்டுக்கும் வித்தியாசம் என்ன?**

விதுஷா,
கள்ளியங்காடு.

இணையத்தில் பார்த்த கதையொன்று ஞாபகத்தில்.

தனது சீடன் ஒருவனை அழைத்து ஒரு அழகான் றோஜாத் தோட்டத்தைக் காட்டி குரு சொன்னார் இத்தோட்டத்தில் உள்ள பாதைவழியே சென்று மிக அழகான பூவொன்றைப் பறித்துவா ஆனால் சென்ற வழியால் திரும்பி வரக்கூடாது என்றார். சற்று நேரத்தில் திரும்பி வந்த சீடன் கையில் ஒரு அழகற்ற றோஜாப்பூ ஒன்றை கொண்டு வந்தான்.

ஏன் அழகான பூவைப் பறிக்க முடியவில்லையா? எனக் கேட்ட குருவுக்கு தான் காணும் பூவுக்கு அடுத்தபூ அழகாக இருக்கும் என நினைத்து கடைசியில் இதனையே பறிக்க முடிந்தது என்றான்.

மீண்டும் குரு அந்த சீடனுக்கு சூரியகாந்தித் தோட்டம் ஒன்றைக் காட்டி அழகான மலர் ஒன்றைப் பறித்துவா ஆனால் செல்லும் வழியால் திரும்பக் கூடாது என்றார். சற்று நேரத்தில் திரும்பிய சீடன் கையில் ஒரு மட்டுமட்டான சூரியகாந்திப் பூ ஒன்றை வைத்திருந்தான்.

மீண்டும் ஏன் உன்னால் அழகானபூவை பறிக்க முடியவில்லை என்றதற்கு சீடன் இதனை விட்டால் மற்றயது எப்படியோ என்ற பயத்தில் இதனையே பறித்தேன் என்றான்.

முன்னையது காதல். பின்னையது கல்யாணம் என நினைக்கிறேன்.

● **பொங்குதமிழை வானிலிருந்து பார்த்து ரசித்தார்களாமே இராணுவத் தளபதிகள்?**

கலை.
வவுனியா.

அப்படியா! வானிலிருந்து பார்த்தார்களோ என்னவோ! ஆனால் வாய் பிளந்து பார்த்தார்கள்.

● **அனுமாரே! வவுனியாவில் இந்திய இராணுவம் முகாமிடுகிறது. யாழில் அமெரிக்கா காரியாலயம் திறக்கிறது. இதெல்லாம் எதைக் காட்டுகிறது.**

கே.என்.குருபரன்,
கருநாட்டுக்கேணி.

போர் நடந்த பூமியில் வல்லூறுகள் வட்டமிடுவது வழமைதானே.

---

**(2ஆம் பக்கத் தொடர்ச்சி)**

என மிகமிக முக்கிய பிரமுகர்களும் (VVIP)முக்கிய பிரமுகர்களும் (VIP) சம்மந்தப்பட்டிருப்பதால் அவர்கள் சுற்றிவளைக்கப்படுவதில்லை, சோதனையிடப்படுவதில்லை, கைதுசெய்யப்படுவதில்லை, காலவரையறையின்றி சிறையில் அடைக்கப்படுவதில்லை, அவர்கள் மீதான வழக்கும் நடத்தப்படுவதில்லை.......

ஆளும் கட்சியினரால் கைது செய்யப்படுவோர், எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்ததும் 'கௌரவமாக' விடுதலை செய்யப்பட்டும் விடுவார்கள். சிறிலங்காவில் மாறிமாறி ஆட்சிப் பீடம் ஏறும் அரசியல் தலைமைகளுக்கு இவர்களெல்லாம் சந்தேகப் பேர்வழிகளோ, குற்றவாளிகளோ அல்ல....

ஆனால் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் தமிழ் மக்கள் சந்தேகப் பேர்வழிகள், பயங்கரவாதிகள், குற்றவாளிகளாக்கப் படவேண்டியவர்கள்..... இந்த நடைமுறை சிறிலங்காவின் அரசியல் கலாச்சாரமாகிவிட்டது.

சமாதான சூழலிலும், புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையிலும், நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து கொண்டு, அதனை ஏற்று உடன்பாட்டின் சரத்துக்களை அமுல் செய்யப் பின்னடித்துக்கொண்டு, பாதுகாப்பு கெடுபிடிகளை அதிகரித்து மக்களின் கவனத்தை திசைதிருப்பி, எந்த நிலைமையையும் சமாளிக்க முப்படைகளும் தயார் என அறிக்கை விட்டபடி.... சுற்றிவளைப்பு முற்றுகை நிலைக்குள் தமிழ் மக்களை வைத்துக் கொண்டு - ' சமாதானம் தொடரும் ' என 'ஒலிவ்' இலையை அசைத்து சங்கீதம் பாடுவதில் அர்த்தமில்லை.

அமெரிக்க ஆர்மிரேஜின் மிரட்டலும், சர்வதேச சமூகத்தின் அழுத்தமும் 'இதே வழியில் நீங்களும் சமாதானம் பாடுங்கள்' என்று தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் நிர்ப்பந்திப்பதிலும் அர்த்தம் இல்லை.....

அழுத்தங்களுக்கும் - நெருக்குவாரங்களுக்கும் பணிந்து ஆறுகள் பின் நோக்கிப் பாய்வது கிடையாது ....

இதனை சம்பந்தப்பட்ட அனைவரும் உணர்வு பூர்வமாக புரிந்து கொள்வதே இன்றைய காலத்தின் அவசியமாகும்....

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –25



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –25

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................


பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –24



பெ. கலையரசி,
ஆயப்பகுதி,
புளியங்குளம்.

### பரிசுக்குரிய வரிகள்

சிறுவர் உரிமைகள்
சிறிலங்காவின் மேன்மைமிகு
சிறைச்சாலைகளில்
சிறப்பாகப் பேணப்படுகின்றன.

### பாராட்டுக்குரிய வரிகள்

*அதிகம் வீடுகளில் இன்று இது சகஜம்*
*அம்மாக்களும் வேலைக்குப் போவதால்*

றாகவி,
கொக்குவில்.

*நல்ல கதை சொல்லி*
*உன்னை தேற்ற முடியாது*
*நீகதியற்று போனாயே -*
*தெரியாதா உனக்கு...?*

கலைத்தேன்,
விசுவமடு.

*கம்பிகளுக்குப் பின்னால் நீ மட்டுமல்ல*
*உன் உறவுகளும் தான் இப்போது.*
*புரிந்துணர்வின் கேள்விக்குறிகளாய்!*

ராஜன்,
வவுனியா.

*பிஞ்சு வயதில் கொஞ்சி விளையாடி -*
*புட்டிப் பால்குடித்து - புரண்டு விளையாடும் உனக்கு*
*கம்பி வேலிகள் என்ன சிறைவாசம்*
*பாவத்தின் தண்டனைதான் மானிடத்தின்வருகை*

சி. நவநந்தினி,
ஸ்கந்தபுரம்.

*ஓ...இளையவனே!*
*கம்பிக் கூட்டுக்குள் அடைந்து விட்டால்*
*உன் குழப்படியை நிறுத்தி விடலாம் - என்று*
*எண்ணிவிட்டாளா உனதம்மா...*

ர. அச்சுதன்,
புதுக்குடியிருப்பு.

*தமிழ்மொழி பேசியதால் உன்*
*தாய்க்குத் தான் தண்டனையென்றால்*
*எந்த மொழியுமே உச்சரிக்கத் தெரியாத*
*உந்தனுக்குமா சிறைத்தண்டனை?*

செ. நிஷந்தி,
68/1,திருவையாறு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 04 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.